

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 23

திருவள்ளுவர் ஆண்டு 1980 விலை அணு 5
தைத் திங்கள் 17-ம் நாள் 30—1—50

பொன்னி

மாதம் இருமுறை

தந்தி: "பொன்னி" — 4146, கீழராஜவீதி
த. பெ. எண். 39. — புதுக்கோட்டை

பல இடங்களிலிருந்தும் 'பொன்னி' கிடைப்பதில்லையென்று கடிதங்கள் வந்த வண்ணமிருக்கின்றன. எனவே நம் அன்பர்கள் சந்தாதாராகிவிடுவதே இக்குறையைப் போக்குமென்று குறிப்பிடுவதோடு அவர்கள் ஒவ்வொரு இதழையும் நிச்சயம் பெறுவதற்கு அது ஒன்றே சிறந்த வழியென்பதையும் எடுக்காட்ட விரும்புகிறோம்.

பொறுப்பாளர்

இங்கே கத்தரிக்கவும்

....

பொறுப்பாளர்
"பொன்னி"
புதுக்கோட்டை

அன்புடையீர்,

என்னை ஒரு சந்தாதாராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். அதற்குரிய தொகை ரூ. 7/— ரூ. 3–12–0 ஒரு ஆண்டு / ஆறுமாதச் சந்தாவிற்காக செக் / மணியார்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

பெயர் ....

முகவரி ____________________

அஞ்சல் நிலையம் ____________________

மாவட்டம் ....



குடியரசு வேடிக்கை

டில்லியில் காங்கிரஸ் கட்சியினர் வகுத்த அரசியல் கடந்த ஜனவரி இருபத்தாறாம் நாள் நடைமுறைக்கு வந்துவிட்டது; அன்று முதல் புதிய அரசியலமைப்பின் கீழ் இந்தியக் குடியரசு நிறுவப்பட்டு விட்டது.

இவ்விழாநாளை இந்தியா முற்றும் ஒரே ஆர்ப்பாட்டத்துடன் காங்கிரஸ் கட்சியினரும், அரசினரும கொண்டாடியிருக்கின்றனர். தீபாலங்காரமும், இரவை மின்விளக்குகளால் பகலாக்கிய விந்தையும், வாணவேடிக்கையும், காந்தியார்பட ஊர்வலமும், கொடியேற்று விழாவும், அரசியல் அறிக்கை ஆங்காங்கு படிக்கப்பட்ட சடங்கும் மிக மிக ஆரவாரத்துடன் நடைபெற்றிருக்கின்றன. கோயில்களில்பிரார்த்தனையும், நூல்நூற்பு யக்ஞங்களும், படத்திறப்பு விழாக்களும், ஆவேசமான சொற்பொழிவுகளும், களியாட்டமும் அன்று கோலோச்சின. நாடெங்கும் வெளியாகும் பத்திரிகைகள் குடியரசு மலர் வெளியிட்டு அரசினர் இட்ட அமளியில் தங்கள் பங்கையும் நிறைவேற்றிக் கொண்டன. இந்திய வானொலி நிலையங்கள் இவ்விழாவுக்கெனச் சிறப்பான ஏற்பாடுகள் செய்து, ஆடம்பர விழாவின் செய்திகள் நாலா பக்கமும் பரவ உதவி செய்தன.

"குடியரசு அமையும் நாளன்றோ, அதனால் தான் இத்தனை கொண்டாட்டம்" என்று அப்பாவிகள் கூறுவர். ஆனால் மக்கள் விழாவாக இக்கொண்டாட்டம் அமையவில்லையென்பது செய்திகளைக் கூர்ந்து நோக்குவார்க்கு நன்கு புலனாகும். "மந்திரி பேசினார், கலெக்டர் கொடியேற்றினார், தாசில்தார் படத்திறப்புவிழா ஆற்றினார்" என்று செய்திகள் இருக்குமே ஒழிய மக்களிடத்துச் செல்வாக்குப் பெற்றுள்ள தலைவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டதாகச் செய்திகளைக் காணவே முடியாது. இச்சமயம் நமக்கு முன்பு வெள்ளையர் போர் முடிந்து நடத்திய வெற்றிவிழா நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. அதைப்போன்ற அதிகாரிகள் விழாவாகவே இக்குடியரசு விழா நிகழ்ந்து விட்டிருக்கிறது.

"எல்லோருக்கும் ஓட்டுரிமை, சுதந்திரம் காப்பாற்றப்படுகிறது, நீதி வழங்கப்படுகிறது" என்றெல்லாம் பறை சாற்றப்பட்டு அமுலுக்கு வந்துள்ள இந்த அமைப்பில் மக்கள் மகிழ்ச்சி

யோடு கலந்து கொள்ளாமலிருப்பதேன் என்று யாரும் கேட்கத் தான் செய்வர். காங்கிரஸ் கட்சியைத் தவிர்த்து இந்தியாவிலுள்ளமற்ற எல்லாக் கட்சிகளும் இத்திட்டத்தைமாற்றியமைக்க வேண்டுமென்று உறுதி பூண்டிருக்கின்றன; அவ்வாறே அறிவித்துமிருக்கின்றன. குடியரசு நாள் வைபவங்களில் பெரும்பான்மையான மக்கள் கலந்துகொள்ளாததோடு மட்டுமல்ல, ஆங்காங்கு எதிர்ப்பு ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. குடியரசு நாளுக்கு முன்னும் பின்னும் பல ஊர்களில் பல தோழர்களைக் கைது செய்து பாதுகாப்பில் வைக்கவேண்டிய அவசியம் அரசினருக்கு நேர்ந்திருக்கிறது. ஆங்காங்கு கூட்டங்களுக்கு 144 விதித்தலும், போலீஸ் தடியடிப் பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோகமும், குடியரசு விழாவை அமைதியாகக் கொண்டாடுவதற்காக அரசினர் கையாள வேண்டி வந்திருக்கிறது. ரிசர்வ் போலீஸ் படையினர் பாதுகாப்பில் குடியரசு வைபவத்தை நிகழ்த்த வேண்டிய அவசியம் பல ஊர்களில் அரசினருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இத்தனை அதிருப்திக்கும் காரணமென்ன? மக்கள் மகிழ வேண்டிய நாளில் ஏன் இத்தனை சங்கடங்கள் நிகழ வேண்டும்?

காங்கிரஸ்கட்சியாரின் ஏகபோக உரிமை இந்த அரசியலமைப்பு. குடியரசு என்ற பெயரில் அது உலவவிடப்பட்டிருந்தாலும், ஒரு தனிக்கட்சியின் ஆதிக்கத்துக்கும், முதலாளித்வ, பாஸிஸ வெறியர்களின் ஏவலுக்கும் கட்டுப்பட்டிருக்கும் விதத்திலேயே அது உருவாகியிருக்கிறது. இந்தியாவிலுள்ள பல்வேறு இனத்தவரின் கோரிக்கைகள் இத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படவில்லை; முற்போக்குக் கட்சிகளின் எண்ணங்களுக்கு இடமளிக்கப்படவில்லை. எனவே இத்திட்டம் அமுலுக்கு வரும் நாளில் மக்கள் மன்றத்தில் நாம மகிழ்ச்சியைக் காண முடியாமற் போயிற்று.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் கட்சியின் பொதுச் செயலாளர் அண்ணாத்துரை அவர்கள் அதிருப்திக்குரிய நாளென இதை அறிவித்துவிட்டார்; இத்திட்டத்தை மாற்றியமைக்கும் முயற்சியில் நாம் தலைப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். அன்னார், சென்னை மாநாட்டில் ஆற்றியுள்ள சொற்பொழிவும் நமக்கு நல்வழியைக் காட்டுவதாயமைந்திருக்கிறது.

இந்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்ற வேண்டிய பணி குறித்து ஒரு திட்டமான முடிவு ஏற்பட்டாக வேண்டும். நாட்டில் நமக்கு ஆதரவான சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய பிரசாரத்திற்கு நல்வரவேற்பிருக்கிறது. நாம் பேசும் கொள்கைகளை ஏற்க எண்ணற்ற மக்கள் முன்வருகின்றனர். இந்த நிலையை நமக்கு ஆக்கம் தரும் முன்னணியாக மாற்றியமைக்க வேண்டும். ஆங்காங்கு சிதறுண்டு கிடக்கும் சக்திகளை ஒன்று சேர்த்து நாம உரத்த குரலில் கூறிவரும் திட்டம் நிறைவேற வழிகாண வேண்டும்.

காங்கிரஸுக்கு எதிர்ப்பு சக்திகள் நாள்தோறும் பெருகி வருகின்றன என்பது உண்மையே! ஆனால் காங்கிரஸைப் போன்று அமைப்பிலும் பலத்திலும் சிறந்து விளங்கும் கட்சி இன்னும் உருவாகவில்லை; இந்தச் சூழ்நிலைதான் காங்கிரஸுக்கு இன்னும் ஆதிக்கத்தைத் தந்து வருகிறது என்றாலும் காங்கிரஸுக்குள்ளேயே பலத்த போட்டா போட்டிகள் விரைவில் நிகழத்தான் போகின்றன. அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தென்படுகின்றன.

ஆந்திரக் காங்கிரஸ்காரர்களின் கோரிக்கையான தனி ஆந்திர மாகாண அமைப்பு சிறிதும் நியாயமின்றி டில்லி மேலிடத்தாரால் தேக்கிவைக்கப்பட்டிருக்கிறது. பிரிவினை செய்து கொள்பவர்களுக்குள் சமாதான நிலை இருந்தும் மத்திய சர்க்கார் நொண்டிச் சாக்குகளைக் கூறிப் பிரிவினையைக் காலவரையறையின்றி ஒத்திப்போட்டிருக்கிறது. இது தென்னாட்டுப் பிரச்னையிடத்து டில்லி காட்டும் அலட்சிய மனோபாவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு.

மற்றொன்று கர்னாடக காங்கிரஸ்காரர்களின் கோரிக்கை. இக்கோரிக்கையை முன்வைத்துக் கர்னாடகத்திலிருந்து சட்ட சபை உறுப்பினர்களான எல்லோரும், ராஜினாமாச் செய்ய முன் வந்தும், மேலிடம் சற்றும் ஆடாமல் அசையாமல் பிரச்னையை ஒத்திப் போட்டு விட்டது. இந்நிகழ்ச்சியும் டில்லி தென்னாட்டு மக்களிடத்துக் கொண்டுள்ள அலட்சிய மனோபாவத்தின் விளைவேயாகும்.

வடநாடு—தென்னாடு என்ற பிரிவினையுணர்ச்சி தழைப்பதற்கு இந்நிகழ்ச்சிகளே போதுமானவை. காங்கிரஸ் கட்சி டில்லியில் ஆட்சி செலுத்துகிறது; அதே சமயத்தில் தென்னாட்டிலுள்ள காங்கிரஸ்காரர்களின் ஒருமித்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இது வேடிக்கையான நிகழ்ச்சியல்ல; விபரீத விளைவைத்தான் தந்து தீரும். ஆந்திரகேசரிகளும் நிஜலிங்கப்பாக்களும் காமராஜர்களும் என்றுமே காந்தி அடிகளின் 'சத்திய நெறி'க்குக் கட்டுபபட்டுச் சாந்தசீலர்களாக, டில்லி இடும் ஏவலை நிறைவேற்றும் எடுபிடிகளாக இருந்து வரமாட்டார்களென்பதுமட்டும் திண்ணம். நிலைமை மாறும்; அப்போது நமக்கு ஆதரவான சூழ்நிலையைக் காண முடியும்.

புது அரசியல் திட்டம் வாணவேடிக்கையல்ல, பார்த்துக் களிக்க, பிறகு மறந்துவிட. இன்று அதிகாரத்திலுள்ளவர்கள், அது நடைமுறையில் வருவதை அமுல் செய்ய வேண்டியவர்கள்; அதிலுள்ள சிக்கல்களை அனுபவிக்க வேண்டியவர்கள். மாகாணங்கள், மத்திய சர்க்காரின் குறிப்புக்குக் கீழ்ப்படியும் வகையிலேயே அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. உத்தமர் காந்தியார் கனவு கண்ட பஞ்சாயத்து ராஜ்யத்திற்குப் பதிலாக, ஒரே இடத்தில் அதிகாரத்தைக் குவித்துவிட்டிருக்கிற ராமராஜ்யம்தான் இப்போது உருப்பெற்றிருக்கிறது. மாகாணங்களின் நிலை இப்போதே பற்றாக்குறை — துண்டு விழும் வரவு செலவுத் திட்டம் சர்வசாதாரணமான காட்சி. புதுத் திட்டமோ மேலும்

மேலும் மாகாணங்களின் வளத்தைக் குறைத்துவிடும். வருவாய் அதிகாரம் இரண்டுமே டில்லியிலும், மேற்படிதலும் நடத்துவித்தலும் மாகாணங்களுக்கும் தரப்பட்டிருக்கின்றன. இதன்படி ஒரு இடத்தில் பணம் குவியவும் மற்றொரு இடத்தில் பஞ்சப்பாட்டுப் பாடவும் வழி ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இந்த நிலை நீடிக்க முடியாது, இயற்கை நியதி இதை மாற்றியே தீரும். மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் தகராறுகள் வரவரப் பெருகும்; மத்திய சர்க்கார் தயவு வேண்டுமென்றால் மக்கள் தயவு இருக்காது; மக்கள் தயவு வேண்டுமென்றால், மத்திய சர்க்காருடன் வீம்பு செய்தே ஆகவேண்டும். இந்த நிலை பிறந்தே தீரும்.

அப்போதெல்லாம் வடநாடு — தென்னாடு தனித்தனி அமைப்பு என்ற எண்ணம் வலுப்பெறாமலா போகும்?

புதுக் குடியரசு அமைப்பு அமுலுக்கு வந்துவிட்டதில் ஒருவருக்குப் பெருத்த லாபம்! மற்றொருவருக்குப் பெருத்த நஷ்டம்! ஆம். ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டாக்டர் ராஜேந்திர பிரசாத், கடைசிக் கவர்னர் ஜெனரலாயிருந்து விலகிவிட்ட டாக்டர் ராஜகோபாலாச்சாரியார் இருவரையும் தான் குறிப்பிடுகிறோம். மற்றவர்களுக்குத்தான் லாபமும் இல்லை, நஷ்டமுமில்லையே!

அன்பர் ஆச்சாரியார் மேலும் ஜனாதிபதியாக நீடிப்பாரென்று பலர் கனவு கண்டுகொண்டிருந்தனர்; டில்லி ஆட்சியில் ஆதிக்கம்கொண்டுள்ள இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள் அந்த நிலைக்கு இடங்கொடுப்பார்களா? இந்தி தெரியாத மனிதரை, இந்தி ராஜ்யத்திற்கு ஜனாதிபதியாக ஏற்கச் சம்மதிப்பார்களா? அவர்கள் செல்வாக்குப் பலித்தது. ஆச்சாரியாருக்கு விடை அளித்தனர்; பிரசாத்திற்குச் சிம்மாசனத்தை அளித்தனர் பண்டிதரும் சர்தாரும். பீகாரைச் சேர்ந்த டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் மட்டுமே ஜனாதிபதியாக முடிந்தது என்பதையும், தென்னாட்டைச் சேர்ந்த ஆச்சாரியார் நிலைக்க முடியாமற் போனதையும் நாம் மிகச் சாதாரண நிகழ்ச்சிகளாகத் தள்ளிவிட முடியாது. அவற்றின் விளைவுகளை நாம் காணத்தான் போகிறோம். அப்போது தென்னாட்டுப் பிரிவினையுணர்ச்சி வலுப்பெற்றிருப்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

நமது நோக்கம் தென்னாடு தனி நாடாகவேண்டுமென்பது; வடநாட்டுடன் இணைந்த, அல்லது அவர்களின் அடிமைகளாக ஆக்கப்பட்ட குடியரசு அமைப்பு நமக்கு அதிருப்தியையே அளிக்கிறது; நம் ஆதரவை அந்தத் திட்டம் பெறவில்லை.

நாம் விரும்பும் திராவிடத் திருநாடு எப்படியும் அமைந்தாக வேண்டும்; அப்போது தான் நம் நாட்டு மக்களுக்கு வாழ்வுண்டு. அதற்கான வழி வகைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் வகுத்துத்தர முடியும்; ஆம். தென்னாட்டு மக்களின் இதய ஒலியை அது ஒன்று தான் பிரதிபலிக்க முடியும்.

..பொது மேடை..

'பொன்னி' தந்த மலர்பற்றி நமக்குக் கிடைத்து வரும் கருத்துரைகள் உண்மையிலேயே உற்சாகத்தை ஊட்டு வனவாய் அமைந்துள்ளன. சில கடிதங்களை மட்டும் வெளியிட்டுள்ளோம்.

திருச்சி
25-1-50

முழு வெற்றி

பொங்கல் மலரில் பெரும் பகுதி படித்தேன். மலர் இம்முறை மிக மிகச் சிறந்த முறையில் தயாரித்திருக்கிறீர்கள். உள்ளே உள்ள மூவர்ணப் படங்கள் உயிரோவியங்கள். கண்ணனின் 'கண் வலை' மற்ற எல்லாப்படங்களும் சிறந்துவிளங்குகின்றன. கவிதைகள், கதைகள், கட்டுரைகள்... திருவிகவின் இயற்கைக் கழகம், டாக்டர் மு. வ. வின் தமிழ் நிலைக் கட்டுரை, புரட்சிக் கவிஞரின் கவிதை இன்னும் பலப் பல நல்ல அம்சங்கள் நிறைந்துள்ளன. தங்களுக்கு இது முழுவெற்றி!

அகிலன்.

○●○

மதுரை
24-1-50

புகழ் ஏணியின் உச்சியில்

இரண்டு நாட்களுக்கு முன் "மலர், வரும் வரும் என்று எண்ணி ஏமாந்தேன். தவருமல் ஒரு மலர் அனுப்பித்தரவும்" என்று முடங்கல் எழுதியிருந்தேன். மலர் கிடைக்க வேண்டிய நாளில் கிடைக்காததின் நிமித்தம், மலர் மேல் கொண்ட அன்பு, ஆர்வம் அவ்விதம்மூ எழுதத்தூண்டிற்று. வெறும்புகழ்ச்சியல்ல உண்மை. மலர் கிட்டியதும் "சேரதாண்டவக்காட்சி" கண்ணைக் கவர்ந்தது. கருத்தையும் ஈர்த்தது. மலரின் இதழைத் திருப்பியதும் புரட்சிக் கவிஞரின் பொங்கல் வாழ்த்தும். முகப்புப் படமும் இன்பத்தை அளித்தன! அறிஞரேறு அண்ணாவின் "அந்த நாடகம்" என்ற கட்டுரையைப் படித்ததும் "போர்வாள்" நாடகத்திற்குத் தடை உத்தரவு விதித்த விசித்திரக் காங்கிரஸ் சர்க்காரை ஜார் ஆட்சிக்கு ஒப்பிடவேண்டும் என்று எண்ணினேன். இனிமைதரும், படிக்கப் படிக்கத் தெவிட்டாத செந்தமிழில் தமிழ்ப் பெரியாரின் "இயற்கைக் கழகம்" சிந்தனைக்கு விருந்தாக அமைந்தது. கழகப் பேச்சாளரின் புகைப்படங்களைக் கண்டதும் உள்ளம் உவகை கொண்டது. "மதக் கோட்டையை முற்றுகையிட்ட மாவீரன்" என்ற தலைப்பில் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியின் எளிய வாழ்க்கையையும், அவர் ஆற்றிய பணியையும் படித்ததும் என்னையு மறியாமல் கண்ணீர்த் திவலைகள் என் முகவாய்க் கட்டையை நனைத்தன. "தப்பிவிட்டார்கள்" என்ற கதையை எழுதிய தோழர் கருணாநிதி அவர்கள் திரை மறைவில் நடப்பதை வெட்ட வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து உல்லாச புரியினரின் காமக்களியாட்டங்களைக் கண்முன் நிறுத்தி விட்டார். 'ஐங்குருநூறு' 'குறுந்தொகை' இவைகளிலிருந்துஎடுக்கப் பட்ட பாட்டும், அதன் விளக்கமும், சித்திரப்படங்களும் பண்டைத்தமிழரின் வாழ்வை நினைவூட்டின. ஒரே மூச்சாக மலர் கிட்டிய அன்றே படித்து முடித்தேன். பொதுவாகச் சொல்ல வேண்டுமானல் இவ்வாண்டு பொங்கல் மலர்களிலே "பொன்னி" நல்லாள் புகழ் ஏணியின் உச்சியில் ஏறிவிட்டிருள் என்றே சொல்ல வேண்டும். பெரும் முயற்சி எடுத்து மலரை

வெளியிட்டிருக்கிறீர்கள்என்பதுமலரைக் காணும்போதே தெரிகிறது. தங்கள் முயற்சி வெல்க. வாழ்க பொன்னி! வாழ்க அவள் தொண்டு!

உடுமலை கா. பழனிச்சாமி

○●○

கூடலூர்
25-1-50

உவகையின் உறைவிடம்

பொங்கலன்றே பொன்னி பொங்கல் மலராணங்கும் பொன்னுடை உடுத்திப் 'பொற்சிலை' யெனப் பொலிவுடன் பொங்கல் வாழ்த்துக் கூற வருவாள், என்ற என் எண்ணத்திற்கு எதிராக எட்டு நாட்கள் எங்கோ என்னிடம் கூறாமல் ஓடி ஒளிந்து கொண்ட பிறகு ஊர்ப்புற ஊஞ்சலை உயர்த்தி உயர்த்தி ஆடும் குன்றுயர் தோளினளையும், கோமளவல்லியையும், முகப்பிலே தாங்கி என்மடியிலே தவழ்ந்து விளையாடவந்தபோது உள்ள படியே உள்ளம் உடையாவிட்டாலும், 'சிறுகிறல்' ஏற்பட்டிருந்தது மட்டும் எவரும் மறுக்கமுடியாத உண்மை. இந்நிலை எனக்கு மட்டுமல்ல, நான் சார்ந்த திராவிட இனத்தோழர்கள் பலருக்குமுண்டு. 'கீறலை' மாற்றும் மருந்து மலரிலேயே கிடைக்கப் பெற்று மகிழ்ந்தேன்! அறிவுக்களஞ்சியம் நம் தளபதி அண்ணா அவர்களின் 'அந்த நாடகமு'ம், புதுவைக் குயில்-பாரதிதாசனாரின் வாழ்த்துரையும், அஞ்சா நெஞ்சர் அழகிரியாரைப் பற்றிச் சிற்றரசின் பேனா நடனமும் பிறந்தமேனியர், காட்டாற்றின் மேலே கட்டாத பாலம், அழகின் சிரிப்பு, நீரருந்தும் உழவர் செல்வங்கள், உழைத்து விட்டு உடன் குளிக்கும் உத்தமத் தோழர்கள், போன்ற புகைப்பட அமைப்புக்களும், ஓவியர் கண்ணன் தன் கைத்திறன் காட்டி, நமது இணையற்ற கவிஞரின் 'ஒன்பது சுவை'யை ஒப்பின்றி, உயிரூட்டிக் காட்டியிருக்கும் காட்சி, அன்பர் அழகப்பரின் அழகின் சிரிப்புக்களான, குறுந்தொகைக் கவிதைக்குக் கண்கவர் காதற் சித்திரங்களும், என் உள்ளத்தை உவகையின் உறைவிட மாக்கிவிட்டன என்று எழுதினால், எதிராக இருக்காது உண்மைக்கு. மலர் விலை ரூ ஐந்து என்றாலும் தடைகூறார் தன்மானத் தமிழர்! வாழ்க, பொன்னி! வளர்க தமிழ்த்தொண்டு

க. கூடலரசன்

○●○

திருநெல்வேலி
23-1-50

உச்சத்திலும் உச்சம்

மலர் வர இத்தனை நாட்களா? துடிக்கவைத்து விட்டீர்களே!...... மலரைத் தொட்டதும் ஏற்படுகின்ற வழவழப்பு என்னை ஒரு பெருமூச்சு விடச் செய்து விட்டது. அட்டைப் படம் தொலைவிலிருந்து பார்க்க மிக அழகாயிருக்கிறது. கவியரசருடைய பொங்கல் வாழ்த்தில் இனிமையிருக்கிற தென்றும், அண்ணாவின் 'அந்த நாடகம்' நம் நாட்டின் நிலையை நினைவு படுத்துகிற தென்றும் சொல்லவா வேண்டும்? திரு. வி. க. வின் தீந்தமிழ் இனிப்பிலும் இனிப்பானது. எல்லாக் கதைகளும் கவிதைகளுமே மனதைக் கவர்ந்து விட்டன. அலங்காரமான தமிழை அலங்கோலப்

நன்றி

தைப்பொங்கல் நன்னாளில் எங்கட்கு வாழ்த்துரைகள் அனுப்பிய பெருமக்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் மகிழ்ச்சியையும் உளங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

முருகு சுப்பிரமணியன்
அரு. பெரியண்ணன்

படுத்தும் நிலையை நீக்க, தாங்கள் தரும் அறிவுரையை இளைஞர்களாகிய நாங்கள் மெச்சுகிறோம்; கைகொடுக்கிறோம். சொல்லின் செல்வர்களைக் காணும் பொழுது எந்தச் சுயமரியாதைக்காரனும் பூரிப்பும் பெருமிதமும் அடையாமலிருக்க மாட்டான். மறைந்த மாவீரர், தளபதி அழகிரியின் படம் மலருக்குத் திலகமாக விளங்குகிறது. பல ஓவியர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்திருப்பது பாராட்டத் தக்கது. கலைகளின் கதம்பமாக மலர் மணம் வீசுகிறது. இது அறிவுக் களஞ்சியம் மட்டுமல்ல; கலைக் களஞ்சியமும் கூட. கலைக் கண்கொண்டு மட்டும் பார்த்தாலுமே, இந்த ஆண்டில் ஏனைய தீபாவளி மலர்களைப் படுக்கவைத்து விட்டது. மலரைக் கையிலேந்தி, வெளியே புறப்பட்டால் பீடு நடை தானகவே உண்டாகிறது. 'வணக்கம்' என்ற பகுதி அமைக்கப் பட்டிருக்கும் இடம் ஒரு நல்ல புதுமுறை. இது போலவே நமது அடுத்த மலரில், அளவிலும், தோற்றத்திலும், தொகுப்பிலும், நமக்குகந்த வேறு புதுமுறைகளைக் கையாள விரும்புகிறேன். மொத்தத்தில், மலர் உச்சத்திலும் உச்சம்!

திருவரங்கன்

○●○

சென்னை
24-1-50

அபாரம்

பொங்கல் மலர் கிடைக்கப் பெற்றேன். நன்றி! சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷம் பல மடங்கு மேல். ஒரே வரியில் சொல்கிறேன்- இந்த வருஷம் பொன்னி பொங்கல் மலர் அட்டைப் படத்தைத் தவிர மற்றதெல்லாம் அபாரம்!

அன்பன்,

தமிழ்வாணன்

○●○

புதுச்சேரி
24-1-50

பல்சுவைப்பரிசு

கங்கைநதி பூவுலகிற்கு வருதற்காகப் பகீரதன் கடுந்தவம் புரிந்ததை நம்பவேண்டாம். ஆனால், பொன்னி மலர் என்ற கலையருவிக்காக நான் தவம் புரிந்ததை நம்பித்தான் ஆகவேண்டும் நீங்கள். கடைசியாக வந்து சேர்ந்தது. மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. புரட்டினேன். பொங்கல் வாழ்த்துப் போயிற்று. திரு. அண்ணாதுரையின் கட்டுரையைப் படித்தேன். "அந்தநாடகம்" சார் ஆட்சிக் கொடுமையைச் சித்தரித்தது. அதனை நமது "சுயராச்சிய மந்திரிகள்" படித்துவிட்டால்... அப்போதே அவர்களின் நாற்காலி ...காலியாகத்தான் செய்யும். அங்ஙனம் அவர்கள் அமைச்சர் பதவியை விட்டிறங்கிவிட்டால் இதோ 'இயற்கைக்கழகம்' இருக்கிறது. அன்பர்களே! இதிற் சேருங்கள். அமைதியும் அன்பும் சூழ்ந்த அத்தக் கழகத்தில் உங்கட்குத் தொல்லையான சேதி ஏதும் இல்லை என்கிறார் தமிழ்ப் பெரியார். "நம்ம சர்க்கார்" செய்த இரண்டொரு நல்ல செய்திகளில் ஒன்று நீதி நிர்வாகப் பிரிவினை. இதை நமக்குப் புரியச் செய்வதற்கு முன்னாள் அமைச்சர் முத்தையாவைத் தவிர வேறு யாரால் முடியும்? இனிய தமிழ் நடையிலே கோவைகிழார் தரும் சீர்திருத்த மருந்து சர்க்கரைப் பாகில் கசப்பு மருந்தாக இருக்கிறது. சுவையும் பலனும் நல்லன. எதிர்பார்த்ததும் எதிர்பாராதவையும் மிக அருமையான கொள்கை விளக்கக் கட்டுரை. தமக்கே உரித்தான நடையில் சிந்தனைக்கு வேலை தருகிறார் மு. வ. 'பிழை நீக்க எழுவீர் என்று முருகு அவர்கள் அழைப்பது "வாழைபழங்கட்கும்' எழுச்சியூட்டுவது. தமிழநாட்டில் தேவையான முதல இயக்கத்தைப் பற்றிப் பொங்கலன்று நினைவூட்டியது பொருத்தமே. இளைஞர் கூட்டம் இதனைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்காது. டாக்டர் சிதம்பர

ஞர் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரையும் அன்பழகனின் ஆராய்ச்சிக் கட்டுரையும் சிறந்தகருத்துரைக் கோவை. தமிழினிமை, முதலிய கட்டுரைகள் உணர்வைத் தட்டிவிடுவன. உள்ளமுருக்கும் சரிதத்தைச் சொல்லி இளைஞரின் எழுச்சி வீணையை மிழற்றுகிறார் சிற்றரசு அவர்கள்! முத்தமிழின் இன்றைய நிலை விளக்கப்பட்ட கட்டுரைகள் ஏ. கே. வேலன் முதலியோருடையவை. அருமையான கதைகட்கு மு. க., டி. கே. சீ., தில்லைவில்லாளன். தே. நாராயணன்......நீண்ட பட்டியல். ஆனால் சலிப்புத்தராத விருந்து. கவிதைகளா? முதல்தரமானவை! நகைச்சுவைக் குவியல் ஆங்காங்கே! அழகின் சிரிப்பு அழகிய போட்டோத் துணுக்குகளாக. "சார். இவர்தான்"...என்ற இழுப்பான அறிமுகப்படலம் இனி தி. மு கழகப் பேச்சாளர்களைப் பற்றித் தேவையே இல்லை பொன்னி மலரிலே கண்டுவிட்டதால்! வண்ணப் படக் குவியல் இதோ: ஒட்டாரவாதம்புரியும் ஒரு தமிழ்மகள் முகப்புப் படமாக! தொடர்ந்து, நின்னே போலும், கண்வலை, அந்த நாட்கள் ஆகியன மயங்குதற்குரியன. புதிய இலக்கியம் வகுத்தார் கவிஞர். அதனைப் புதுபெருகுடன் காட்டுகிறது பொன்னி. உயரிய படம் ஒன்பது சுவை விளக்கம். அழகிரியின் படம் சொல்லுகிறது "வளம் நிறைந்த திராவிடம் 'தகர டப்பா' வாகக் காட்சியளிக்கிறது! "பண்டைத் தமிழ"னைப் பற்றிக்காலம் கடத்துகிறாயே தோழனே!"என்று-. சிந்தித்து, செயலாற்றத் தூண்டுவது அவரின் உருவம்.

முடிவாக,

எல்லையிலாத் தொல்லை பல கடந்து வந்தஇந்தமலர் பரந்துகிடக்கும்திராவிடத்துக்குப் பல்சுவைப்பரிசு;படிக்கப் படிக்கப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத சுவைப்புதையல்!தமிழ் வெறியூட்டும் டானிக்!! வெல்க முருகு- பெரியண்ணன் முயற்சி! வாழிய பொன்னி!

சு. மன்னர் மன்னன்

அனந்தப்பூர்
26-1-50

பிழைநீக்க எழுவீர்!

பொன்னி மலர் வழக்கம்போல் சிறந்திருந்தது, ஆனால் சென்ற ஆண்டு மலரைவிடச் சிறப்புப் பெறவில்லை. எனினும் இவ்வாண்டு வெற்றி பொன்னி அன்பர் தம் அறிவுக்குப் பெரிதும் பயன் படும் வெற்றியாய் அமைந்ததே போற்றுதற்குரிய தாகும். பொன்னிடை மணிகளென மிளிர்ந்த கட்டுரைகளைத் தான் கூறுகிறேன். அவற்றிலும் முதல் ஐந்தாறு கட்டுரைகள் தமிழினிமை கொஞ்சுவதாக, தமிழுரம் பெருக்குவதாக,தொல்பெருமை நாடி ஓடும் தேனாறு; காணீர் என வியக்கத் தருந்தவாறு அவ்வளவு உயர்ந்தனவாக விருந்தன. மலரிலேயே அன்பர் மனத்தையெல்லாம் ஈர்த்த ஒன்றும் உண்டு. பிழை நீக்க எழ வேண்டினீரே அவ் வேண்டுகோள்தான். தமிழுக்காக என்ன ஆக்க வேலை செய்திருக்கின்றீர் எனக் கேட்பவர்க்கு மாற்றம் தரும் முறையில், தாழ்ந்து செல்லும் தமிழ் கண்டு வேதனை கொள்வோர் உள்ளம் குளிரும் வகையில், நெறி எது எனத் தெளியாது, புயல் போலச் சீர்திருத்தம் பேசிவரும் இளைஞர்களுக்கு ஒழுங்கான பெருவழியினை வகுத்துத்தரும் பெற்றியில் மிகமிகச் சிறந்திருக்கின்றது தங்கள் கட்டுரை. அடுத்த இதழிலேயே. இவ்வமைப்பை உருவாக்கும் திட்டங்கள் அனைத்தையும் எதிர்பார்க்கின்றேன். தங்களது முயற்சி நனி நன்று. ஆதலின் அதனை இன்றே செய்க!

சு. கி. ரா

○●○

ஆ. முத்துப்பட்டணம்
25-1-50

அத்தான்பால் அன்பு

"கண்டதும் காதல் கொண்டதும் மோகம்" என்றமுது மொழிப்படி கண்டேன் மலரை! கொண்டேன் பித்து! பின் என்ன? பிடித்தது பித்து பொன்னியைப் பிரிய

விடாமல்! பொன்னி பொங்கல் மலர் பொலிவுடன் அமைந்து பொங்கல் திருநாளில் பொலிவுற்று விளங்குகிறது மலருக்குச் சிகரமாக எடுத்துக் காட்டும் முதன்மைப் பகுதிகளில் ஓவியம் ஒன்று. ஓவியங்கள் எல்லாம் அழகுடன் அமைந்திருக்கின்றன. அந்த ஓவியங்களுள் ஓவியர் கண்ணனால் தீட்டப் பட்ட ஓவியங்கள் எல்லாம் சிறந்திருப்பினும் அவற்றுள் 'கண்வலை' எனும் தலைப்புள்ளது தனியாகக் குறிப்பிடத்தக்கது. மலராசிரியர் எழுதிய கட்டுரை மலரின் புகழுக்கு மற்றும் ஒரு எடுத்துக்காட்டு. அறிஞர் அண்ணாவின் 'அந்த நாடகம்' அழகுடன் அமைந்ததோடு அனைவர் மனத்தையும் அளவுக்கு மீறிக் கவர்கிறது. 'அத்தான்' எழுதிய 'அருமையான பொங்கலு'ம் இரண்டாவதாக எழுதிய 'இருப்புப் பெட்டகமும்' ஈடு இணையற்றுவிளங்குகின்றன. அவை சிறுவர்களுக்கெனச் சிறந்த முறையில் இருப்பதால் அத்தானின்மேல் அவர்களுக்குத் தனி அன்பு ஏற்படும் என்பது உறுதியே.

ஏ. எல். ஏ ஆர். எம். ஆர்.

○●○

ஏருவூர்-செங்கலடி
இலங்கை
24-1-50

வெற்றிதரும்

தங்களின் 'பொன்னி' பொங்கல் மலரை எடுத்துக் கொண்டேன். கையிலேந்திய பொன்னி மலரைக் கீழேவைக்க மனமில்லாது படித்துப் பயன்பெறுகிறேன். இம்முறை மூன்றாவது மலராய் மிளிரும் பொன்னிமலர் இன்னும் பல ஆண்டுகள் மலர்ந்து திராவிட மக்களுக்கு வெற்றியைத் தருமென்பது திண்ணம்.

எஸ். வேலுப்பிள்ளை

○●○

தவிர்க்கமுடியாத தாமதம்

பொன்னி பொங்கல் மலர் பொங்கலன்று வெளிவரவில்லையென்று நம் நண்பர்கள் தீட்டியுள்ள காரசாரமான கடிதங்கள் நம் மேசையில் குவிந்திருக்கின்றன. ஒருவாரம், பத்து நாள் கழித்தே எல்லா ஊர்களிலும் மலர் கிடைத்திருக்கின்றது. இந்த அளவுக்குப் பொறுமை காட்டிப் 'பொன்னி' மலரை வரவேற்றுள்ள எண்ணற்ற தோழர்களுக்கு நம் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் ஆர்வமும் ஒத்துழைப்பும் நம்மைப்பரவசமடையச் செய்கின்றன.

தாமதத்திற்குக் காரணங்களை விரித்துக் கூறுவது ஒழுங்கல்ல; பலதடைகள்! இடையூர்கள்! ஒவ்வொரு கட்டத்திலும்இடர்ப்பாடுகள்!சூழ்நிலை, சந்தர்ப்பம், இரண்டும் சதி செய்தன என்றால் கூட மிகையாகாது. எதிர்பாராதவிதம் நேர்ந்த இத் தாமதத்தை மறந்து மன்னிக்கும்படி சம்பந்தப்பட்ட அனைவரையும் வேண்டுகிறோம்

* * *

அடுத்த இதழ்

25–1–50 அன்று வரவேண்டிய இந்த இதழ் மிகத் தாமதமாகவே வந்திருக்கிறது. எனவே 10–2–50 இதழ் நிறுத்தப்பட்டு 25—2—50 அன்றுதான் அடுத்த இதழ் வெளிவரும். பலபுதிய பகுதிகளுடன் நான்காவது ஆண்டின் துவக்க இதழாக அது வெளியிடப் பெறும். வாசகர்களும் விற்பனையாளர்களும் இம்மாறுதல்களைக் குறித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

அண்ணாமலைநகர்
20-1-50

புகழ் மணம்

பொன்னி பொங்கல்மலர் தனது புதுமணம் பரப்பிக் கொண்டே வந்தது! பிரித்தேன். படித்தேன். படித்துக் கொண்டே யிருந்தேன். ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டு மணியைப்பார்த்தேன். மணி பதினொன்றாகியிருந்தது. மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இந்த ஆண்டில் பொன்னி பூரண பொலிவும் அறிவும் கொண்டு மிளிர்கின்றாள். ஆண்டுகள் செல்லச் செல்ல அவளது அழகும் அறிவு பரப்பும் திறமையும் வளர்ந்து கொண்டே போகின்றன. பொன்னியின் இதயத்தில் கதைகளையும் கட்டுரைகளையும் நிரப்பியும், அழகிய ஆடைகளை அணிவித்து அழகு செய்தும் நமக்குத் தந்துள்ள அதன் எழுத்தாளர்களுக்கும் அறிஞர்களுக்கும், உரிமையாளர்களுக்கும், ஓவியர்களுக்கும் இது ஒரு வெற்றி என்று தான் கூறவேண்டும்.

எழிலன்

○●○

முத்திக்குளம்
21-1-50

தங்கப் பேழை

முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் ஒரு முழுமதிபோல- வண்ண மலர்க்கூட்டத்தில் புள்ளினத்தில், புனலில், வானத்தில் எங்கெங்கும் தன்னழகைச் சிந்திச் சின்னவிழிததும்பும் வகையில் "கண்டெடுத்தேன் உயிர்ப் புதையல்" என்ற முறையிலே தங்கள் பொன்னியைப் பெற்றேன். அண்ணாவின் அறிவுரை; கவிஞரின் கருத்தோவியம்; கருணாநிதியின் கற்பனைப் பின்னல் ஆகியவைகளை முத்தும், பவளமும், வைரமும், தங்கப் பேழையில் இட்டுத் தருவது போல் ஏனைய அறிஞர்களின் கருத்தோவியங்களையும் கிரட்டி கண்ணன், நீலன், அழகப்பன், ஜெகன்னாத் போன்றாரின் கைவண்ண ஓவியங்களுடன் ஒப்பிலாததொரு மணியாக வெளியிட்டுத் திராவிடத்திற்குப் பொன் தொண்டு புரிந்திருக்கிறீர்கள்

து. அ. அண்ணாமலை

○●○

திண்டுக்கல்
25-1-50

கலைப்பரிசு

கலையழகு நிரம்பிய பொங்கல் பொன்னி மலர் வாங்கினேன். கருத்தை அள்ளும் கவிதைகள் — கட்டுரைகள், கதைகள் மலையைக் காவிய ஊற்றாக்கிவிட்டன. வண்ணச் சித்திரங்கள் கண்களை மயங்க வைக்கின்றன. பொங்கலின் புனித நாளில் பொன்னி மலர் ஒரு கலைப் பரிசு.

காவியதாசன்

○●○

மேல்வேளூர்
21-1 50

அற்புதம்

உங்கள் "பொன்னி" மலர் கிடைத்தது; அருமை; அற்புதம். அபூர்வம்.

ச. செயராமன்

திண்டிவனம்
22-1-50

வழி மேல் விழி

பொங்கலுடையுடன் பொன்னியைக் காண ஏழு நாட்கள் வழி மேல் விழிவைத்துக்காத்திருந்தேன். ஏழாம் நாள் காலே அஞ்சலகம்செல்லும் வழியிலேயே பொன்னி விற்பனேயாளரைக் கண்டு, பிரிக்காதிருந்த 'பார்சலே'ப் பிரித்து என் பொன்னியை எடுத்துக் கொண்டேன். ஆட்டனத்தி, ஆதிமந்தி ஆடும் பொன்னூசலேயே கண் கொட்டாது பார்த்தேன். திருப்ப மனமில்லே. புரட்டினேன். காயவும் நேரமின்றிப் பொன்னி என்னைப் பரவசப் படுத்த வந்து விட்டாள் என்பதை உணர்ந்தேன். முகப்புப் படமும் நின்னே போலும் ஆகிய இரு வண்ணப் படங்களும் என்னேப் பரவசமாக்கின. கதைகளில் சாகாத சமணர்களும், தப்பிவிட்டார்களும் பலே ஜோர்! தமிழ்ப் பெரியாரின் தனித் தமிழ் நடை கணுவற்ற கரும்பு.

புதா. சு. முருகையன்

கோனுபட்டு
21-1-50

ஓவியங்கள்

இலக்கியச் சுவை ததும்பிய இன்னிசைப் பாடல்கள், கட்டுரைகள், கதைகள் இவ்வாண்டு சிறப்புற்று விளங்குகின்றன. ஓவியங்கள் நன்கு அமைந்துள்ளன.

மெ. சுந்தரம்

சென்னே
24-1-50

கலேக்களஞ்சியம்

என் வாழ்விலோர் திருநாள் அன்று — ஆம். என் பொன்னி நல்லாள் என்னேத் தேடி வந்தடைந்த அந்த நாள். இந்த மூன்ருவது மலர், பக்குவமாகக் காய்ச்சி எடுக்கப் பட்ட, செந்தமிழ்த் தேந்திம்பாகு! - சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத பாகு! மலரின் பெருமையை ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்ருல், பொன்னி மலர் ஓர் பகுதி கலேக் களஞ்சியம்.

மதிவாணன்

மலர் மணம்

வண்ணப் பொலிவும் தமிழினிமையும் செறிந்த பொன்னி பொங்கல் மலர் இவ்வாண்டும் உன்னத வெளியீடாகவே திகழ்கின்றது. கவியரசர் பாரதிதாசன், அறிஞர் அண்ணாத்துரை, தமிழ்ப் பெரியார் திரு. வி. க., எஸ். முத்தையா, முருகு சுப்பிரமணியன், கோவைக் கிழார், டாக்டர் மு. வரதராசன், அறிஞர் கா. அப்பாத்துரை, டாக்டர் சிதம்பரநாதன், சுகி, அகிலன், இளமைப்பித்தன் உட்பட வேறு உணர்ச்சிமிக்க இளேஞர்கள் உரிமை வேட்கையுடன் மலரை அணி செய்துள்ளனர்.

புதுமைப்பித்தன் கதைகள் பல அவருடைய வாழ்க்கையோடு பிணைந்துள்ளன. இதை அவருடைய மனைவி கமலா விருத்தாசலம் அவர்கள் ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.

தமிழில் நாவல்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றை ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் அவர்கள் சுருக்கமாகவும் சுவையாகவும் கூறியுள்ளார்.

உணர்ச்சிமிக்க கதைகளும் இரசமான கவிதைகளும், கருத்துக்கினிய கட்டுரைகளும், ஓவியச் செம்மையும் சேர்ந்து மலரை வண்ணக்களஞ்சியமாக்கியுள்ளனவென்பதை மறுப்பதற்கில்லே. இவற்றுடன் பொன்னி தனது பிரசாரப் பணியையும்கையாண்டிருக்கின்றது.

- ஈழகேசரி

திருமண அழைப்பு

அன்புடையீர்,

வரும் 6-2-50 திங்கட்கிழமை காலை 7-மணியளவில் அறிஞர் C. N. அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் எனது அண்ணார் திரு. நந்தகோபாலன் அவர்கள் தோழியர் சரசுவதியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் திருமணத் திருவிழாவில் தோழர்கள் முருகு. சுப்பிரமணியன், மதியழகன், என். எஸ். இளங்கோ, இராம-அரங்கண்ணல் ஆகியோர் சொற்பொழிவாற்றுகிறார்கள். விழாவில் தாங்களும் வந்து கலந்து மகிழ்விக்க வேண்டுகிறேன்.

சிதம்பரம்
31-1-50

அன்பன்,
தில்லை-வில்லாளன்

எங்களிடம் கிடைக்கும் நூல்கள்

கிளிக்கூண்டு	தில்லைவில்லாளன்	அணா 10
மதம் அவசியமா?	கட்டுரைகள்	அணா 12
கடைசி முத்தம்	இளமைப்பித்தன்	அணா 8
தமிழச்சி	வாணிதாசன்	அணா 8
கடவுள் படும்பாடு	இமயவரம்பன்	அணா 8
கண்ணீர்க்கோட்டை	தில்லைவில்லாளன்	அணா 6
குழந்தைப் பாட்டு	நாரா நாச்சியப்பன்	அணா 2
மலரும் புனலும்	மு. அண்ணாமலை	அணா 10
சௌமியன்	கவிஞர் பாரதிதாசன்	ரூ 1 4 0
சிரிக்கும் வையம்	சாமி பழனியப்பன்	ரூ 0 4 0
இன்பக் கனவு	இராதாமணாளன்	ரூ 0 12 0
கொய்யாக்காதல்	நாரா நாச்சியப்பன்	ரூ 0 12 0
அன்னை அருங்குறள்	அறிஞர் அப்பாத்துரை	ரூ 0 1 0
இந்துமத ஆசார ஆபாசதரிசினி	வேங்கடசாமி நாயக்கர்	ரூ 2 8 0
அஞ்சலை	தில்லைவில்லாளன்	ரூ 0 4 0
ஏழையின் அரசியல்	எஸ். சதாசிவம்	ரூ 0 8 0

செந்தமிழ்ப் பதிப்பகம்

கீழராசவீதி — புதுக்கோட்டை



பிள்ளைக்காரிங்க கொஞ்சம் இடம் கொடுங்களேன்
இந்தப் பெண்ணுக்கு நேற்று ராத்திரியும் தூக்கமில்லேங்க. உட்காரச் சொல்லட்டுமா?
ஏம்ப்பா, தம்பியும் உட்கார்ந்து கொள்ளட்டுமே, கால் வலிக்கு தென்கிறன்
ஏங்க, நீங்களும் உட்காருங்களேன், எத்தனை நேரம் தான் நிற்பது?



பத்தாம் அத்தியாயம்

ஆபாசமான ஆசை

ஜனவரி 2......

கல்கத்தாவில் வெள்ளையரின் குரல் கம்பீரமாகக் கேட்டது. எங்கிருந்து இரவோடு இரவாய் ஓடினரோ அங்கே மீண்டும் பகலில் பயமின்றிச் சிரித்தபடி நடமாடினர்.

விரோதி இல்லை.........இனி வீண் வம்புக்குக் குறைவா? நல்ல காரியங்களில் — ஆம், அவர்களுக்கு, நமக்கல்ல!—ஈடுபட்டவர்களுக்குள் எப்பொழுதும் சில போட்டிகள், குறிப்பாகத் தலைமைப் பதவிக்குப் போராட்டங்கள் நடைபெறுவது வழக்கம்! இங்கே அந்த நியதிவிலக்கல்லவே! அட்மிரல் வாட்சன் தனது பிடியை வலுவாக்க முயன்றான். கிளைவ் உடனே தான் வங்கப் பட்டாளத் தலைவன் என்றான். விட்டனல் கலோனல் என்ற பட்டம் தனக்கே உரியது என்றான். நெருக்கடியில் ஒளிபவர் நிலைமை நலப்பட்ட பிறகு போட்டியிட வரமாட்டார்களா? வங்கத்தின் வெள்ளைய கவர்னர் அதையே செய்தான்.

இப்படிப் பொறாமைப் புகை வளர்ந்து கொண்டிருந்தது... அப்பொழுது சில சிப்பாய்கள் கிளைவின் உத்தரவில்லாமலே தரைக்கு அழைக்கப்பட்டனர். அப்படி வந்த படைக்கு வழியை அடைத்துவிட்டனர். கிளைவுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. மீறினான்.

கல்கத்தாவினுள் நுழைந்தவுடன் அந்நகர உண்மை நிலவரம் புரிந்தது. அட்மிரல் கூட் என்பவன் ஆக்ரமிப்பிலே கல்கத்தா சிக்கியிருந்தது. அவனது அதட்டுங்குரல் அங்கு சட்டமாக இருந்தது! கிளைவ் அவனை நெருங்கினான்... நெருங்கினான்... நொறுக்கிவிடுவேன் என்று எச்சரித்தான். கூட் தான் வாட்சனின் கட்டளைப்படி காரியங்களாற்றுவதாகக் கூறினான்... "சிறையிடுவேன்,

சிற்றெறும்பே! சிறு மதியால் கடிக்க நினைக்காதே. நசுக்கிவிடுவேன். நான் உன் தலைவன். உடன் ஏற்றுக்கொள்..." என்று உரக்கக் கூவினான்.

கூட் பயத்தோடு வாட்சனுக்கு இந்தச் செய்தியை அனுப்பினான். வாட்சன் கிளைவின் அடங்காப்பிடாரித்தனத்தை அடக்க வேண்டும் என்று ஆர்ப்பரித்தான். உடனே உத்தரவு பிறப்பித்தான்... கிளைவ் தனது படையினருடன் கல்கத்தாவிலிருந்து காலி செய்ய வேண்டும்... கலகம் விளைக்க முனைந்தால் சொறிநாய்களைப் போலச் சுட்டு வீழ்த்தி விடப்படும் என்று! அஞ்சினானா கிளைவ்...? அடங்கி விட்டானா... இல்லை. அட்மிரல் வாட்சன் கரைக்கு வரட்டும். பார்க்கட்டும் மேற்பார்வை... என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான். வாட்சன் கிளைவின் எண்ணப்படி தான் நடக்கவேண்டி வந்தது!

தலைமைப் பதவிக்காக எவ்வளவு சண்டை — இது கேவலம்... பதவி வேட்டை பரம பாதகம் என்பார்கள். யாருக்கும் உள்ள ஆசைதான். பலர் தங்களுக்கு அந்தப்பொல்லாத ஆசை இல்லையென்று வாதிப்பார்கள் வெளிக்கு, ஒப்புக்காக. ...ஆனால் அவரவர் இதயங்களில் கைவைத்துச் சொல்லட்டும். அந்த ஆசை இயற்கை. நிலைமை சிலருக்கு இல்லாமல் தடுக்கலாம். அவர்கள் விதிவிலக்கானவர்கள். ஆனால் இந்த ஆசையை ஒழித்தால் தான் பொதுத் தொண்டு செய்ய முடியும்!

கிளைவ் போட்ட சண்டை உண்மையில் ஆபாசமான ஆசையால் ஏற்பட்ட அர்த்தமற்ற பூசல் என்று சொல்லி விடுவார்கள் எளிதில். ஆனால் அது அப்படியா......? அது வேறு பிரச்னை—எனினும் அதனால் அவர்கள் எடுத்துக்கொண்ட வேலைக்கு எவ்வளவு தடைகள், இடையூறுகள்! அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்ததாய் ஆனந்த பூர்த்தியாய் நின்றது எது? அது!... என்று கடவுளை அறிமுகப்படுத்துவார்கள் கடவுள் கட்சிக்காரர்கள். ஆனால் கிடைத்துள்ளன இரண்டு. ஒன்று ஒரு பண்பு, பிறிதொன்று உயிருள்ள பிண்டம்! அவை பதவியாசை. அடுத்தது உங்களுக்குத் தெரிந்த செய்திதான்— அமீன்சந்த்!

துரோக புத்தி அவனைத் தூண்டிவிடும் விசித்திர விளையாட்டைப் பாருங்கள்...அவன் கொள்ளும் ஆபாசமான ஆசையைப்பாருங்கள்! வாட்சனுக்கும் கிளைவுக்கும் சண்டையாம்...... அந்தச் சண்டையை அதிகப்படுத்த மார்க்கம் வேண்டுமாம் ......அவர்கள் சண்டை வலுத்தால் ஒருவன் பக்கம் அவன் சேர்ந்து வங்கத்தைத் தன் வாய்ச்சொல்லில் கட்டியாளலாமாம்...! ஆகவே அட்மிரல் கூட்டைத் தூண்டிவிட்டான், கிளைவை எதிர்க்கும்படி வெளிப்படையாகவே சொல்லிக் கொடுத்தான. அப்படியே நடந்தது...ஆனால் அந்த வேடிக்கை நீடிக்கும் என்பது அவன் நினைப்பு! ஆடுகள் இரண்டு அதிக நேரம் மோதிக் கொண்டிருப்பதால் ஓநாய்க்கு ஒரு ஆழாக்கு குருதி அதிகந்தானே...! ஆனால் அந்த வெள்ளாடுகள் சண்டையைச் சட்டென்று நிறுத்திவிட்

யைத் தாக்கின.

கல்கத்தாவிலிருந்து மோனிசந்தின்படை சிறிது சிறிதாக வெளியேறிக் கொண்டிருந்தது. ... ஆகவே அப்படையின் கையில் கல்கத்தாவின் ஒரு பகுதி இருந்தது. அப்படை தங்கியிருக்கும் பெரிய கோட்டை வாயிலில் இளைவின் சின்னஞ்சிறுபடை போரிடுவதாகப் பாவனை செய்து கொண்டிருந்தது. மிகுதி வீரர்கள் சுற்றிலு ஒளிந்துகொண்டிருந்தனர். இதை உணராத, உணர நேரமில்லாத மோனிசந்தின் படையினர் முழுவதும் வாயிற்படி

டும் சிறு படையைத் தாக்கினர் வெற்றி பெற்று விடுவோம் என்ற எக்களிப்பால், புது வேகத்தில் ... ஆனால் காவலிழந்த அந்தப் பகுதியில் ஒளிந்திருந்த வெள்ளைப் படையினர் திடீரென நுழைந்துவிட்டனர். நாடாண்ட பரம்பரை தோற்றனர், நாடோடியாகவந்தவெள்ளையர் வென்றனர்...உள்நாட்டுக் குள்ளநரி மனம் படைத்த துரோகியின் துணையினால்! எஞ்சியிருந்த கல்கத்தா வெற்றிக் கோளாறும் தீர்ந்தது. வெற்றி, வெற்றி முழுவெற்றி— வந்தவர்களுக்கு! வெட்கம்......

பதினோராம் அத்தியாயம்

அஜீஸ்கான் திட்டம்

பாசறைக் கூடாரத்தை நோக்கி ஒரு குதிரை வீரன் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது முடின்கான் தனது படைக் கலங்களைக் களைந்துவிட்டு நின்று கொண்டிருந்தான்......அவன் வங்கத்தின் வாழ்விலே ஏற்பட்டுவிட்ட களங்கத்தை எண்ணி எண்ணி ஏங்குகிறான் போலும்! அவன் வாடாத முகம் வாடியிருந்தது. கலங்காத கண்களும் கலங்கித்தான் போயிருந்தன, வாட்டத்தைக்கண்டு வளையாத உள்ளத்திலும் ஒரு வளைவு ஏற்பட்டு விட்டது.

அப்பொழுது அந்தக் குதிரை வீரன் குதிரையை விட்டிறங்கி ஓடிவந்தான்.

"அஜிஸ்......இத்தனை நாள் எங்கு மறைந்திருந்தாய்?"

"அவசரம்......"

"பதட்டம வேண்டாம்.. ... எங்கு போனாய்...என்ன கண்டாய், சொல் தெளிவாக!"

"துரோகியைத் தேடி....துயரக்கதையுடன் திரும்பிவந்துள்ளேன்"

"சரி......என்ன சொல்ல வேண்டும் நீ...இப்பொழுது சொல்!"

"வெள்ளையர் கல்கத்தாவில் வெற்றிக்கொடி நாட்டி விட்டனர்...உள்நாட்டு சூதுக்காரர்கள், நாட்டைக் காட்டிக் கொடுக்கும நயவஞ்சகத் துரோகிகள் அவர்கள பக்கம்......"

"ஆ...அப்படியானால் சுபேதாரின கதி......?"

பிறகு அஜிஸ்கான் திட்டவட்டமாகத் தனது தீர்மானத்தைத் தெரிவித்தான். முதலில்

வெள்ளையருடன் சமாதானம் செய்து கொள்ளவேண்டும்... சமாதானக் குழு வொன்றை அனுப்பச்சொல்லி அவர்களுடன ஒப்பந்தம் பேசுவது போல இரண்டு வாரங்கள் கழித்து விடவேண்டும்...... கழித்து விட்டால் பழுதாகிக் கிடக்கும் பீரங்கிப படை செப்பனிடப் பட்டு விட்டால் இந்தத் தப்பிலிகளைச் சுட்டுக் குவிக்கலாம்... இப்படிப் பேசினான்.

முடின் அஜீஸ் கூறிய வார்த்தைகளைக் கேட்டான்...... அவனுக்கு அந்த திட்டம் சரியென்றே பட்டது! ஆகவே சுபேதாரைச் சந்திக்க புறப்பட்டான்.

சுபேதாரோ முடினுக்கு இன்னொரு புதிய திட்டத்தைச் சொல்லத் துடித்துக் கொண்டிருந்தான்...என்ன அது?

அப்பொழுது ஐரோப்பாவில் இங்கிலாந்திற்கும் பிரான்ஸுக்கும் போர் மூண்டது, இந்தியாவில் அவர்கள் பகை ஒருவாறு அடங்கி யிருந்தது! பட்டிருந்த பகை மீண்டும துளிர்க்கும் என்ற பயம்... இல்லாமல் போகவில்லை! சந்திரநாகூரில் பிரஞ்சுப் படை— மிகப்பெரிய பட்டாளம் ஒன்றிருந்தது. பிரஞ்சுக் காப்டன லாவைச் சந்தித்தால்...சந்திப்பு எந்த நேரத்திலும் நடத்தலாம்! யார் கண்டார்கள்......சுபேதாருடன் உடன்படிக்கை செய்துகொண்டால் இருபடைகளும் சேர்ந்து வெள்ளைக்காரர்களைத் தாக்கினால்...இப்படிச் சுபேதார் எண்ணினான்

அப்பொழுது முடின் வந்தான்.

"முடின்... புதியசேதார் செய்தி"

"என்ன......"

"பிரஞ்சுப் படை வரும்...... ஆள் வைத்து விட்டேன் பேரம் பேச..."

"யார்......?"

"அமீன் சந்த்!"

ஐயோ... அவனை ஏன் தான் இப்படி நம்புகிறீர்கள்?...அவனிடம் உள்ள மந்திர சக்தி தான் என்ன? அவனது சூதுகள் பல தெரிந்தும் சுபேதாரிடம் அமீன்சந்த்தை எதிர்த்து ஒன்றும் செய்ய முடிய வில்லையே...முடினைக் கொல்லத் திட்டமிட்டான்! அவனது விஷவிளையாட்டுகள் அத்தனையும் அஜீஸ்கானுக்குத் தெரியுமே! ஆனால் அவன் ஒரு நாள் இந்த ஆயிர மாயிரம் கொடுஞ் செயல்களுக்கும் தண்டனை அனுபவிக்கப் போகிறான்... அப்பொழுது உலகம் துரோகமே உரு வெடுத்தால் போலுள்ள இந்த மாமிச மலையைக் கண்டு சிரிக்கும், காரியுமிழும் ஏளன எச்சிலை!

சுபேதாரின் திட்டத்தை எளிதாகப் புரிந்து கொண்டான். உடனே தான் வந்த காரியத்தையும் சொன்னான். முதலில் சுபேதார் இணங்கவில்லை. பிறகு அவன் திட்டப்படி நடக்க ஒப்பினான். உடனே படைப்போக்கை நிறுத்திக் கூடாரமடிக்கச் சொன்னான். கல்கத்தாவின் அருகில் வந்தும் படை முன்னேற வில்லை. முகாமிட்டனர். முடின் சுபேதார் கையொப்பமிட்ட கடிதத்தை அனுப்பினான்!

பன்னிரண்டாம் அத்தியாயம்

துரோகிக்குத் துரோகி!

ஆமீன்சந்த் தனது வாழ்க்கையின் போக்கை எண்ணி எண்ணி வியந்தான் போலும். ...இப்படி ஒரு மனிதப் பிறவி உலகில் உண்டா? அவன் நடவடிக்கை ஒவ்வொன்றிலும் வஞ்சனை ஒளிந்து கொண்டு கூத்தாடிற்று...துரோகம் தன் தீ நாக்கை நீட்டி நீட்டிக் காட்டிற்று! அவனைப் பற்றி அவன் செத்து மடிந்து சாம்பலான பிறகு யாராவது நினைப்பார்களா? வங்க வரலாற்றில் அவனுக்கு இடம் உண்டா......... இல்லாமல் இல்லை!

அவன் மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டான். எந்த சுபேதார் தனது சொத்துக்களைப் பறிமுதல் செய்தானோ எந்த சுபேதார் தனது நச்சு நடவடிக்கைகளை உணர்ந்து கொண்டான் என்று அஞ்சினானோ அவனே, அவனே இப்பொழுது பிரஞ்சியரிடம் தூது போய்ப் படை கேட்டு வரச் சொல்கிறான். ஒருவேளை சுபேதார் அவனைச் சோதிக்கிறானா? ...புதிய ஆட்டத்தில் சிக்க விடுகிறானா...அல்லது ஆங்கிலேயரிடமிருந்து பிரிக்க இந்தச் சதியைச் செய்கிறானா?

சரி...அந்த லாவைச் சந்திக்கிறேன்......சுபேதார் படை கேட்டதாகச் சொல்கிறேன்... சமயம் நேருகிறபொழுது அதையும் வெள்ளையரிடம் வெளியிட்டு விருது பெறுகின்றேன்...என் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பலப்படுத்துகிறேன்!...... இப்படிச் சிந்தித்தான்!

சுபேதாரின் விருப்பப்படி சந்திர நாகூர் செல்லவே திட்டமிட்டு வெளியில் கிளம்பினான் ...அப்பொழுது அவன் மகள் ஊர்மிளா வந்தாள்.

"அப்பா......"

"என்ன வேண்டும் கண்ணே"

"என்...கா...த...ல...ர்"

"அசடு நீ...போர்க்களத்தில் அவனை நீ எப்படிப் பார்க்க முடியும்?"

"அதெல்லாம் முடியாதப்பா" என்று சிணுங்கினாள் அவள்.

அப்பன் அதட்டினான்.

அவள் அடங்கி விட்டவள் போலவே உள்ளே சென்றாள். ஆனால் மனதிற்குள் ஒரு பெரிய ஏற்பாட்டைப் பற்றி முடிவு செய்து கொண்டாள். தனது தந்தையின் அறையினுள்ளிருந்த துணிப்பெட்டி ஒன்றைத் திறந்தாள். அதில் ஒரு படை வீரனுக்கு வேண்டிய உடைகளைப் பொருக்கியெடுத்து மூட்டைக் கட்டிக்கொண்டாள் ...வெளியில் வந்தாள்.

அப்பொழுது ஆமீன்சந்த் சந்திர நாகூரில் என்ன பேசுவது...என்ன உடன்படிக்கைக்கு அழைப்பது என்பவை போன்ற எண்ணங்களை எழுப்பிவிட்டு அவைகளிலுள்ள குறைகளைத் திருத்தியும், மாற்றியும் புதுப்பித்துக் கொண்டிருந்தான். ஊர்மிளா மெதுவாகத்

தன் அறையினுள் நுழைந்தாள்.

அடுத்து சில மணித் துளிகள்......

காவியுடையணிந்த அந்தப் பழைய பண்டாரம்......சோணி சந்த் வந்தான். அவன் முகத்தில் பரபரப்பு இருந்தது!

"சோணி......"

"ஜெ ராம் சந்த்..."

"என்ன சேதி"

அவன் தனது தலைவனின் செவியோரத்தில் சொல்வதற்கெனச்சுமந்து வந்த இரகசியத்தை ஓதினன்.

"சமாதானமா...தூதுக் கூட்டமா..."

பற்களை நற நறவெனக் கடித்தான்.

"சோணி... நான் சந்திர நாகூர் செல்கிறேன்...நீ இந்தச் சமாதானச் சடங்கு எப்படியும் கெட்டுக் குட்டிச்சுவராகும்படிச் செய்யவேண்டும்!...... உடனே அதற்கான வேலைகளில் ஈடுபடு"

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது திருட்டுத்தனமாகத் தோட்டத்து வழியே போர்வீரன் உடையில் ஊர்மிளா போய் விட்டாள். அப்பன் தெரு வழியே... மகள் கொல்லைப் புறத்து வழியே... சென்று விட்டனர்!

சோணி மெதுவாக உள்ளே நுழைந்தான். பண்டாரத்திற்கு அன்று பசி... உணர்ச்சிப்பசி... தசையாசை. அவன் உள்ளத்தின் ஒரு மூலையில் ஒரு திருட்டு எண்ணம் இருந்தது... ஊர்மிளாவின் வளரும் பருவ அழகை ஒரு நாள் ஒரு முறையாவது பருகிச் சுவைக்கவேண்டும்! அதற்கு அன்று தக்க சமயம் என்று எண்ணினன் போலும்...

"ஊர்மிளா..."

மெதுவாக அழைத்தான். விடையில்லை. பிறகும் அழைத்தான். அவள் அங்கு இருந்தால் தானே...! அப்படியே அமீன்சந்தின் அந்தரங்க அறை வரை சென்று விட்டான. காலடியோசைகள் கேட்டவுடன நளினி எட்டிப் பார்த்தாள்.

"சோணியா..." என்றாள் பெருமூச்சுடன்.

"ஆமாம்..." என்றான் ஏக்கத்தோடு.

நளினியும் அன்று ஏக்கத்துடன் இருந்தாள். சோணியும் ஊர்மிளா மயக்கத்துடன் அங்கு வந்தான். சந்தர்ப்பம்... சதி செய்தது! ஆகவே அவர்கள் தடுக்கி விழுந்தனர் காமத் தடாகத்தில்...நளினிக்கு இது புதிதல்ல...ஆனால் சோணிக்கு இது வேண்டியிருந்தது. இந்தச் சந்திப்பு அவனது தொண்டு செய்யவேண்டும் என்ற உள்ளத்தில் துரோகத்தை விதைத்தது! அன்று இரவு நளினிக்கும் விருந்து சோணிக்கும் விருந்து தான்... ஆனால் அதன் விளைவு? ஆம். அமீன் சந்த்துக்கு அவன் அருகிலேயே ஒரு துரோகியை உண்டாக்கி விட்டது!

(தொடரும்)



பேசமாட்டாய்?

உன்னுருவைக் கண்டிடவே உனதூருக்கு
வந்திருந்தேன் அன்றும்வாய் திறக்கவில்லை
மின்னலெனை ஓடிவிட்டாய்! மீண்டும் இங்கே
மிக்களழில் கொண்டமணப் பந்தலின் கீழ்
உன்னுடனே பேசுதற்குக் கிடைத்த வாய்ப்பும்
ஒருபயனும் அளிக்கவில்லை: உடனிருந்தோர்
உன்னையும்பின் என்னையுமாய்ப் பார்த்திருந்தார்!
ஓய்வின்று கிடைத்தும்நீ பேசமாட்டாய்?

ஆற்றோரம் நீரெடுக்கச் செல்லுகையில்
அதிகம்நீ பேசுகின்றாய்! ஆனால் இங்கே
பாற்பானை யைப்பூனை பார்த்தல்போலே
பார்க்கின்றாய் நெடுநேரம்; பதில்தான் இல்லை
நேற்றுனது பக்கத்தில் நின்றிருந்த
நிழலொத்த மங்கையர்தாம் சென்றுவிட்டார்;
நாற்புறமும் சுவரமைந்த அறையினுள்ளே
நாம்மட்டும் இருந்தும்நீ பேசமாட்டாய்?

'பக்கத்தில் வா'வென்றால் வந்துநிற்பாய்
பால்எனக்கு வேண்டுமென்றால் ஊற்றிவந்து
பக்கத்தில் வைக்கின்றாய்! கையில்தந்து
'பருகுங்கள்' என்றுமட்டும் உரைக்கமாட்டாய்!
திக்கறியா மரக்கலம்போல் ஓடுகின்றாய்!
திங்களையே பார்க்கின்றாய்! அதனால்தானோ
பக்கத்தில் நானிருந்தும் பாதைகாணாய்!
பாகனையாய் இன்னும்நீ பேசமாட்டாய்?

— சி. திருநாவுக்கரசு

உவமை நீயோ?



அகல்விசும்பிற் செல்கின்ற மதியே நீதான்
அழற்கதிர்செஞ் ஞாயிற்றின் ஒளிக்குத்தோற்றுப்
பகற்பொழுதில் தோன்றுகிலாய்! இரவின்கண்ணும்
படர்முகிலி னிடையிலொளி மங்கிப்போவாய்;
நிகரிலெழில் இவள்முகமோ பகலும்;கங்குல்
நேரமும்நற் சுடர்பரப்பும்; எனினும் இன்றும்
பகர்வர்மதி முகமென்றே பாவல்லோர்கள்;
பைந்தொடியாள் திருமுகத்திற் குவமைநீயோ?

பனிநாளின் மழைநாளின் இரவுப்போதில்
பாய்ந்திடுநல் லொளிவிரிக்கும் பான்மையில்லாய்;
எனினும்அது கிடக்கமற்றை யிரவின்கண்ணும்
இயற்கையொளி படிப்படியாய்க் குறைந்துதேய்ந்து
கனிவில்மனத் தவர்ஈகைப் பயனேபோலக்
கடைநாளில் அழிந்தொழிவாய்; இவள்முகந்தான்
தனிக்காதல் விளைவிக்கும் எந்நாளும்
தளிரிடையாள் எழில்முகத்திற் குவமைநீயோ?

நின்னிடையே ஒருகளங்கம் நிலவும்;ஆயின்
நீசிறிதும் இவள்முகத்திற் களங்கம்காணாய்;
உன்னகத்து நல்லமிழ்தம் உள்ளதென்றே
உரைத்திடுவர் பலபுலவர்; ஒருவரேனும்
துன்னியதைச் சுவைத்ததுண்டோ? சொல்வாய்நானே
தோகைநல்லாள் இதழமிழ்தச் சுவையைப்போற்றிப்
பன்முறையும் தெவிட்டாமற் பருகியுள்ளேன்
பண்மொழியாள் ஒளிமுகத்திற் குவமைநீயோ?

— நா. கு. நமச்சிவாயன்

உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு



20. மதிப்புரை!

இலக்கிய விமரிசனம், வரப் பெற்றோம், உரைகல், புத்தகப் பூங்கா, நூலேணி முதலியவைகள் இன்றுள்ள பத்திரிகைகளில் காணக்கூடிய ஓர் முக்கியமான அங்கம். பக்கங்களை நிரப்புவதற்காகப் போடக்கூடிய பகுதியோ என்றுகூட எண்ணவேண்டியிருக்கிறது. ஆனால், துப்பறியும சாமபுக் கதைப் பிரியர்கள் கூட 'வளரும் கலை' களைக் கவனிப்பதில்லை. அதை முக்கியமாகப் புரட்டிப் பார்ப்பவர்கள் விமர்சனத்திற்காகப் புத்தகங்களை அனுப்பிய 'எமிலிஸோலாக்கள்' தான்.

அநேகமாக, மதிப்புரை எழுதுபவர்களே புத்தகங்களைப் படிப்பதில்லை. அவர்களின் 'விலையுயர்ந்த' நேரமும், 'கலையில் நனைந்த' நினைவும் இதற்குத் தானா பயன்படப் போகிறது? அதற்கெனவே நண்பர்கள் சிலரிருக்கிறார்கள். ஜார்ஜ் கிஸ்ஸிங் (Ceorge Gissing) போல புத்தகங்களைச் சாப்பிட்டே உயிர்வாழ்பவர்கள்! அவர்கள் படிக்கிறார்கள். அதன் சாரம் ஆசிரியருக்குத் தரப்படுகிறது. அவர், வழக்கம் போலத் தனக்குக் கிடைக்கும் 'கொஞ்ச நேரத்தில்' இந்தக் கற்றைகளையும் கற்பனை நிலைக்கு இழுத்துச் செல்கிறார். அங்கே.........

ஆசிரியர் ஒரு உயரமான பீடத்தில், உல்லாசமாக அமர்ந்திருக்கிறார். வட்ட மேஜை அவருக்கு முன்னால் பலவர்ணங்களோடு மிளிர்ந்து கொண்டிருக்கிறது. அவரைச் சுற்றிலும் பணிவிடை புரிவதற்காகப் பலர் ஈன்றெடுத்து விட்டுப் போன 'அனாதை நூல்கள்' அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. மேற்கோள்கள் என்று எண்ணியவுடனே எச். ஜி. வெல்ஸும், இடுப்பில்லாத 'டுயட்'டும் முன்னே ஓடிவருகிறார்கள். ஷேக்ஸ்பியர் இங்குமங்கும் பறந்து கொண்டிருக்கிறார். பைபிளில் பதிந்து போயிருக்கும் ஆசிரியரின் கண்கள் மெதுவாக ஒரு 'பாரதிதாசன் பரம்பரை'யை ஏறிட்டுப் பார்க்கின்றன. ஐயோ பாவம்! ஆசிரியரின் பேனா, கூவம் நதியில் குளித்து விட்டதைப் போல, வார்த்தைகளை வாந்தியெடுக்க ஆரம்பிக்கிறது. இனி எழுத்தாளரின் நிலையை வர்ணிக்க வேண்டுமானால் அவராக எழுதிப் பார்த்துக் கொண்ட

கவிதையைத் தான் மறுபடியும் சொல்லித் தொலைக்க வேண்டும். 'மெல்லத்தான் சொல்லித் தான் விமர்சிப் பாரா? பல்லைத் தான் கடித்துத்தான் பகருவாரா? என்று கண்ணைத் தான் கசக்கித்தான் கையைத் தான் பிசைந்து கொண்டுதான் நிற்பார்.

இறுதியில் தேங்காய்ப் பூலவத் தண்ணிரிலே கலக்கிப் பாலையெல்லாம் வடித்துக் கீழே கொட்டிவிட்டு, மீதியாயுள்ள சக்கையைக் கொண்டு ஒரு 'மசாலா—மைசூர்ப்பாகு' மதிப்புரையைத் தயார் செய்வார். இரண்டு பிரதிகளில் ஒன்று மதிப்புரைக்கு! மற்றொன்று அதன் மறுப்புரைக்கு! ஆசிரியர் ஒருவாறு எழுதித் தீர்த்து விடுகிறார். எழுந்து நிற்பதும், இலக்கிய மலையை விட்டுச் செங்குத்தாய் இறங்குவதும், மதிப்புரையை மக்கள் புரிந்து கொள்ளும் அளவைப் பொறுத்த விஷயம்.

உரைகல்லுக்கு மாற்றுப் பார்க்க வருவது இலக்கியம் மட்டுமல்ல. சங்கீதம், நாடகம், சினிமா, சிங்காரம்......இப்படி இத்தியாதிகள்!

ரேடியோ விமர்சனத்தை 'வால்வ்' எழுதும். நேற்றைய கச்சேரி என்ற தலைப்பில் 'இசைப்பூச்சி' ரீங்காரம் செய்யும். நாடகக் கலையைப் பற்றிக் 'கர்நாடக' விமர்சனங்கள்... ஆனால், உரைகற்களின் தராதரத்தைப் பற்றி 'அலையோசை' செய்ய எனக்கு மனமில்லை. ஏனென்றால், செங்கல்லை வைத்துக் கொண்டு, அதிலே தங்கத்தை உரசி, மாற்றுப் பார்க்கும் 'இலக்கியக் கொல்லர்' களுக்குத்தான் இப்போது அலாதி மதிப்பு! ஆகவே, இம்முறை, உம்மைச் சினிமா ஏரியிலே படிந்துகிடக்கும் கலைச்சகதியில் புரட்டக் கங்கணம் கட்டிவிட்டேன்.

மேல்நாடுகளிலே சினிமாவை ஒரு கலை, கலை என்று கதறுகிறார்களாம். சுத்தப் போக்கிரிகள! கலையாவது? களிமண்ணாவது? கலை என்றால் என்ன? காலைத் தொண்ணூறு டிகிரிக்குத் தூக்கிநின்று ஆடும் நடனம், குளோசப் காட்சிகளில் பாதித்திரையை மறைத்துக் கொண்டு நம்மைத் திணறவைக்கும் "வெளிப்புற"க் காட்சிகள்—இவற்றிலே ஒளிந்து கிடக்கும் கலையின் நுணுக்கத்தைக் கொஞ்சமாவது அவர்கள் அறிந்தார்களா?

விட்டுத் தள்ளுங்கள்! இன்றைய நிலையிலே, கலை என்றால் எனன என்று நான் கூறுகிறேன். கலை—கட்டுக் கடங்காத காட்டுக் குதிரையுமல்ல—அழுக்கு மூட்டையைச் சுமந்து வரும் கழுதையு மல்ல. கலை, இழுத்த இழுப்புக் கெல்லாம் ஓடிவரும் ஒரு ரப்பர்த்துண்டு. காமவிகாரத்தின் 'பரிசுப் பதிப்பு' அதிலும் இன்று, சினிமாச் சாக்கடைகளிலிருந்து கிளம்பும் வசன கலையின் (விசனக்கலையல்ல) நறுமணம் நம் நாட்டின் நாலாபக்கங்களிலும் 'பாதாம் பீடா' வாகப் பரிமளித்துக் கொண்டிருக்கிறது.

ஏதோ சில தமிழ் வார்த்தைகளை ஒன்றாகச் சேர்த்து வைத்துக்கொண்டு, குச்சிகளை வைத்துச் சிறு பிள்ளைகள் கூட்டுவண்டி செய்வதுபோல வார்த்தைகளைக் கோர்வையா

கத் தயார் செய்யும் நளபீம பாகத்திற்குத்தான் இன்று 'கலை' என்று பெயர். சுருக்கமாகச் சொன்னால் கலை ஒரு 'மசாலா-ஜிலேபி' காரமும் இனிப்பும் கலந்த வஸ்து அல்லது இரண்டுமே இல்லாதது. அவற்றைத்தான் இன்று'கலை' யில் நீராடும் 'ரசிக சாம்ராணி'கள் இலக்கியப் புகழ்மாலை சூட்டி வரவேற்கிறார்கள்.

இன்றையச் சினிமாக் குளங்களிலே துள்ளிவிளையாடும் 'வசன மீன்களைப்' பாருங்கள். ஒரே ஒரு சாம்பிள்! காதலனும் காதலியும் மறைவிடத்தில் இருந்துகொண்டு தங்கள் காதலைக் கடித்துக்கொள்ளும் கட்டம். சைக்கிளின் மேல் கதை நாயகனும், மரத்தும்றைவில் கதைநாயகியும் நின்றுகொண்டிருக்கின்றனர். அப்போது......

"அன்பே! அசல் கார்லோவே! நீ என் கர்ணுடிக் கர்சிப், காதல் போண்டா, களிப்பூட்டும் வில்ஸ்! பிளாஸ்டிக் புத்தகம்!"

"என் பைர(வ)னே! நீ தான் என் குட்டிகூரா பவுடர்! கோலினோஸ் பேஸ்ட், குங்குமப் பொட்டு"

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் ஏதோ இரண்டு வார்த்தைகளை எதுகைமோனையோடு இணைத்து அணைத்து முடிப்பதற்குத்தான் சிறந்த வசனம் என்ற பெரிய மகுடம் சூட்டப்படுகிறது. நிகழ்கால வாழ்க்கைச் சொற்களையும், சங்ககால இலக்கியத் தமிழையும் ஒன்றாக ஒட்டுவதற்கு உபயோகப்படும் பிசினுக்குப் பெயர்தான் 'இன்றையக்கலை.' எச்சில் இலைகளைக்கூட இலைகளுக்குப் பதிலாக, கலை என்று சேர்த்து, 'எச்சிற்கலை' என்று தான் சொல்லுகிறார்கள்.

தமிழ்க் கலை நன்றாக இருந்ததென்று, புது மண்டபத்தில் கூடிப்பிரிந்த புலவர்கள் சொல்லுகிறார்கள். இருக்கிறது என்று சொல்லாததற்காக, இன்னொரு முறை காம்பிளிமெண்டரி, பிரீபாஸ் வகையருவில், ஏதாவது ஒரு தமிழ்ப படச் சினிமாவிற்குச் சென்று 'இன்பவல்லி' களின் இனிய உரையாடலைச் செவி மடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சங்கப் பலகை மறுபடியும் மிதந்து, அதில் இன்றைய சினிமாவான் 'சிவகவி' களும் இடம் பெறவேண்டும் என்பதே என் ஆசை.

விகடயோகிகளையும், கீதகாந்திகளையும் ரசித்து ரசித்து, மழுங்கிப் போன மக்களுக்குக் கொஞ்சம் சொரணை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணந்தான், எழுத்தாளர்களின் கரங்கள், பேனாவின் 'லகானை' விட்டு விட்டு 'டார்ச் லைட்' சகிதம் வார்த்தைகளைத் தேடி அலையச் செய்கிறது போலும். இன்றைய மக்களும் ரசிக்கிறார்கள். ரசிகக் கொலையின் இலக்கியமே இவர்கள் தான். இந்த மனிதர்களை ரசிகச் 'சூடு' ஏறிப்போயிருக்கும் 'வைகையாற்று வாய்க்கால்கள்' என்று தாராளமாக அழைக்கலாம்.

சகிப்புத் தன்மையை கண்டனக் கனலாகக் கொட்டுவதற்குக் காரணமே, இப்படி "டக்ஊஸ் — பாட்லிங் மணி"களை வசனங்களில் வாரிவிட்டு ஆசிரியர் 'குதிரைச் சவாரி' வந்து, சூபர்விஷன் செய்து தொலைக்கும் அலங்கோலந்தான்!

அப்படின்னா.........?

அப்படின்னா, வசனம் எழுதத் தெரியாத ஒரே 'அல்ப'

காரணத்தின் முடிவாகக் 'கதைக் குழுவினர்' கொக்கரிக்கிறார்கள் என்று அர்த்தம்!

இதயம் குமுறி எழும் கட்டத்திற்கேற்ற வசனத்தைத் திட்டத் திறனற்ற 'கஞ்சாக் கப்பலில் மிதந்து செல்லும் பகவத் கீதைகள்' கதைக் குழு என்ற நீண்ட காதும், வசன கர்த்தாக்கள் என்ற வளைந்த வாலும் அமைத்துக் கொள்கிறார்கள். இந்த நகைச் சுவைச் சித்திரங்களின் பெருமைக்கு உயிர்நிலை, கட் அவுட்டர்களும் வால் போஸ்டர்களும் தான்.

உல்லாசக் கடலிலே ஓடம் செலுத்தும் ஒரு சிலர், மரக் கட்டையிலே கத்தி தீட்டுபவரைப் பார்த்து, "கவிதையைப் பற்றியோ கதையைப் பற்றியோ பேசாதே — கலை என்ன? காவிய மகிமை என்ன? அப்படியே லட்டு.........லட்டு" என்று பாடுகிறார்கள்.

"தையலின் கழுத்தில் தாலி ஏறுவதற்குள் அவள் தாயாகி விட்டாளே என்ற விசாரத்திற்கு விசாரணை தேவையா? கழுத்தைக் கவனி — அதில் உன கண்களுக்கு மட்டும் காணப்படும் 'சந்திரமதித் தாலி'யைப்பற்றி அக்கரையில்லை" என்பதுதான் ஓடக்காரர்களின் பாடலுக்குச் சரியான மொழிபெயர்ப்பு.

கலை தெரிந்தவர்கள் தானே கலையைப் பற்றிப் பேசுகிறார்கள். பரத நாட்டியக்காரிக்குப் பகட்டுக் கலர் விளக்குகளும், படாடோபப் பக்கவாத்தியங்களும், அம்பேத்கார் டிசைனில் அரை நிர்வாண ஆடைகளும் தேவைப்படுவது போல; 'கலை'க்கு மெருகேற்றக் 'கலப்பு-வால்பிளக்குகள்' தேவைப்படுகின்றன. கலை, வேசியர் சதுரரங்கில் காலைவரை நீடிக்கிறது. காவியக் கடைகளில் தூங்கும் கலைகள் விக்ரமாதித்தனையும், வேதாளத்தையும் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனு சமர்ப்பிப்பதற்காக எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றன,

சிறந்த கவிதைகளை, கலைக்காக ஒருமுறை, கவிதைக்காக ஒரு முறை என்று படிப்பவர்களும் உண்டு. ஆனால், எப்படி அவர் இரண்டு அழகான மொழிகளை ஒன்றாக இசைநயம் குன்றாமல் இணைக்கிறார் என்று 'சர்வே' செய்துகொண்டிருப்பவர்களும் உண்டு. அதன்பயனாக இன்று, டபிள் அலங்காரத்தோடு "முன்-மாதவி"யாக வந்த மயக்குநட்சத்திரம், "பின்-கர்ணகி"யாகவந்து மக்கு நட்சத்திரமாகக் காட்சியளிப்பது போல, 'கலை'யின்நிலை கவலைக்கிடமாயிருக்கிறது.

இன்று கலையின் போக்கு, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி ஜலதாரைகளைப்போல நீண்டு கொண்டே போகின்றது. அந்தச் சாக்கடைக்குச் சரியான போக்கிடம் சினிமா-ஏரி! சிறு சிறு கால்வாய்களாக மக்களின் மத்தியிலே அவைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மதகுகளை உடைத்துவிடும் நாளில் உல்லாச முதலைகள், சகதிக் குட்டையிலே புரண்டுகொண்டிருக்க முடியாது. சந்தைக் கடையிலே வீசப்படும். செருப்பு என்று கருதி, மக்களின் மனதிலே, ஏமாற்றங்களை எறிந்து விளையாடும் முறை, அதிகநாள் நீடிக்காது என்பதை உணர வேண்டுகிறேன்.

வணக்கம்,

வழிப்போக்கன்

(உல்லாசம் கடிதங்கள் முடிவுற்றன)

தமிழ் தந்தான்

— திருமதி வரமணி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

'மேதை' முனிவர்களுக்குத் தனி விடுதி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. காட்டிலே காயும் கனியும் இலையும் தழையும் உண்டு அலுத்த முனிவர்கள், அரசாங்க விருந்தைக் கண்ட வுடன் புதுமையாக ஒரு பக்கம் இருந்தாலும், செழிக்க உண் டார்கள். உண்ட களைப்பு 'மேதாவி'களைமட்டும் விட்டு விடுமா? உருண்டு, 'திருமேனி' களைப் புரட்டிக் கொண்டிருந் தார்கள். 'அப்பாவி' அகத்தி யருக்கோ உணவும் செல்ல வில்லை, உறக்கமும் கொள்ள வில்லை. விடுதியின் திண்ணைப் பக்கமாக வந்து உலவத் தொடங்கினர்.

நாகரிக ஆடை அணிகளை யும், மினுக்கித் திரியும் ஆடவர் பெண்டிரையுமே கண்டு பழகிய பட்டணத்து நாய்க்கு அந்த முனிவரின் கோலம் ஒரு மாதிரி யாகப் பட்டிருக்க வேண்டும்! இல்லையென்ருல், அந்த எச் சிற்கலை நாய் அவரைப் பார்த் துக் குரைக்குமா? மேதையைக் கண்டதா அல்லது பேதையைக் கண்டதா அந்த நாய்! விடு திக்கு எதிரே இருந்த நாய் குரைத்தவுடன் எதிர் வீட்டுப் பக்கமாக எங்கேயோ அவசர மாக ஓடிக்கொண்டிருந்த ஒரு சொறிநாய் நின்று குரல் காட் டிற்று. அதைக் கேட்ட இன் னெருநாய் குரைத்தது. தெருக் கோடியிலிருந்த ஒரு நாயும் பின் பற்றியது. நெடுந்தொலைவி லிருந்து ஒரு நாய் ஊளையிட்ட தும் கேட்டது. ...... சரிதான். இப்படியாக ஒரு மேதாவியைக் கண்டு காசிநகரமே அலறிற்று. ஒரு நாய் குரைத்தது; ஊரெல் லாம் குரைத்தது!

மாலையில் 'சதஸ்' ஆரம்பித் தது. முனிவர்கள் அறிவுத் திறமையால் மொழிக் குட்டிக் கரணங்கள், மொழிப் பாய்ச்சல் கள், உருட்டல்கள், மிரட்டல் கள், சிலேடைகள், தலைகீழ்ப் பாய்ச்சல்கள்......இப்படிப் பல வகையாகவும் சொற்சிலம்பம் ஆடினர்கள். 'பேதை'க் கூட் டம் மேதைகளை வியந்தது. அகலத் திறந்த கண்களும் அங்காந்த வாய்களும் எங்கெங் கும் காணப்பட்டன. அகத்தி யர் வாய்மூடிக் கிடந்தார். மற்ற 'மேதாவி'களின் எழுச்சி யெல்லாம் அவரை ஒன்றும் செய்யவில்லை.

'சர்க்கஸ்' முடிந்தது; 'சதஸ்' கலைந்தது.

○

அன்று இரவு:

மறுநாள் விழாவிலே இன் னும் இந்தப் 'பாமர' மக்களை எப்படி எப்படியெல்லாம் திணற வைக்கலாம் என்று நெடுநேரம் திட்டமிட்டார்கள்

'மேதாவி'கள். அகத்தியரைக் கண்டித்துப் பேசவும் அவர்கள் பயந்துவிடவில்லை. உலகத்திலேயே மிகச் சிலருக்கென்றே வாய்த்துள்ள 'மேதை'யினை நிலை நாட்டிவிட வாய்ப்புக் கிடைத்திருப்பதை இப்படி நழுவ விடலாமா?

திட்டமிடு படலம் முடிந்த பின், திருமேனி நீட்டு படலம் நடந்து, குறட்டைப் படலம் மும்முரமான வேளை—

அகத்தியர் எழுந்து விட்டார்! தூக்கமாவது மண்ணாவது! கானகத்திலே ஒரு நாள் திண்டாடினாரே, அதே போலத் தான் பழையபடி படாத பாடு பட்டார்.

பால் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. தூங்கி எழுந்தவுடன் காசிவாசிகள் நகரம் முழுவதும் வெள்ளி முலாம் பூசப்பட்டிருப்பது கண்டு வியக்கவேண்டும என்ற எண்ணத்தோடு சந்திரன் தன் ஆற்றலையெல்லாம் செலுத்திக் கொண்டிருந்தான். அகத்தியர் புறபபட்டு விட்டார் நகரத்தின் வீதிகளிலே ஒரு குறிப்பும் இல்லாமல் திரியத் தொடங்கினார்.

எங்கோ ஒரு திண்ணையிலே இரண்டு மூன்றுபேர் பேசிக் கொண்டிருந்தார்கள்:

"என்னப்பா, பெரிய முனிவர்களெல்லாம் வந்திருக்கிறார்களே, நிறையப் படித்தவர்களோ?"

"அதென்ன அப்படிக் கேட்டாய்? அவர்களுக்குத் தெரியாதது ஒன்று உண்டா?"

"ஆமாம் சும்மாவா நம் மன்னர் அழைப்பார்! எல்லாம் அறிந்தவர்கள் தான். என்ன பேச்சு! அடடா!"

"என்னங்க, தெரியாமல் தான் கேட்கிறேன். நல்லதெல்லாம் தெரிந்து கொள்ள ஆசையிருக்கத்தானே செய்யும்?"

"என்னப்பா, என்ன தெரிய வேண்டும்?"

"முனிவர்களெல்லாம் பேசினார்கள், பாடினார்களே! என்ன சொன்னார்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!"

"உனக்கு எப்படிப் புரியும்? பெரிய பெரிய விஷயங்களைப் பேசினால், அவ்வளவு எளிதாகவா புரிந்துவிடும்?"

"இருக்கும், இருக்கும், அது தானே உங்களைக் கேட்கிறேன் ...."

"என்னை என்ன மேதாவி என்று நினைத்துக் கொண்டாயா? அவர்கள் படிப்பென்ன காரியமென்ன, நமக்கு எப்படி அதெல்லாம் மனத்திலே பதியும்? சரிதான், போய்ப் படுக்கலாம்......"

"இவ்வளவுதானா ஒருவருக்கும் ஒன்றுமே தெரியாமல் பேசிவிட்டால் மேதாவி ஆய் விடலாமா? இதற்குக் காட்டுக்குப் போவானேன்!"

......இந்தப் பேச்சைக் கேட்டார் அகத்தியர். இப்போது தான் இத்தனை நாளாகத் தம்முடைய உள்ளம் கிடந்து அலமருவது என என்பது சிறிது விளங்கிற்று. இந்தப் பேச்சைக் கேட்பதற்காக இவர் ஒண்டியிருந்த நிலையை ஒரு நாய் பார்த்து விட்டது......

ஒரு நாய் குரைத்தது; ஊரெல்லாம் குரைத்தது. விடுதிக்குள் நுழைந்தார். குறட்டைப் பாட்டு அவரை வரவேற்றது. வாசலில் தயங்கி நின்றார். "இதே குரலை எங்கேயோ கேட்டோமே, எங்கே?"...... "ஆம் ஆம். இன்று மாலை அரங்கத்தில் முனிவர்களின் சுலோகங்கள் கேட்டோமே......"

O

'மேதாவிகள்' காட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். அகத்தியரும் வந்து விட்டார். ஆனால், போகிறபோது வாய் மூடிச் சென்றவர், வரும்போது இல்லாததும், பொல்லாததுமாகக் கேட்டுக்கொண்டே வந்தார்.

"அறிவு என்பது பிறரோடு பரிமாறப்படும் போதுதானே இன்பம் தரும்?"

"மொழி என்பது ஒரு கருவி. நல்ல கருவியாக இருந்தால் எல்லோருக்கும் பயன்பட வேண்டுமல்லவா?"

"கருத்தைப் பரிமாற இயற்கை முறை உகந்ததா? செயற்கைச் சட்டங்களால் இறுக்கி வைத்துள்ள மொழி உகந்ததா?"

"நாம் என்னென்னவோ தெரிந்து வைத்திருக்கிறோமே அவையெல்லாம் நமக்கு மட்டும் தானா?"

"நாம் பெற்ற அனுபவம் பிறருக்குக் கிட்டக் கூடாதா?"

இத்தகைய 'பொருளற்ற' கேள்விகளுக்கு எல்லாம் விடை சொல்லிக் கொண்டிருக்க "மேதாவி" முனிவர்களுக்குப் பொறுமை இல்லை; நேரமும் இல்லை. தங்கள் சூரத்தனத்தால் 'பேதை' மக்கள் பட்ட பாடுகளைப் பற்றி அளந்து கொண்டு போவதிலேயே நேரம் கழிந்தது.

ஒரே ஒரு கேள்வி மட்டும் அவர்களுக்கு மிகுந்த சினத்தை மூட்டிவிட்டது:

"என்னென்னவோ பேசினோமே? சிறிதாவது அந்தப் பட்டணத்து மக்களுக்கு விளங்கிய தாகவே தெரியவில்லையே?'

இந்தக் கேள்வி எல்லா 'மேதாவி' களையுமே துர்வாசர்களாக ஆக்கி விட்டது. நல்லவேளையாக அகத்தியரும் ஒரு முனிவராக இருந்தார். இல்லையென்றால். "பிடிசாபம்"-இது ஒன்றுதான் முடிவு,

"அகத்தியரே, நீர் இவ்வளவு பேதையாகி விடுவீர் என்று யாருமே எண்ண முடியாது! நாம் சொல்வதை அந்தப் பேதைகள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அது என்ன, அவ்வளவு எளிய செயலா? மேதைகளும் பேதைகளும் ஒரே நிலையினராக அல்லவா நீர் பேசுகிறீர்! நாம் சொல்லுவது ஒன்றுமே அவர்களுக்குத் தெரியக்கூடாது எனபது தானே நமது குறி! மற்றவர்கள் பேசாத பேசமுடியாத—மொழியைப் பேசுவதில் தானே நம்முடைய பெருமையே இருக்கிறது!"

அகத்தியருக்கு இப்போது முழுவதும் விளங்கிவிட்டது.

'மேதை'கள் வழியை நீக்கிப் 'பேதை'களின் சாலைக்கே வந்து விட்டார்!

அகத்தியருக்கு அறிவுக் கண் திறந்து விட்டது. இருட்டிலே தடவித் தேடும் கூட்டத்தைவிட்டு ஒளி நெறிக்கு வந்து விட்டார்.

வழிக்கு வந்து விட்டால் போதுமா? உயரிய இடத்தை —குறிக்கோளை— அடையவேண்டுமே!

காது கொண்டு கேட்டார்; உயிர்களின் பேச்சுக்களையெல்லாம் அவருடைய செவிப்புலன் கேட்டது. மொழி செய்யும் அற்புதம்—உரையானது விளைக்கும் புதுமை— அப்போதுதான் அவர் கண்ணுக்குப் பட்டது. கண் கொண்டு கண்டார். கண்ணாரக் கண்டார்.

சிட்டுக் குருவி 'சிர்ர்ப், சிர்ர்ப்' என்றுபாடிற்று; அடுத்த கிளையிலிருந்து இன்னொரு சிட்டு அதை நாடி வந்தது. ஒன்று ஆண்; மற்றொன்று பெண்.

ஒரு குயில் பாடினால் எங்கேயோ இருந்து எதிர்க்குரல் ஒன்று கேட்டது, சேவலும் பேடையும்!

இப்படியே உறுமல், முழக்கம், பாட்டு, கத்தல், கதறல், அலறல் ...... எல்லாவற்றிலும் மொழியின் திறத்தைக் கண்டார். கருத்தைப் பரிமாற— உணர்ச்சியைப் பரப்ப, உதவுவதே மொழி என்ற அறிவு அவர் உள்ளத்தே அரும்பெடுத்து மலர்ந்தது.

O

இப்போதுதான் அவர் சங்கடம அதிகமாயிற்று. இத்தனை நாள் பாழாக்கி விட்டோமே! வாழ்விலே திளைக்க இனி வழி இல்லையா? மக்களோடு அளவளாவி— அறிவைப் பரிமாறிப்பரப்பி, உயர்ந்த உவகை பெற என்ன வழி உண்டு?

சிக்கலைத் தீர்க்கச் சிவனையே நாடினார்! கைலைமலை சென்றார். வழி கேட்டார்; தெரிந்து விட்டது.

"அப்பனே! அதோ அந்தத் தெற்குத் திசையை நோக்கு."

"இறைவனே! இது என்ன பெருவிளக்கம் கொண்ட பேரொளி! ஒளியோடு மணமும் கலந்து வருகிறதே!"

"அதுதானப்பனே தென்றல்—தென் தமிழ்—உன் குறிக்கோள்"

"ஆண்டவனே! விளங்கவில்லையே!"

"கேள், மகனே! நன்றாகக் கேள்! கானகத்து மயிலுண்டு. அதைக் கண்டு மகிழ்வதை விடுத்து மினுக்கித் திரியும வான்கோழியும உண்டு. மயில் ஆடும்போது நோக்கினால், அதிலே செருக்கின் நிழல்கூட இராது; வான்கோழி தன்னுடைய அரையே அரைக்கால் இறகை விரித்துவிட்டால் அதனுடைய உடம்பின் ஒவ்வோர் அணுவும் செருக்கால் வீங்கிப் போகும. இதுவரை நீ இருந்தது வான் கோழிக் கூட்டம். மொழி என்பது இயற்கையாக வளர்ந்த கருவியாக வேண்டுமே தவிர, சிலம்பாடுமே சொல் விளையாட்டாக மாறக்கூடாது. தமிழ் இயற்கையின் விளைச்சல். உயிர் முகிழ்த்தெழுந்த நாள் முதலாக —ஒளி பிறந்த கணத்திலிருந்து -ஒவ்வோர் அணுவாக வளர்ந்து முழுமையடைந்த பேச்சுமொழி அதன் நடமாட்டம் மயிலின் கலைஉலாப் போல அமைந்தது. மற்றதுபற்றி நீயே அறிவாய்.

மனிதனை உண்டாக்கி வைத்தவன் நான். அவனுக்கு என் இயற்கை உண்டாக்கித் தந்தது தமிழ்......''

''இறைவனே! நானும் அந்தத் தமிழ் பேசுவோரிடையே இருக்க விரும்புகிறேன். அருள் புரியவேண்டும்.''

''அப்பனே! மயில் ஏறி விளையாடும் பிள்ளையிடம் சென்றால் அதை அறிவாய்.''

சிவனுடைய அருளும், செந்திலோன் கருணையும் பெற்று அகத்தியர் திரும்பினர். தமிழ்தான் தமக்குப் புது வாழ்வு—புனர் ஜன்மம் தந்தது என்று நம்பினர். தமிழ் இல்லையென்றால் அறிவுலகைப் பொறுத்தவரையிலே மங்கி மறைந்து செத்திருக்க வேண்டியதுதான் என்றே உறுதியாக நமபினர். ''தமிழால் தாபெற்றவன்'' என்றே முருகனிடமும் சொல்லிப் பெருமைப் பட்டார்.

''மேதாவிகளி''டமும் 'பேதை' அகத்தியர் வந்தார். தம் வெற்றியை யெல்லாம் கூறிப் பெருமிதம் கொண்டார். அவர்களையும் தமிழகத்துக்கு அழைத்தார்!

நல்ல வேளை. 'மேதாவி'களுக்கு நெற்றிக் கண் இல்லை! அவர்கள் சொன்னதெல்லாம் இது தான்: ''அகத்தியரே! இவ்வளவு துணிச்சலாக எங்களை அவமானப் படுத்தி விட்டீர்! நீர் புகழும் அந்த மொழி எங்கள் அடிவருடுமா, இல்லையா—பார்த்துக் கொள்ளும்!''

'மேதாவிகளு'க்கு என்ன குறைந்தாலும், ஒன்று மட்டும் நிறைய உண்டு; பஞ்சமே கிடையாது. தலைக் கிறுக்கு!

கொலை செய்யவில்லை!

உங்களுடைய வாழ்க்கை வரலாற்றை நீங்கள் ஏன் எழுதவில்லை? என்று பலர் கேட்கின்றனர். வாழ்க்கை வரலாறு எழுதும்படியான ஆச்சரிய நிகழ்ச்சிகள் ஒன்றும் என்னிடம் இல்லை. நான் யாரையும் கொலை செய்யவில்லை. அப்படியிருந்தால் என் வரலாறு ஒரு துப்பறியும் நாவலாக இருக்கும். வழக்கத்திற்கு மாறானதொன்றும் என் வாழ்க்கையில் இடம்பெறவில்லை. என் வாழ்க்கை நான் எழுதிய நூல்களிலே அடங்கிக் கிடக்கிறது. அவற்றைப்படியுங்கள். என் வாழ்வுக் கதை தெரியும். அவற்றில் சொல்லப்படாதவை ஏதேனும் இருந்தால் அவை இவைதான், காலைப் பலகாரம், நண்பகல் உணவு, இரவுச் சாப்பாடு, தூங்குதல், எழுதல், முகங்கழுவுதல் முதலியனதான்.

உயர்தரம்

நகைச்சுவை என்பதுசிரிப்புத்தான்; ஆனால் உயர்தர நகைச்சுவை ஒரு சொட்டுக் கண்ணீரையும் வரவழைத்துவிடும்

— ஜார்ஜ் பேர்னட்ஷா

'மானங் கெட்டவனே' என்ற குரல் யாராவது, யாரைப்பார்த்தாவது சொன்னது மயிலையின் காதுகளில் எப்பொழுதாவது பட்டால், அவன் ஒரு கணம் திடுக்கிட்டு நிற்பான்; பிறகு விரைவாக நடப்பான்; அப்பொழுது அவன் மண்டையில் சுழலும் இரண்டு வார்த்தைகள்........

'அதனால் என்ன?'

நா. பாண்டுரங்கன்

"மயிலே! என்ன சொன்னாள் மனோரஞ்சிதம்?"

"அவங்க வரமுடியாதாம் இங்கே"

"ஏன்?"

"நீங்கபோகணுமாம் அங்கே'

"நிஜமாவா சொன்னாள்?"

"ஆமாம் எஜமான். சுகம் யாரையும் தேடிப போகாதாம். சுகத்தைத் தேடித்தான்யாரும போகணுமாம...கோபம் துள்ளுச்சு எஜமான், இதைச்சொல்லும்போது, அவங்க பேச்சிலும் முகத்திலும்..."

ஆறுமுகசிவம் அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை. கையைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு பங்களாவின் பெரிய அறையில் சுற்றிச்சுற்றி நடக்கலானார். சிவந்தமேனி—நாற்பத்தைந்து ஆண்டுகளைக் கடந்துவிட்டபோதிலும் முப்பது ஆண்டு மதிக்கக்கூடிய முறுக்கான உடல்கட்டு—கூரான, சற்று நுனியில் சாய்ந்த மூக்கு—தடித்தகீழுதடு—அகன்ற நெற்றி—அலட்சியத்தையும் விளையாட்டையும் தெரிவிக்கும் கண்கள்-காலர் இல்லாத முழுக்கைசில்க்சட்டை. ஜரிகை வேட்டியாலான சோமன்கட்டு—நெற்றி முழுதும் குழைத்துப் பூசப்பட்ட நீறு. அதில் சிறிய சந்தனப் பொட்டு-அதனுள் குங்குமச்குறி - இவர் தான் ஆறுமுகசிவம்! பெரிய கோவில் டிரஸ்டி- "பக்தியானுசாரத்தில் சிறந்தவர்,, என்று பெயர் வாங்கியவர்...... ஆறுமுகசிவம அறையைச் சுற்றிச் சுற்றி நடக்கலானார். புருவ நெறிப்புகள் பூத்துப் பூத்து நெற்றி அலைகளில் புதைந்தன; இடையிடையே சற்று நிற்பார்: பின் நின்ற நேரத்தைச் சரிப்படுத்தவோ என்னவோ வேகமாக நடப்பார். பணிவெல்லாம் உருட்டித் திரட்டி உருவாக்கிவிட்டது

போல வேலையாள் மயிலை சேதியைச் சொல்லிவிட்டு மரமாகி எஜமானையே பார்த்துக் கொண்டு நின்றான். அவனுடைய இமை அடித்துக் கொண்டிருந்தது; மார்பு சற்று வேகமாகவே துடித்துக் கொண்டிருந்தது.

ஆறுமுகசிவம் மாலையில் மயிலையை மனோரஞ்சிதத்தின் வீட்டிற்கு அனுப்பிவிட்டு உடனேயே நினைப்பை அதன் போக்கில் விட்டார்.........

பங்களாவுக்குஎதிரே ஜலஜல வென்ற சத்தத்துடன் இரட்டை மாட்டுவண்டி வந்து நிற்க, அதிலிருந்து கலகல வென்று வளைகுலுங்க மனோரஞ்சிதம் இறங்கிப புன்னகையை உதிர்த்துக் கொண்டே எதிரே வரும்போது எப்படிப் போய் வரவேற்கலாம்?... விழிகளோடு விழிகளைப் பொருத்திக் கொண்டே புன்னகைக்குப் பதில் புன்னகையைக் கொடுத்து விட்டுப் பின்கை யைக் கட்டிக்கொண்டு நின்று கொண்டிருப்பதா? அல்லது, குடுகுடுவென்று எதிரே ஓடி, அவள் இருகரங்களையும் பிடித்துவிட்டு விடுவிடுவென்று உள்ளே இழுத்து வருவதா? அல்லது 'மனோரஞ்சிதம் வா! வா! ... இல்லை ... கண்ணு, வா வா!...என நேரம் இவ்வளவு? உன்னைப் பார்த்துக் கண் பூத்துப் போச்சே...' என்று மட்டும்சொல்லிவிட்டுநிற்பதா? இப்படிப் பலப்பல திட்டங்களை அவர் மனம் திட்டி அழித்துத் திட்டிக் கொண்டிருந்தது...... அதற்கு முன்பே அவர் அறையில் அன்று சற்று புதிய அலங்காரங்கள்செய்திருந்தார். இருநூறு பவர்பல்பை எடுத்து விட்டு, மெர்குரி பச்சைக்குழாய் விளக்கை அமைத்திருந்தார்... அறையின் நான்கு பக்கங்களிலும் எதிர் எதிரே, புதிய உயரமான பளபளப்பான, கண்ணாடி பீரோக்களை நிற்கவைத்திருந்தார்...சுவரில் புதிய சுந்தரமான படங்கள் தொங்கவிடப் பட்டன...மனோரஞ்சிதம் வரப் போகும் நேரம் எவ்வளவு, 'ஏழு மணியா, எட்டா?' ...... இந்தப் பதிலைத்தான் அவர் ஆவலுடன் எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தார். மயிலை வந்தான். பதிலைச் சொன்னான். அந்தப் பதிலைக் கேட்டதும் அவர்மனதில் ஆச்சரியம் உண்டாயிற்று, மின்னலைப்போல; மின்னல் மறைந்ததும் சற்று நேரத்தில் இடி முழுங்குவது போல, கோபம் வெடித்தது அவர் மனதில்...... அறையைச் சுற்றிச் சுற்றி அவர் நடக்கலானார். அவர் கருத்துத் திரையில் ஒரு காட்சி தோன்றியது....

○

கோயிலில் ஒரே கூட்டம்...

ஒரே சத்தம், தீவட்டி ஒளியும் மின்சார விளக்கின் ஒளியும் கலந்து வீசுகிறது. சுவாமியை அம்பாள் சமேதராய் நகைகளாலும் பூக்களாலும் போட்டு நிரப்பிப்படிச் சட்டத்தில் நிற்க வைத்திருக்கிறார்கள்...எதிரே மேடையில் பாட்டுக் கச்சேரி நடக்கிறது. சுவாமியின் அருகில் குருக்கள் வருகிறவர்கள் போகிறவர்கள் கொடுக்கும் வேண்டுகோளுக்கு அர்ச்சனை செய்து கொண்டு இருக்கிறார். பக்கத்தில் வெள்ளிப் பூண் போட்ட பிரம்பை இருகைகளாலும் அடியையும் நுனியையும் பிடித்துக் கொண்டு, அலங்கார புருஷராய், ஜரிகை மேல்துண்டை

இடுப்பில் கட்டிக்கொண்டு டிரஸ்டி ஆறுமுகசிவம் நின்று கொண்டு, கூட்டத்தில் மனக் கிளர்ச்சி யூட்டும் பகுதியைப் பார்த்துக் கொண்டு நிற்கிறுர். சுவாமியின் அருகில் அர்ச் சனைக்காக, ஒரு தாயும் மகளும் வருகிருர்கள்.......

துவைத்துத் துவைத்துச் சாயம் துரத்தப்பட்ட சேலை—சுருக்க அலைகள் சுற்றிப் படர்ந்த இரவிக்கை—இவை களைச் சுற்றிக் கொண்டு தள தளவென்று வளர்ந்து திரண்டு உருண்ட உடல்—காதில் ஒன் றும இல்லை—கழுத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது கருப்பு மணிமாலை ஒன்று-மாலை வெயில் மறைந்ததும், நில வானில் நகைக்க ஆரம்பிக் கிறதே, ஒரே ஒரு முதல் நட்சத் திரம், அதை நினைப்பூட்டும் மூக்கணி — ஆழமான சிறு குளத்தில் அபபடியே அமைதி யுடன் இருக்கும நீரை நினை விற்குக் கொண்டு வரும் கரு விழிகள் — புன்னகை பூக்கும் நேரம் தவிர மற்றெல்லா நேர மும் கவலை கப்பியமுகம்...... .அந்தத் தாயின் பக்கத்தில் இருந்த மகளின் உருவம் இப் படி இருந்தது!—தாயின் முகத் திலோ, விவகார அறிவு விளை யாடியது!! ஆறுமுகசிவத்தின் பார்வை அந்தப் பெண்ணின் மீது பட்டுப்படிந்து அவளையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டுவரமாட்டேன் என்றுவிட்டது. சிலகணங்கள்-பிறகு அவர் பார்வை, அவள் தாயின் மீது பட்டது. அவள் லேசாகச் சிரித்தாள்...அந்தச் சிரிப்பிற்குப் பதில் சிரிப்பைத் தெளித்து விட்டுத் தன் பக்கத் தில் எஜமானையே பார்த்து கட்டளைக்குக் காத்துக் கொண் டிருந்த, மயிலையின் கவனத் திற்குத் தன் விழிகளாலே இதைக் கொண்டுவர, அவன், அவர்கள் அர்ச்சனை முடிந்த தும் போன வழியிலே போய் மறைந்து, பிறகு, உண்மை யைப் பொழிந்தான்! அவர் சிரிக்கிருர்! அந்தப் பெண்—மனேரஞ்சிதம்! கூடவந்தவள் அவள் வளர்ப்புத் தாய்!! அவள் மனேரஞ்சிதத்தைச் சிறுபிள்ளையிலே அனுதையாய் விடப்பட்ட நேரத்திலிருந்து தான் எடுத்து வளர்த்து வரும் நோக்கமே...மயிலை, சொல்லிக் கொண்டிருந்தான் அர்ச்சனை செய்து கொண்டிருந்த குருக் கள், வெள்ளிப் பேலாவில் இருந்து அப்பொழுது தான் அங்கே வந்து கரைத்த புது சந்தனத்தை, ஆறுமுகசிவத் தின் கையில் கரண்டியால் விடு கிருர்; அவர் சந்தனத்தைக் கையில் தேய்த்து, நுகர்கிருர்! மனேரஞ்சிதத்தின் முகம் அவர் மனதில் சிரிக்கிறது. அவளு டைய அப்போதைய நிலைமை யும் நினைப்பில் சிரிக்கிறது.... நடுக்காட்டிலே வளர்ந்து, நாகங்கள் சுற்றிக் கொண் டிருக்க நேர்ந்தாலும், சந்தனம் என்று அது சந்தேகமறத் தெரிந்துவிட்ட பிறகு அது, காட்டிலேயே, கவனிப்பாரற்று கிடந்துவிடும்? நாட்டுக்கு, விழாக்களின் நடுவிலே, அது இழுத்து விடப்பட்டுவிடாதா? அறையிலே சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருந்த ஆறு முகசிவம் தன் மனத்திரையில் அந்தக் கோயில் விழாக்காட்சி யும் அதில் வந்து தோன்றிய மனேரஞ்சிதமும் தெரிந்து கொண்டிருக்கக் கண்டார்.

அதற்குப் பிறகு—

சுருக்கு வழியிலே சுலபமாகச் சுகத்தைச் சுற்றிப் பிடித்துக் கொண்டு விட்டதாகச் சொல்லிச் சொல்லிச் சிரித்தார் ஆறுமுகசிவம்! இதையேதான், எந்த வார்த்தையையும் எடுத்து விடாமல் அப்படியே சொல்லி, மனோரஞ்சிதத்தின் 'தாயும்' அவளும் சிரித்தனர்! இதைப் பார்த்துக் கடகட வென்று சிரித்துக் கொண்டே காலம் உருண்டு ஓடியது! இப்போது, மனோரஞ்சிதம்—சிரிப்பு சிரிப்பு, அவள் வதனத்தில், விழிகளில், கூந்தலில் கூத்தாடும் மலர்க்கொத்தில்! கழுத்திலும் கரத்திலும் விளையாடும் பொன் அணிகளின் ஒளி, உடலில் சுற்றிக் கொண்டிருக்கும் பட்டின் ஒளியைப் பார்த்து நகைப்புப்போர், நாளும் நாளும நடத்திற்று. குடிசை, அழகிய சிறு பங்களாவிற்கு வழி விட்டு விட்டு மறைந்தது...... பட்டை தீட்டப்பட்ட வைரமாக மட்டுமல்ல, பத்தரை மாற்றுப் பவுன் பாதுகாப்பில் பதிக்கப் பட்ட வைரமானாள் மனோரஞ்சிதம்!

வேலைக்காரன், மயிலைதான் மனோரஞ்சிதம் வீட்டிற்கும், ஆறுமுகசிவம் வீட்டிற்கும் இடையே இருந்த இடத்தை 'இல்லாமல் செய்த' 'டெலிபோன்!' அவர் விரும்பும் போதெல்லாம் அவள் அவர் தனி பங்களாவிற்கு வந்து போவாள். அவள் அங்கேவரும் போது வானத்தில் நிலவு வந்து வரவேற்கும்; போகும் போதோ, தடாகக் கமலங்கள் சிரித்து வழியனுப்பும்! இது வாடிக்கை!...

எப்படியோ என்றுமில்லாமல் இன்றுவரை, இருபது நாட்களுக்கு மேலாகவே ஆய் விட்டன, மனோரஞ்சிதத்திற்கு அழைப்பு அனுப்பி! இந்த இடைவேளை வழக்கத்திற்கு மாறானதுதான். புதிய சிரிப்பொலிகள், குலுங்கும் வளையொலிகள்.துவளும் இடைகள், துடிக்கும் அதரங்கள, வெட்டும் பார்வைகள், கட்டியணைக்கும் தளிர்க்கரங்கள், புதிது புதிதாக அவருடைய பங்களாவிற்குக்,கோயிலில் விழாக் காலமானதால், வந்துபோனதே, இந்த இடைவேளை நீண்டதற்குக் காரணமாய்விட்டது!... இன்று மனோரஞ்சிதத்திற்கு அவசர அழைபபு அனுப்பினர். அவன் கொண்டுவந்த பதில் தான்.......

ஆறுமுகசிவம் அறையைச் சுற்றி நடக்கலானர்; அங்கே அவரையே பார்த்துக்கொண்டு ஒரு ஓரத்தில் மயிலை நின்று கொண்டிருந்தான். அவன் தான் நின்று கொண்டு இருந்தானே யொழிய, அவனுடைய மனம் சுற்றி வந்து கொண்டிருந்த அவருடனே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. அவருடைய நெற்றியலைகளும் புருவநெறிப்புகளும் மறையும் நேரத்தை எதிர்பார்த்து எதிர் பார்த்து அவன் மனம் ஏங்கியது; அதில், ஏமாற்றம் முளைத்துச் செடியாகி மலர்ந்து நாலுபக்கங்களிலும் துயர மணத்தைப் பரப்பியது. அவன் மனைவி அன்று அவனிடம் மாலையில் கோபத்துடன் கொட்டிய அந்த வார்த்தைகள்.......

"போயேன்!... பயப்படுத்திப் பார்க்கிறியோ ...... தொலைஞ்சு போயேன், கல்யாணமே ஆகலேன்னு நினைச்சிக்கிறேன்—— ஒரு கலக்கமும்......"

"அரிசிக்குத் தான் பணம் இல்லே, அனல்போலக்காயுது குழந்தைக்கு ரெண்டு நாளா உடம்பு ... வயித்தியர் கிட்டக் காட்டவாவது பணம் வேண்டாம்......"

"சாப்பாட்டுக்குச் சம்பாதிக்கத் தெரியாத ஆள் ஏன் இப்படி என்னே ஜம்பமாக் கல்யாணம் செய்து கிட்டு எப்போதும் இப்படி வதைக்கணும்?"

"பணம் இல்லாமே, இராத்திரிக்கு வீட்டிலே காலடி எடுத்து வைக்காதே...பணம் இல்லாமே..."

தூரத்தில் தெளிவில்லாமல் வந்து கொண்டிருக்கும் ஒலியை நோக்கி நெருங்கிச் செல்லச் செல்ல அது மிகமிகத் தெளிவாகி, இன்னும் அருகே வந்து விட்ட பிறகு காதையே குடைந்தெடுக்கும் ஒலியாகி விடுகிறதல்லவா, அதுபோல, மயிலேயின் மனம், நினைவுப்பாதையில் தன் மனேவி சொன்ன வார்த்தைகளுக்கு அருகே நெருங்கிச் சென்று வந்துவிட்ட பிறகு, அவ்வார்த்தைகள் அவன் கருத்துக் காதைக் குடைய ஆரம்பித்து விட்டன!......முதலாளியைப் பற்றி அவனுக்கு நன்ருகப் புரியும். சந்தோஷமாக அவர் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் போது, சமயம் பார்த்துச் சம்பாஷணைச் சந்தில் தன் பணவேண்டுகோளே நுழைத்து விட்டுவிட்டால் அதுகட்டாயம் ஜயத்துடன் திரும்பி வரும் என்பது, அவனுடைய அனுபவம்! ஆனுல், அன்ருே என்றுமில்லாத கோபத்திற்குரிய நிகழ்ச்சி எப்படியோ நடந்து விட்டிருக்கிறது. அவருடைய மனமோ, எண்ணெய்க் கொப்பரையாகி இருக்கிறது. அதிலே அவன் தன் வேண்டுகோள் தண்ணீரைத் தெளித்தால், கொதிக்கும் எண்ணெய் எல்லாம் மேலே தெறித்து, முகத்தையெல்லாம் ...... அது அவனுக்குத் தெரியும்......அதனுல் தான், அவன் அவர் முகத்திலே புன்னகையை எதிர் பார்த்து நின்ருன்,......

ஆறுமுகசிவம் மனேரஞ்சிதத்தின் அந்தப் புதிய போக்கை நினைப்பார். அவர் மனதில் கோபத்தீ கொப்பளித்துப் பரவும்! தலேயைச் சிறிது சாய்த்துக் கொண்டு, ஒரு கண்ணேச் சிறியதும் மற்ருெரு கண்ணேப் பெரியதுமாகச் சுளித்துக் கொண்டு, குறும்பைக் கொட்டிக் கொண்டு வெளிவரும் அந்தச் சிரிப்புடன் கூடிய மனேரஞ்சிதத்தின் மயக்கு முகம் அவர் மனத்தில் உடனே மலரும்!...அது பொழியும் ஆசைமழை முன்பு கொப்பளித்த கோபத்தீயை அடியோடு அணேத்துவிடும். நீருக்கும் நெருப்புக்கும் இடைவிடாத போராட்டம் அவர் மனத்தில் நடந்து கொண்டிருந்தது!...

அவர் பங்களாவின் வாயிலில், வந்து நின்ருர். அவர் பின்னுலேயே மயிலேயும் வந்து நின்ருன், கையைக் கட்டிக் கொண்டு! வெளியே அங்கே பகல்போல மின்சார விளக்கு ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது! குளிர்ந்த காற்று குப்பென்று அவர் மீது வீசியது; எதிரே மரங்களின் கிளேகள் வழியே வானத்தில் கிளம்பிக் கொண்டிருந்த நிலவு தெரிந்தது!...ஏதோ ஒருவித ஆறுதல் அவர் மனத்தில் தோன்றி

யது......பங்களாக் கைப்பிடிச் சுவரின் பக்கமாக வந்த 'கல் கல்' என்ற மணியோசையைக் கேட்டு, அவர் அவரையும் அறியாமல் இரண்டு அடி முன்னே வந்து நின்றார்...அவருக்கே ஆச்சரியமாக இருந்தது... எதிரே, வண்டியிலிருந்து இறங்கி, அலங்காரவல்லியாய், குதிப்பும் சிரிப்புமாக, மனோரஞ்சிதம் மட்டும் தனியே இவரை நோக்கிவந்து கொண்டிருந்தாள்! தேனைச்சுற்றிக் கூடிமொய்த்துக் கொண்டிருக்கும் ஈக்களின் அருகே, ஒரு சிறு கல்லைப்போட்டதும், உடனே எல்லா ஈக்களும் பறந்து விடுகின்றன அல்லவா அதுபோல, அவர் மனத்தில் அவள் மீது அவர் வைத்திருந்த ஆசைத்தேனைச் சுற்றி மொய்த்துக் குடித்துக் கொண்டிருந்த வெறுப்பு, கோபஈக்கள் அவள் எதிரே தோன்றிய உடனேயே பறந்து மறைந்தன... அவர் அவள் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு அறையினுள்ளே நடந்தார். மயிலையின முகத்தில் புன்னகை பூத்தது. உடனே அதுமறைந்தது. அவர் வெளியே எதற்காவது வந்தால் ஆயிற்று, இல்லாவிட்டால் அவன் எப்படி அவரிடம் தன்பண வேண்டுகோளை விடுவது?.. அவன தவித்தான். மின்சார விளக்கின பச்சை ஒளியில் மூழ்கி, நின்று கொண்டிருந்த மனோரஞ்சிதத்தின் தோள்களில் தன இருகைகளையும் வைத்து அழுத்தியபடியே அவள் கண்களைப் பார்த்து ஒரு நிமிஷம் அப்படியே நின்று கொண்டிருந்தார். உடனே, சிரித்துக் கொண்டிருந்த அவள் அவர் பிடியினின்றும் விலகி, வெளியே நடந்து கொண்டேவிஷயத்தைச்சொன்னாள். அவர் நரம்பிலெல்லாம் நகைத்து நடந்து கொண்டிருந்த இன்ப அருவி பெருக்கெடுத்தது. அவளைத் தடுத்து நிறுத்த ஆரம்பித்தார் அவர். அவளும் அம்மாவும் புகைவண்டி நிலையத்திற்கு வந்தார்களாம், அம்மாவின் தூரபந்து ஒருத்தியை அழைக்க. அப்படியே போகும் வழியில் அவள் பங்களாவில் தான் சொன்ன வேடிக்கைப் பதிலினால் கோபமடைந்திருந்தால் அதைத் தீர்த்து விட்டுப் போவதற்காக வந்தாளாம் அங்கே. மனோரஞ்சிதத்தைப் பிடித்து இழுத்தார் அவர். அதற்குள் அங்கே அவள் தாய் தோன்றிச் சிரித்துக் கொண்டே ஏதோ சொல்லிவிட்டு அவளை அங்கிருந்து அப்பொழுதே அழைத்துக் கொண்டுபோய் விட்டாள்.

ஆறுமுகசிவம் அப்படியே சிலையானார். பங்களாவின் வாயிலில் நின்று கொண்டு தாயும மகளும்போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். சில கணங்களில் வண்டிபோவதின் கல கல மணியோசை கேட்டது. மனோரஞ்சிதம் போய் விட்டாள்! தாகத்தை அதிகப்படுத்தி விட்டுத் தண்ணீர்க குவளையை எதிரே நீட்டி, வாயின் அருகே கொண்டுபோகும் போது, குவளையைப் பறித்துக்கொண்டு ஒடி, தண்ணீரின் மகத்துவத்தை அதைச் சாதாரணமாகக் கருதுபவருக்கு நன்கு உணரவைக்க வேண்டும் என்று அவர்கள் போட்ட திட்டம் மகத்தான வெற்றி பெற்று விட்டதைக் கண்டு, மனோரஞ்சிதமும் அவள் 'அம்மாவும்' வயிறு குலுங்கச் சிரித்துக்

கொண்டே வண்டியில் போய்க் கொண்டிருப்பதை, பாவம், ஆறுமுகசிவம் எப்படி அறிவார். வேட்கை வேட்டையாடிக் கொண்டிருக்கும் உள்ளத்தோடு அவர் பங்களாவின் உள்ளே நுழையத் திரும்பினர். மயிலே பணிந்த பார்வையுடன் சிரிப்பு ரேகையைச் சிரமப்பட்டு முகத்தில் வரவழைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ...ஆறுமுகசிவம் ஆச்சரியத்தால் அப்படியே நின்று விட்டார்... மாசு படிந்த உடை தான் என்ருலும், பேசும் கண்கள், ஆசையைக் கிளறிவிடும் மார்பு—சிவந்த மேனி— ஆறுமுகசிவத்தின் விழிகள் மயிலேக்குப்பக்கத்தில் நின்றுகொண்டிருந்த வடிவழகியின் உருவைக் குடித்துக்கொண்டு நிலேத்து விட்டன! அவள், நாணத்தாலோ, பயத்தாலோ, அருவருப்பாலோ, எதனுலோ, தன் தலேயைக் கீழே கவிழ்த்தாள். அவரின் பார்வை மயிலேயினிடம் வினு அம்புகளே வீசுவதற்கு முன்பே, அவன் தழுதழுத்த குரலேச் சரி செய்து கொண்டு பேச ஆரம்பித்தான்.

"எஜமான்!... இவ ......என் பெண்ஜாதிங்க ...... வீட்டிலே விருந்தாளிகளெல்லாம் வந்திருக்காங்களாம்...என் கிட்டே சொல்லி, எஜமான்—உங்கக் கிட்டே கொஞ்சம் பணம் வாங்கிவரச் சொல்லரதுக்காக எப்படி, எப்படியோ வழியெல்லாம் விசாரித்துக்கிட்டு இங்கே ஓடியாந்திருக்கா...அடியோட வீட்ல பணம் இல்லே—அதனுலேதான்—"

மயிலே இப்படிச் சொல்லி முடிப்பதற்குள்ளேயே, ஆறுமுகசிவம், அங்கே நின்று கொண்டிருந்த மயிலேயின் மனைவி, வல்லியைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே பேசலாஞர். மயிலே, ஆறுமுகசிவத்தின் உதடுகளின வழியே வெளிவரப்பேகும் வார்த்தையைக் கண்களால் கண்டு விடுபவன் போல, அவர் வாயைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான்.

"சரி! சரி!—வெளியே போகனும், மாடியிலே ஓடி வெள்ளிப் பூண் போட்ட என் பிரம்பை எடுத்துவா—"

"பணம் எஜமான்!"

"இதோ தரேன். நீ போய் அதை எடுத்து வா"

ஆறுமுகசிவம் பங்களாவின் அறைபபக்கம போக உள்ளே நுழைந்தார். மயிலே மாடிக்கு ஓடிஞன். வல்லி வெளியிலே பங்களாவின வாயிலில் நின்று கொண்டிருந்தாள்! ....பணம் கிடைக்கப்போகிறது என்ற பரவசத்தால் மயிலே பரபரவென்று மாடியில் இங்கு மங்கும் பிரம்பைத் தேடிஞன். மேசையின்மேல் பார்த்தான். அலமாரி திறந்திருந்தது; அதில் பார்த்தான்—இங்கே பார்த்தான் அங்கே பார்த்தான. எங்கேயும பார்த்தான். அவன் எவ்வளவு அவசரத்தில் பிரம்பு கண்ணில் பட வேண்டும் என்று தேடிஞனே, அவ்வளவு அவசரத்தில் அது அங்கே எங்கேயும் காணப்படவில்லே—மாடிப்படிகளிலே பாதி தூரம் கீழே இறங்கி வந்தான்... மீண்டும் தடதட வென்று ஏறி மற்றுமொரு முறை விழிகளே அங்கே எங்கேயும் [illegible] விட்டுக் கீழே இறங்கி [illegible]

பிரம்மசாரி

பிரம்மசாரியாக, உண்மையான பிரம்மசாரியாக நீ இருந்து பார்த்திருக்கிறாயா? வேறு ஓர் உயர்ந்த இலட்சியம் உனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, உன்னை அப்படியே விழுங்கி விடா விட்டால் பிரமமசரியம் உன்னைக் கொன்று விடும். உன்னை மிருகமாக்கி, உனது உள்ளத்தைப் பேயாகச் சிதற அடித்து விடும்.

— புதுமைப்பித்தன்

வெறுங்கையுடன் திரும்பினான். —பங்களாவின் வாயிலில் விளக்கின் பிரகாசத்தில் அவன் கண்ட காட்சி— மின்னல்கள் வீசின! இடிகள் முழங்கின — எரிமலைகள் வெடித்தன — புலிகள் உறுமின—வெள்ளம் பெருக்கெடுத்தது—சூறாவளி வீசியது—... எல்லாம மயிலையின மனதில் ஒரு விநாடி சுற்றிச் சுற்றிச் சுழன்றன, வல்லியை இறுககியிருந்த தன் கரங்களை மயிலையின் காலடியோசை கேட்டு, ஆறுமுகசிவம் எடுத்து விட்டு நின்றார். வல்லியின கண்களில் லேசாகக் கண்ணீர் துளிர்த்திருப்பதுபோல் தென்பட்டது. அவள் மார்பு துடித்துக்கொண்டிருந்தது. ஆறுமுகசிவம், தன் பையில் கையைவிட்டு மயிலையின் முகத்தைப் பார்க்காததுபோல் ஒரு கட்டு கரன்ஸி நோட்டைக் கொடுத்தார்——கீழே விழப் போன அந்த 'நோட்டுக் கட்டை' மயிலை 'சாமர்த்தியமாய்ப்' பிடித்துக் கொண்டான்—அவன் மனதில் வீசிய மின்னல்கள்—இடிதத இடிகள —எல்லாம எங்கோ போய் மறைந்து விட்டன.

“மயிலை!—உன் பெண் ஜாதி சும்மா தானே இருக்கா—தினம் சாயந்திரம் பங்களாவைக் கூட்டிட்டுப் போகச் சொல்லு —மாசம் சம்பளம் வாங்கிக் கலாம—” ஆறுமுகசிவம் பேசி விட்டு உள்ளே போய் விட்டார் ——நாட்கள் உருண்டு நகர்ந்தன!... இபபோது ——'வல்லி பங்களா கூட்டும் வேலையில் இருக்கிறாள் — அங்கே போகும் போது கண்ணாடியில் நான்கைந்து முறை முகத்தைப் பார்த்துவிட்டு, கூந்தலில் பூ வைத்துக் கொண்டு, தாம்பூலம் போட்டு உதடுகளைச் சிவப்பாக்கிக் கொண்டு போகிறாள்!———ஆறுமுகசிவத்தின் 'இன்ப அலமாரியில்' இன்னுமோர் 'புததகம்' சேர்ந்து விட்டது!— 'மானங்கெட்டவனே' என்ற குரல், யாராவது யாரைப் பார்த்தாவது சொனனது, மயிலையின காதுகளில் எப்பொழுதாவது பட்டால், அவன் ஒருகணம் திடுக்கிட்டு நிற்பான்...பிறகு விரைவாக நடப்பான்; அப்பொழுது அவன் மண்டையில் சுழலும் இரண்டு வார்த்தைகள் 'அதனால் என்ன!' என்பதுதான்!

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

23. வாழ்த்துக்கள்

பூம்புகார் நகரில் வாழ்ந்த நாளில் கண்ணினும் இனியளாய்க் கண்ணகிக்கு வாய்த்த தோழி தேவந்தி. மதத்தால் கண்ணகிக்கு இவள் மாறுபட்டவள். எனினும் மனத்தால் ஒன்றுபட்டவள். கோவலன் பிரிவால் நேர்ந்த துன்பத்தை அருகிருந்து கண்ணகிக்கு ஆற்றுவித்தவள் இவளே. இத்தகைய தேவந்தி கண்ணகியின் முடிவு கேட்டாள். கண்ணீர் சொரிய வாய்விட்டுப் புலம்புகிறாள்: முன்பொரு நாள் கண்ணகி தீய கனவொன்று கண்டு என்னிடம் சொன்னாள். ஐயோ அதை நினைக்கவும் என் நெஞ்சு உருகிறது. கண்ட கனவு கண்ணகிக்குப் பலிக்குமென நான் நினைக்கவில்லை. அது என் பேதைமை. பத்தினி கண்ட கனவு பலித்து விட்டது. கணவனைத் தன்னிடமிருந்து பிரித்து நாளெல்லாம் கண்ணீர் பெருக வைத்த மாதவியின் செயலெதிலும் கண்ணகி சினம் கொண்டதில்லை. எத்தகைய மேலான உள்ளம். அதை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் அவளுக்கு இணையாக அவளைத் தான் சொல்ல நேரும். கணப்பொழுதில் நிகழ்ந்த மனமாற்றம் கணவனை மாதவியிடமிருந்து கண்ணகியிடம் கொண்டு சேர்த்தது. அப்பொழுதும் மாதவியைப் பற்றியொரு பழிச்சொல்லும் சொல்லவில்லை. இன்பத்தையும் இணையற்ற துன்பத்தையும் கண்ணகி சமமாய் நோக்கினாள். கணவன் மதுரை செல்ல எழுக என்றதும் கடுங்கானில் அவன் கைப்பிடித்து நடந்தகன்றாள். பெற்ற தந்தை தாயினும் உற்ற பெரும் பொருளாய்க் கண்ணகி கொண்டதெல்லாம் தன் கணவனைத் தான். இல்லையானால் புகாரை விட்டு அவள் புறப்பட்ட சமயத்தில் இனிய தந்தையிடம் ஈன்றெடுத்த தாயிடம் இணைபிரியாத என்னிடம் சொல்லிப் போகலாமல்லவா? தாமரையிலுள்ள தண்ணீர் போலப் பற்றற்றுப் பழகினாள் கண்ணகி.

மதுரையில் கோவலனுக்குக் கொடுமை விளைவித்த பாண்டியன் உயிர் விட்டான். புகாரில் மாசாத்துவானும் மாநாய்கனும் ஈட்டிய செல்வத்தை இரவலர்க்கு வழங்கிக் கோவலன் பிரிவால் துறவு பூண்டனர். கண்ணகியின் அன்னையும்,

மாமியும் உயிர்விட்டு உடல் மறைந்தனர். போதியின் கீழ் அமர்ந்த மாதவன் முன்னே மாதவி துறவு பூண்டாள். மணிமேகலையையும் துறவு பூணச் செய்தாள். நானும் இதோ என கண்ணகியைக் கண்டடைவேன்.

முடிமன்னர் மூவரும்
  காத்தோம்புந் தெய்வ
வடபேரிமய
  மலையில் பிறந்து
கடுவரல் கங்கை
  புனலாடிப் போந்த
தொடி வளைத் தோழிக்குத்
  தோழிநான் கண்டீர்
சோணாட்டார் பாவைக்குத்
  தோழிநான் கண்டீர்

என்று கூறியவளாய், காவற் பெண்டுடனும், அத் தோழியுடனும் மதுரையை நோக்கிப் புறப்பட்டு விட்டாள். கோவலன், கண்ணகி, மாதவக் கவுந்தி மூவரும் மதுரை நோக்கி அன்று புறப்பட்டது போல இன்று இம் மூவரும் செல்லக் காணுகிறோம். அதே சமயத்தில் அம் மூவரும் மறைந்தது போல் இம்மூவரும் மறைந்து விடுவரோ என்று நாம் எண்ணவுங் கூடும். கவி அதை வெளிப்படையாகக் கூற வில்லையாயினும் குறிப் பால் பெற வைத்திருக்கவே காணுகிறோம்.

இனி தேவந்தியின் வாக்கிலே பிறந்த கருத்தை நோக்கலாம்:

புகார் நகரில் பிறந்த கண்ணகியின் புதிய மறு பிறப்பைப் பற்றிப் பேசுகிறாள். அது இமயத்தில் பிறந்து கங்கைப் பெரும் புனலில் நீராட்டி எடுத்த அவள் புகழ்ச் சிலை பற்றியது. பெரும்பாலும் உண்மை வேறாகவும், கற்பனை வேறாகவும் அமைந்து விடுவதைப் பல கவிஞர் கருத்துக்களில் நாம் கண்டுவந்திருக்கிறோம். ஆனால் இங்கே கற்பனை உண்மை நிகழ்ச்சியிலிருந்து நயமாய் உருவாகியிருக்கிறது. ஒரு குறை சொல்லலாம். தென்னாட்டுக் கண்ணகியாரை வடநாட்டில் பிறந்ததாய்க் கற்பனை உருவாகிறதே, ஆரியப் பெண்ணாகிய தேவந்தி அப்படிச் சொல்லத்தானே எண்ணுவாள் என்றும் குறைகளைச் செய்து கூறலாம். இதற்கு ஒரே ஒரு சமாதானந்தான் சொல்ல முடியும். சேர வேந்தரின் உள்ளத்திலிருந்துதான் சிலை பிறந்தது என்ற அடிப்படையான எண்ணத்தை நாம் மறத்தல் கூடாது. தென்னாடேயன்றி வடநாடும் கண்ணகி வரலாற்றை அறிய இமயத்தில் எடுத்த கல்லே காரணமாயிற்று அல்லவா? எவ்வாறு நோக்கினும் தேவந்தியின் சொற்கள் இந்த எண்ணத்தை மறைத்து விடவில்லை.

எரிந்த மதுரையை எதிர்நோக்கி வருகிறாள் தேவந்தி. ஆயர்பாடி வந்து அணுகினாள். ஐயை என்பாளைக் கண்டாள். 'அடைக்கலமாய்க் கவுந்தி தந்த கண்ணகியாரைக் காவாத பாவியானேனே' என்று சொல்லி மாதரி மடிந்த செய்தியை ஐயை சொல்ல அறிந்து வைகைக் கரை வழியே கண்ணகி சேரநாடு சென்றதையும் தெரிந்து கொண்டாள். நகர்ந்து விட்டாள். ஐயையும் தேவந்தியைப் பின் தொடர்ந்தாள். இனி ஆயர்பாடியில் அவளுக்கு என்ன வேலை?

இங்கே ஒன்றை நாம் அறிய வேண்டும். ஐயை ஆயர்பாடியில் கண்ணகி தங்கிய சில நாளில் அவளுக்குத் தோழியாய்ப் பழகியவள். சில நாள் பழகிய அன்பே, ஐயை என்பாளை வைகை வழியே சென்று மலைநாடு புகுந்து கண்ணகியாரைக் காணத் தூண்டியது என்றால் பலநாள் பழகிய தேவந்தி அவளைக் காணத் துடியாய்த் துடித்ததில் வியப்பில்லை தான்.

இவ்வாறு புறப்பட்ட இவர்கள் எல்லோரும் மலை நாட்டிலுள்ள திருச்செங்குன்றென்னும் மலையின் உச்சிமீது ஏறிக் கண்ணகி கோட்டத்தை அடைந்தனர். கண்ணகிக்கு விழாவெடுக்கும் செங்குட்டுவனுக்குத் தங்களைத் தாங்களே அங்கு அறிமுகப்படுத்திக் கொண்டனர். அவ்வாறு அறிமுகப் படுத்திக்கொண்ட தேவந்தியின் சொற்களைத் தான் சில வரிகளுக்கு முன்னே வந்த பாடலில் நாம் கண்டோம். இனிமையாய், அமைதியாய் இதுவரையும் கேட்டு நின்ற செங்குட்டுவனின் கண்ணெதிரே மின்னலென ஒரு உருவெளித் தோற்றம் கணப்பொழுது தோன்றி மறைந்தது.

என்னே! இஃதுஎன்னே!
  இஃதென்னே! இஃதென்னே
பொன்னஞ் சிலம்பில் [கொல்!
  புனைமே கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றேட்டு
  காவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று
  மீவிசும்பில் தோன்றுமால்

என்ன வியப்பு! பொன்னாலாகிய சிலம்பணிந்தும் புனையப்பட்ட மேகலை பூண்டும் வளையலணிந்த கையும் வயிரமிழைத்த தோளணியும் பொருந்திய பொற்கொடியொன்று வானத்தின் மீது காட்சி தந்தது கண்டு சேரன் வியப்பில் மூழ்குகிறான். அதே சமயத்தில் 'தென்னவன் தீதிலன்' என்றும் தன்னை அவன் மகள் என்றும் 'வெள் வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன், என்னோடும் தோழியீர் எல்லீரும வம்மெல்லாம்' என்ற கண்ணகியின் வார்த்தைகளும் சேரனின் செவியகம் புகுந்தன. உடனிருந்து கேட்ட வஞ்சி நகர மகளிரெல்லாம் கண்ணகியாரின் தோழியராயினர். கூடிக் கை கோர்த்துக் குதூகலித்தனர்.

வஞ்சியீர் வஞ்சி
  யிடையீர் மறவேலான்
பஞ்சடி யாயத்தீர்
  எல்லீரும் வம்மெல்லாம்
கொங்கையால் கூடல்
  பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப்
  பாடுதும் வம்மெல்லாம்;
தென்னவன் தன்மகளைப்
  பாடுதும் வம்மெல்லாம்;
செங்கோல் வளைய
  உயிர்வாழார் பாண்டியரென்(று)
எங்கோ முறைநா
  இயம்பஇந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப்
  பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் தன்மகளைப்
  பாடுதும் வம்மெல்லாம்;

என்று பாடினர், ஆடினர், பாட்டிசைத்து வஞ்சிநாட்டுப் பாவையரை அழைத்தனர். அணி அணியாய் அங்கு வந்து கூடிய மயிலினமாதரை நோக்கிச் செழியனைச் சிலம்பால் வென்று, கூடலைத் தன் கொங்கையால் அழித்த பத்தினியைப் புகழ்ந்து பாடு

வோம். தென்னவன் தன் மகளைப் பாடுவோம். செங்கோல் வளைய, உயிர்வாழாப் பாண்டியர் எனச் சேரரால் சிறப்பிக்கப் பட்டு வஞ்சி நாடடைந்த பாவையைப் பாடுவோம் என்றனர்.

கண்ணகியின் சினத் தீயிலே மதுரையின் தீய சக்தியனைத்தும் சாம்பலாகி விடுகின்றன. புடம்போட்ட பொன்னைப் போல் மதுரை நகரம் சுடர் விட்டு இப்பொழுது விளங்குகிறது. அப்படியே செழியனையும் சிலம்பால் வென்று மன்னர் குல மாணிக்கமாய் அவனை என்றென்றும் நின்று நிலவச் செய்து விட்டாள் எனப் பெண்டிர் குலம் வாழவந்த பெண்ணரசியை ஏற்றி எடுத்துப் பாடியது நிரம்ப இயைபுடையதாகிறது.

தொல்லை வினையால்
துயருழந்தாள் கண்ணி(ன்)நீர்
கொல்ல உயிர் கொடுத்த
கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி
வருபுனல்நீர் வையை
சூழு மதுரையார்
கோமான்தன் தொல்குலமே

என வையை நாடனை வஞ்சி மகளிர் வாழ்த்தினர். அவன் மரபு வழிவழி சிறக்க ஏத்தினர். பின்னர் மலையரசாகிய இமயம் பெற்ற கண்ணகியாரின் புகழ்ச்சிலையைத் தங்கள் வஞ்சி நாடாளும் சேர வேந்தர் நிலவரசர் முடிமீது சுமத்திய சிறப்பை

மலையரையன் பெற்ற
மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிமேல்
ஏற்றினாள் வாழியரோ
வாழியரோ வாழி
வரும்புனல்நீர்த் தண்பொருநை
சூழ்தரும் வஞ்சியார்
கோமான்தன் தொல்குலமே

என்று பலவாறு பாராட்டினர். காவிரி நாடனாகிய சோழனைத் தம் பாட்டிலே வைத்துப் பாடினர். இங்ஙனம் சேர சோழ பாண்டியராகிய தமிழக வேந்தராகிய மூவருமே வஞ்சி நகர மகளிர்களால் ஏற்றத் தாழ்வின்றிப் போற்றப் படுகின்றனர்.

மகளிர் விளையாட்டில் அம்மானை என்பதொன்று உண்டு. இருவர் விளையாடும் பொழுது ஒன்றுபற்றி ஒருவர் வினவவும் மற்றொருவர் அதற்கு விடை கூறுதலும் பண்டை மரபாகும். வினாவை யடுத்து அம்மானை என்ற சொல் வரவும் அதைப் போல் விடையை அடுத்து அம்மானை என்று வரப் பாடுவதும் இயல்பு. ஆடிக்கொண்டே இங்ஙனம் பாடுவர். பாடுங்கால் தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விப்பர். காவிரி நாடனைப்பற்றி வஞ்சி மகளிர் இத்தகைய அம்மானைப் பாடல்களை இனிமையாய்ப் பாடுகிறார்கள், பாடிக்கொண்டே சில மகளிர் பந்தாடுகிறார்கள். அந்தப் பாட்டில் பாண்டியனாரின் பழம்புகழும் மின்னலிட்டுப் பின்னிவருகிறது. வேறு சில வஞ்சிநகர மகளிர்கள் பொன்னாலும் மணியாலும் பொலிந்த ஊசலிலிருந்து தங்கள் சேரனை வாழ்த்தி ஊஞ்சல் ஆடினர்.

வன்சொல் யவனர்
  வளநாடு வன்பெருங்கல்

தென்குமரி யாண்ட
  செருவில் கயல்புலியான்

மன்பதைகாக் குங்கோமான்
  மன்னன் திறம்பாடி

மின்செய் இடைநுடங்க
  ஆடாமோ வூசல்

விறல்வில் பொறிபாடி
  ஆடாமோ ஊசல்

யவனர் வளநாட்டையும் இமயப் பெருமலையையும் தென் குமரியையும ஆண்ட சேரர் கோமான திறங்களைப்பாடிக் காரபோலுங் கூந்தல் அலை அலையாய்க் காற்றினூடே மிதந்துவர, காதிலணிந்த மக ரந்தக் குழை அசைந்துவர, மின்னலிடை துவள ஊசலாடு வோம். வெற்றி நல்கும் வில் லின் திறம் புகழ்ந்து ஊசலா டுவோம் எனப்பாடி ஊஞ்சல் ஆடுவாராயினர், அம்மானை யாடியும், பந்தாடியும், ஊஞ்சல் ஆடியும் பிரிந்து நின்ற மகளிர் எல்லோரும ஒன்று கூடி வள் ளைப் பாட்டுப் பாடி வாழ்த்தி முடித்தனர். சேர வேந்தன் ஏராளமான நிலங்களை மானிய மாகக் கண்ணகி கோட்டத் திற்கு வழங்கினன்.

இதன் பின்னர் மணிமேக லையின் வரலாற்றை வினவிய சேர வேந்தருக்குத் தேவந்தி எடுத்துக் கூறினள். பின்னர் சேரனும் மாடலனும் ஏனைய பிறரும் அங்கிருந்து நகர்ந்த னர். இளங்கோ அடிகளும் அவர்களைப் பின் தொடர்ந் தார். அப்பொழுது தேவந்தி ஆவேசமடைந்து, அடிகளை நோக்கி: வஞ்சி நகரத்து மணி மண்டபத்தில் தந்தை சேரலா தன அரசு வீற்றிருக்க நீ செங்குட்டுவனுடன வீற்றிருந் தாய். அப்பொழுது அரசனுதற் குரிய இயல்பனைத்தும உனனி டமே இருப்பதாய் நிமித்திகன் கூறினன். நீ சினந்து அவனை நோக்கி 'என் அண்ணன் இருக்கையில் முறைகெடக் கூறினாய்' என்று சொல்லி அவனை உறுத்து வெறுத தாய். அண்ணனை அரசாள அன்றே நீ துறவு பூணடாய். குணவாயில் கோட்டத்திலே துறவுபூணடிருந்த துறவிகள் முன்னிலையில் அரசாளுமை சுமையை அகற்றிவிட்டு அவர் களுள் ஒருவனுகிவிட்டாய். அந்தமில் இன்பத்தை ஆளும் துறவரசாகிச் சிறந்தாய் என்று கூறினள்.

சிந்தை செல்லாச்
  சேணெடுந் தூரத்து

அந்தமில் இன்பத்
  தரசாள் வேந்தென்று

என்திறம் உரைத்த
  இமையோர் இளங்கொடி

எனக் கண்ணகியாரே தேவந்தி மீது ஆவேசம் பூண்டு தம்மெதிரே தம்மைப் பற்றிப் பேசியதாகக் கூறு கிருர் இளங்கோவடிகள்.

இனி உலகத்தவர்களுக்கு அரியபல நீதிகளைக் கூறி அடி கள் தம் ஒப்புயர்வற்ற காவி யத்தை முடிக்கிருர்.

சிலப்பதிகாரக் காட்சிகள் நிறைவுற்றன

மலர்ச்சரம்

— என். எஸ். இளங்கோ —

தாசி மோகனா! அவள் மட்டும் அழகாயிருந்தால் போதுமா? அவள் வீட்டின்தோற்றமும் எடுப்பாய் இருந்தால் தானே அவளுக்கு மதிப்பு? கோயில் தர்மகர்த்தா வேனாயகம் பிள்ளையின் அருளிருக்கும போது எது தான் நடவாது?

அந்தத் தெருவிலேயே உயர்ந்த வீடு தாசி மோகனாவினுடையது தான். அவள் வீட்டுக்கு நாலைந்து வீடு தள்ளி பூக்கார முனியனின் குடிசை இருந்தது. குடிசையின் பின்புறத்தில் மல்லிகைத் தோட்டம் பரந்து கிடந்தது. அங்கிருந்து எழுந்து வீசும் தென்றல் மோகனா வீடு முழுவதும் 'கம்' மென்ற வாசனையைத் தெளித்து வரும். எத்தனையோ நாட்கள் அந்த நறுமணத்தை நுகர்ந்து வந்திருக்கிருள மோகனா.

முனியன் இரவு பகலாகக் கணவிழித்து, நீர் இறைத்து வளர்த்துக் காப்பாற்றியது அந்தத் தோட்டம். நெற்றி வியர்வையைச் சிந்தினான— மல்லிகை மலர்ந்தது! குருதியைக் கொட்டினான் — சிவந்த ரோஜா மலர்கள மலர்ந்து மணங் கமழ்ந்தன.

அந்த மலர்களை முனியன் காணுகிறபோது, எத்தனை நாளை கஞ்சிக்குக் காணுமென்று கணக்குப போடுவான. மோகனாவோ, அந்த மணம் எத்தனை பேரை மயக்கும், அதனால் எவ்வளவு தொகைசேருமென்று கணக்குப் போடுவாள்.

●

முனியன்மகள் வள்ளி தோட்டத்தில் வந்து நின்றாள்.

பத்து வயதுச் சிறுமி அவள். ஒரு கட்டு மல்லிகையைத் தானும் சூடிக்கொள்ள விரும்பினாள். கூடை கூடையாகப் பூத்திருக்கும் மல்லிகையில் ஒரு சரத்திற்குத் தானா பஞ்சம்? அப்பா வருகிறாரா என்று சுற்று முற்றும் பார்த்து விட்டு ஆசை கொண்ட மட்டும் பறிக்கத்தொடங்கினாள் ஆசை என்ன எல்லை கட்டக்கூடியதா? இன்னுங் கொஞ்சம் இன்னுங் கொஞ்சம் என்று இருகையாலும் பறித்துத் தொடுத்த நீண்ட சரத்தைச் சூடிக் கொண்டாள்!

அப்பா! என்ன அழகு!

"ஐயோ" திடீரென்று பயத்தால் அலறிக் கொண்டு திரும்பிப் பார்த்தாள். முனியன் அவளை அடி அடியென்று அடித்தான. அவன் கணகள் சிவந்திருந்தன.

"அட கழுதே! எட்டணாப் பூ பாழாப் போச்சே?" என்று கூவினான் அவன். 'ஏழைக்கென்ன ஆடம்பரம் வேண்டிக் கிடக்கிறது!' இது தான் அவன் கேள்வியின் பொருள்.

●

பிரகதீஸ்வரர் ஆலயத்தில் பக்தர்கள் கூடியிருந்தனர். ஊர்வலத்திற்காக ஆண்ட

வனை அழகு படுத்துவதிலே ஈடுபட்டிருந்தனர் கோயில் பூசாரிகள். தர்மகர்த்தா வேத நாயகம் பிள்ளை அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்தார். அப்போதைக்கப்போது வெளி வந்த இருமல் அவர் எங்கிருக் கிருர் என்பதை எடுத்துக் காட்டியது.

பூக்கார முனியன் நான் கைந்து கூடை மலர்களைக் கொண்டுவந்து கொட்டினுன். தர்மகர்த்தாவின் பார்வை அந்த மலர்க் குவியலின் மீது விழுந்தது. எத்தனை எத்தனை வண்ணம்? அந்த அழகிலே அவர் மனம் பதிந்து, நன்ருக விளக்கி மெருகூட்டப்பட்ட செம்பொன் சிலையிலே விழுந்து கோயில் கோபுரத்தின் ஒளி யிலேபட்டுத் தாசிமோகனுவின் கட்டழகிலே வந்து நின்றது.

இந்நேரம் அவள் தன்னை அழகு படுத்திக் கொண்டிருப் பாள். தங்கச்சிலை போன்ற அவள் உடல் பன்னீர் கலந்த வெந்நீரில் குளித்துப் பட்டாடையுடுத்திக் கண்ணுடி யின் முன் நின்று கொண்டிருக் கும்.கோயில் நகைகளிலே இருந்த அசல் வைரங்கள் இடம் மாறி அவள் உடலிலே வானவீதியில் மின்னும் விண் மீன்கள் போல் மின்னிக் கொண்டிருக்கும். ஆண்டவன் பூண்டிருந்த வைரங்கள் மோக னுவின் உடலில் இடம்பெறவும், மோகனு தர்மகர்த்தாவின் உள் ளத்தில் இடம்பெறவும் துணை செய்தவர் சோமசுந்தரக் குருக் கள். குருக்கள் நினைவு வந்த வுடன், கோயில் தர்மகர்த்தா அவரைக் கூப்பிட்டார்.

"ஏய் சோமசுந்தரம்?"

தர்மகர்த்தா அவர்களுக்கு முன்னே கைகட்டி அவர் கண்ணேவல் என்னவென்று கவனித்தவாறே நின்ருர் குருக்கள்!

"கொஞ்சம புஷ்பம் அவ ஆத்துககும அனுப்பிவிடு"

"வந்திருக்கிறதே அலங் காரத்துக்குப் போதாதே"

"பரவாயில்லை.கொஞ்சம் கலக்க வையுங்கள் ஆண்டவனுக்கு! ஒரு நாள் அலங்காரம் பூரணமா யில்லாவிட்டால் தான் என்ன வாம்?"

"உத்தரவு"

மணி பத்துக்கு மேலாகி விட்டது. சுவாமி புறப்பட ஆயத்தங்கள் நடைபெற்றன. தீவட்டிகள் கொளுத்தப் பட்டன. பெட்ரோமாக்ஸ் விளக்குகள் ஏற்றப்பட்டன.

கோயில் தர்மகர்த்தா அவர் களின் மனம் இதிலெல்லாம் லயிக்கவில்லை. மோகனுவின் வீட்டு மஞ்சத்திலே தொங்கும் மல்லிகைச் சரத்தைச் சுற்றிச் சுற்றி நின்றது. நடுநிசியில் கோயிலிலேயே இருக்க அவ ரென்ன எல்லாம் துறந்தவரா?

காங்கயம் காளைகளின் கழுத்து மணி 'ஜல் ஜல்' என, தர்மகர்த்தாவின வில்வண்டி கோயிலை விட்டுப் புறப்பட்டது.

●

தாசி மோகனு வீட்டு மஞ்சம் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. மலர்ச் சரங்கள் இடைவெளி தெரியாமல் தொங்க விடப்பட்டிருந்தன, தர்மகர்த்தா உள்ளே நுழைந்

தார். 'கம்' மென்று அங்கே எழுந்த நறுமணம் அவர் உள்ளத்தை அப்படியே அள்ளிக் கொண்டது.

"அடி கண்ணே என்ன வாசனை? என்ன அழகு?"

"இதோ பாருங்கள்! அந்த நிலையிலே தொங்கவிடக் கூடப் போதவில்லை. இன்னுங் கொஞ்சம் புஷ்பம் அனுப்பி யிருக்கக் கூடாதோ?" என்று தன் புருவத்தை நெரித்துக் கொண்டே கூறினாள் மோகனா.

"நான் என்ன செய்வேன்? ஊரெல்லாம் கூடி அந்த உயிரில்லாத சிலைக்கு வண்ணப் பூக்களைக் கொட்டி அழகு செய்கிறார்கள். என்னுடைய அழகுத் தேவியின் உயிர்ச் சிலைக்கோ மலரைக் காணோம்."

தர்மகர்த்தா வயது சென்றவரானாலும அந்த உரையாடலில் உயிர் இருந்ததற்குக் காரணம், அவர் தாசி மோகனாவிடம் கொண்டிருந்த உயிர் மோகந்தான்!

"எல்லாம் நேரில் வருகிறபோது ஒப்புக்குச் சொல்லுவதுதான்" அந்த அழகுத் தெய்வம் இந்த மாதிரிக் கோபித்துக் கொண்டது.

ஏன்!

மதபேதகர்கள் 'ஏன்?' என்ற கேள்விக்கு அஞ்சினதுபோல் வேறு எதற்குமே அஞ்சினதில்லை என்னலாம்

—அறிஞர் அண்ணாதுரை

"இல்லையடி கண்ணே! மல்லிகையைப் பார்த்தேன். உன் முல்லைப் பற்கள் தோன்றின. அன்றலர்ந்த ரோஜாவைக் கண்டேன். சிவந்த உன் கன்னங்கள் நினைவுக்குவந்தன. உடனே தான் மலர்கள் அனுப்பி வைக்கும்படி சொன்னேனே? அந்தச் சோமசுந்தரம் கொஞ்சமாக அனுப்பியிருக்கிறான். குறிப்பறியாதவன்."

"அப்பப்பா! பேச்செல்லாம் இனிப்புத்தான்" என்று அவர் தாடையைத் தட்டினாள் மோகனா. அடுத்த நொடி மஞ்சத்திலே கிடந்த வண்ண வண்ண மலர்கள் கசங்கின.

அந்த நடுச்சாமத்திலே எழுந்த நாதசுர ஒலி காற்றிலே கலந்து ஒரு நாத வெள்ளத்தை எழுப்பியது. தெருக்கோடியிலே பிரகதீஸ்வரரின் பவனி வந்து திரும்பியது. எரிந்து கொண்டிருந்த தீப்பந்தங்கள் வீதியின் இருட்டை விலக்கிக் கொண்டுவந்தன. மோகனாவின் வீட்டிற்கு முன்னே பவனிவந்து நின்றது. இமே தண்ணீர் தெளித்துக் கோலமிட்ட தரை. வீட்டின் முகப்பிலே மலர் மாலைகள் சரம் சரமாகத் தொங்கின. எல்லாம் அழகாக இருந்தன. அந்த அழகுக்கழகாகத் தாசிமோகனா வாசலிலே வந்து நின்று புன்னகை பூத்தாள். தர்மகர்த்தா அவர்களும் ஆண்டவன் முன்னே வந்து நின்றார். நாதசுரவித்வான் கச்சேரிக்குத் தயாரானார். பக்த கோடிகள் ஒதுங்கி நின்று தத்தமக்கு வசதியான இடத்தைத் தேடிக் கொண்டார்கள்.

கூரை வேய்ந்த முனியனின் குடிசை இருட்டோடு இருட்டாக ஒட்டிக்கொண்டது.

கச்சேரி கேட்டுக் கொண்டு நின்ற முனியன் காதிலோ 'அப்பா அப்பா' என்று தன் மகள் முனகிய ஒலி வந்து பட்டது. உடனே குடிசையை நோக்கி ஓடோடி வந்தான்.

"என்னம்மா?"

"என்னப்பா வெளியே சத்தம்?"

"சாமி பவனி வருகுதம்மா. நாம் கொடுத்த பூ எவ்வளவு அலங்காரமாக இருக்கு பாத்தியா?"

அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் உள்ளத்திரையில் என்னென்னவோ எண்ணங்கள் தோன்றி மறைந்தன. பகல் இரவென்று பாராமல் தண்ணீர் பாய்ச்சினாள். மலர்கள் கூடை கூடையாய் மலர்ந்தன. அவை இப்பொழுது ஆண்டவனை அலங்கரிக்கின்றன. அந்த அழகைப் பார்க்கக் கூடக் கொடுத்து வைக்காமல் அவளுக்குக் காய்ச்சல் வந்து விட்டது. ஆனால் தாசி மோகனாவின் வீட்டெதிரே ஊர்வலக் கச்சேரி நடக்கிறது.

"அப்பா கொஞ்சம் தண்ணீர்."

முனியன் ஓடினான். பானையிலிருந்த தண்ணீரை மண் குவளையில் ஊற்றினான். அவள் வாயருகே கொண்டுவந்தான். அதற்குள் அவள் தலை தொங்கி விட்டது. மாலையில் தொடுத்த மலர்ச்சரம், அவள் கையில் கசங்கிக் கிடந்தது.

குடிசை முகப்பிலே ஒத்தைத் தப்பட்டைக்காரன் விட்டு விட்டு ஒலி எழுப்பிக் கொண்டிருந்தான். மோகனாவின் வீட்டெதிரே நாதசுரக் கச்சேரி. அர்ச்சனை செய்த தேங்காய்த் தட்டுடன், ஆண்டவனை அலங்கரித்துக்கொண்டிருந்த மலர்ச் சரங்களில் ஒன்றை எடுத்து நீட்டினார் சோமசுந்தரக் குருக்கள். தாசி மோகனா அவற்றைக் குழைவோடு வாங்கிக் கொண்டாள்.

ஆண்டவன் ஊர்வலம் மீண்டும் தொடர்ந்தது.



ஆங்கில இலக்கியம்

கட்டுரை ○○○○○○○○○○○○ அறிஞர் அப்பாத்துரை

முன்னுரை

ஆங்கிலம் பண்டைமொழியுமன்று. உயர்தனிச் செம்மொழியுமன்று. ஆயினும் தற்கால மொழிகளுள் அது தலைசிறந்த நிலைபெற்றுள்ளது. கிட்டத்தட்ட உலக மொழி நிலையை அவாவி நிற்கிறது. ஆனால் இந்நிலைக்கு அதன் இலக்கியம் ஓரளவு உதவியிருக்கலாமானாலும், அது தலைமையான காரணமன்று. 16-ம் நூற்றாண்டுமுதல் அந்நாடு உலக வாணிக அரசாகவும் கடலரசாகவும் உலகப் பேரரசாகவும் ஆனது ஒன்று; அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய முப்பெருங் கண்டங்களில் ஆங்கிலேயர் குடியேறி அம்மொழி உலகின் பெரும்பகுதியினர் தாய்மொழியானது மற்றொன்று. இவ்விரண்டுமே அதன் தலைமைநிலைக்குரிய காரணங்கள். மொழியின் தன்மையையும் அதற்குக் காரணம் என்பர் அறிஞர் பாகட். ஆனால் இது ஒரு துணைக்காரணம் மட்டுமே. ஆங்கில இலக்கிய வளர்ச்சியும் தேசிய வளர்ச்சியும் அதன் பேரரசு வாணிக வளர்ச்சியும் யாவும் 16-ம் நூற்றாண்டு முதலே தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

மொழித் தோற்றம்

ஆங்கிலமொழி ஆரியக் கிளையினமாகிய ஜெர்மானிய இனத்தைச் சேர்ந்தது. ஆங்கிலேயரின் முன்னோரான ஆங்கிலோ ஸாக்ஸனியர் கி. பி. 5-ம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் குடியேறினர். அவர்களுக்கு முன்வாழ்ந்த கெல்ட்டிய இனத்தவரான பிரிட்டானியர் பிரான்ஸின் வடகடரைக்கும் வெல்ஸுக்கும் வட ஸ்காட்லாந்துக்கும் அயர்லாந்துக்கும் துரத்தப்பட்டு இன்று பிரிட்டனி, வெல்ஷ், கெயிரிக், ஐரிஸ்மொழி ஆகிய கெல்ட்டிய மொழிகளைப் பேசுகின்றனர். இங்கிலாந்தில் இதன் பின்னும் நாகரிகமடையாத ஆரிய நாடோடி முரட்டு இன மக்களான டேனியரும் நார்மானியரும் கி. பி. 8, 9, நூற்றாண்டுகளிலும் 10. 11 நூற்றாண்டுகளிலும் வந்து ஆங்கிலோ சாக்ஸனியரை அடக்கி நாளடைவில் அவர்களுடன் கலந்தனர்.

கருநிலைக் காலம்; பண்டை ஆங்கிலம் (5-11 நூற்றாண்டுகள்)

16ம் நூற்றாண்டு ஆங்கில நாட்டில் வாணிக, குடியேற்றப் பேரரசுப் புரட்சி மட்டுமன்றி மொழிப்புரட்சி, கலைப் புரட்சி தேசியப் புரட்சி ஆகியவற்றை

உண்டு பண்ணிய காலம் ஆகும். மொழியின் ஒலிப்பும் வடிவும் முற்றிலும் மாறித் தற்கால ஆங்கிலமொழி உருவான காலம் இதுவே. இதற்கு முற்பட்ட காலம் (கி.பி. 5 முதல் 16-நூற்றாண்டு வரை) ஆங்கில மொழியின் நீண்ட கருநிலைக்காலம் ஆகும். இதில் 5-11 நூற்றாண்டுவரையுள்ள பிரிவு ஆங்கிலோ சாக்ஸன் மொழி அல்லது பண்டை ஆங்கிலமொழிக்காலம் (*Old-English*) ஆகும். இதில் நற் கவிதையிலக்கிய மட்டுமன்றி உயர்ந்த உரை நடையிலக்கியமும் இருந்ததாயினும் இது பிற்கால ஆங்கில வாழ்வில் புதையுண்டு இன்று மொழியறிஞரால் வெளிப்படுத்தி அவர்களாலேயே உணரப்பட்டும் பாராட்டப்பட்டும் வருகின்றது. தேசிய இலக்கிய ஒழுக்கிலோ இன்றைய பொதுமக்கள் வாழ்விலோ அது தொடர்பு கொள்ளவில்லை. ஆயினும் ஆங்கிலோ சாக்ஸன் மொழிச் சொற்களே தூய ஆங்கிலச் சொற்கள். ஆங்கிலமொழிக்கு வலிவும ஆற்றலும் தருவது இத் தூய சொல் தொகுதியே. உலக மொழியாக உதவிய துணைக் காரணப்பண்பும் இதுவே. இதனையுணர்ந்த பல தேசப்பற்றுளர் தேசிய மொழியியக்கமாகத் தூய ஆங்கில இயக்கம் தோற்றுவித்துள்ளனர். இது தமிழகத் தேசிய இயக்கமாகிய தனித்தமிழியக்கத்தை ஒத்ததாயினும் தமிழக இயக்கத்தளவு இன்னும் முழு வெற்றி பெறவில்லை.

இடை ஆங்கிலக்காலம் (11-16 நூற்றாண்டுகள்)

சாஸர்

11-16 நூற்றாண்டுகளின் காலம் இடை ஆங்கிலக் காலம். இதன் முற்பகுதியான 14-ம நூற்றாண்டு வரையுள்ள காலம் இலக்கியச் சிறப்புச் சிறிது மற்றது. பிரஞ்சு மொழியே அரசியலாட்சி மொழியாயிருந்து பேரளவில் பிரஞ்சுச் சொற்கள வந்து பெருகியகாலம் இதுவே. 14-ம் நூற்றாண்டில் தாய்மொழி அரசியலில் இடம் பெற்றது. பிரஞ்சு நார்மானியரான உயர்குடி மக்களும் ஆட்சி வகுப்பினரும 16-ம நூற்றாண்டுக்குள் பொதுமக்களுடன் ஒன்றுபட்டு ஆங்கிலேயராயினர் இக் காலத்தின் சிறந்த கவிதைகளான 'முத்து' 'பொறுமை' 'கலெயினும் பிச்சைவீரனும்' ஆகியவையும் ஆசிரியர் பெயர் தெரியாது புதையுண்டு கிடந்து அணிமையிலேயே வெளிவந்து புகழடைந்துள்ளன. கலைச்சிறப்புடைய இவையும் தேசிய இலக்கிய ஒழுக்கில் அறியப்படாதிருக்கிறது. கருநிலைக் காலத்தில் இலக்கிய வரலாற்றில் இடமபெறத் தக்க இலக்கியம் சாஸர் கவிதைகளும் அவர் உரைநடை நூல்களும் மட்டுமே. அவர் கான்டர்பரிக் கதைகள், அன்னை ஹறப் பேர்டுக் கதை முதலியன உலகின் சிறந்த கதைப் பாடல் இலக்கியத்தில் இடம் பெறுபவை. ஆயினும் அவை ஆங்கில நாட்டுக்கு உரிமையுடையவையேயன்றி ஆங்கிலமொழிக்குரிமையுடையவையல்ல. ஏனெனில் இன்றைய ஆங்கிலேயரால் அது அறியப்படாத சரிவர

வாசிக்கப்பட முடியாத அயல் மொழிபோன்றதேயாகும். தமிழர்க்கு வடமொழி எப்படியிருக்குமோ அப்படியே இன்றைய ஆங்கிலேய மக்களுக்குச் சாஸர் மொழி அமையும். இவர் உரைநடை நூல்களும் மொழிபெயர்ப்புக்களும் இதுபோல் சிறந்தவை.

மறுமலர்ச்சியியக்கம் (16-நூற்றாண்டு)

16-ம் நூற்றாண்டு ஆங்கில இலக்கியத்தில்முதல் நூற்றாண்டுமட்டுமன்று; புதுமை வாய்ந்த நூற்றாண்டுமாகும். இதுவே எலிஜபெத் அரசி காலம் அல்லது ஷேக்ஸ்பியர் கவிஞர் காலம் ஆகும். இக்கால எழுச்சிக்குப் பெரிதும் உதவிய ஐரோப்பிய இயக்கம் மறுமலர்ச்சியியக்கம் (*Renaissance*) ஆகும். தாமரைக் குளத்தில் தவளைகளால் நுகரப்படாதிருக்கும் நறுமலர்த்தேன் போல ஐரோப்பியரால் 1500 ஆண்டுகளாக உணரப்படாதிருந்த கிரேக்க இலக்கியச் செல்வம் துருக்கியர் படையெடுப்பால் ஐரோப்பா வெங்கும சிதறிப் பரவி அம்மொழிப் புலவர் அல்லல் காரணமாக ஐரோப்பாவின் செல்வம ஆயிற்று. இப்பேரிலக்கியத்தின் காரணமாக ஐரோப்பிய வெற்றுடலில் புகுந்த கிரேக்க நாகரிக 'ஆவியே' மறுமலர்ச்சியியக்கத்துக்குத் தூண்டுதலாயிற்று. இத்தாலி நாட்டில் இது கலை இலக்கியப் புரட்சியாகி இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கும் பரந்தது.

16 – 17 நூற்றாண்டுகளில் இலத்தின் சொற்களும் கிரேக்கச் சொற்களும் ஆங்கில மொழியில் பெருவாரியாகக் கலந்து தற்கால ஆங்கில மொழியையும் பெரிதும் மாற்றின. ஆயினும் தேசிய வளர்ச்சியால் மொழி முற்றிலும் தற்பண்பு கெடாதிருந்து வருகிறது.

ஆங்கிலயாப்பு முறைகள்

ஆங்கிலக் கவிதையில் இதற்கு முன் நாற்சீர்த் தொடர்பாக்களும் பாட்டுறுப்புக்களும் இருந்தன. இத்தாலிய இலக்கியத்திலிருந்து 'ஸரே' என்ற புலவர் 14-அடிகளையுடைய வண்ணபபா (*Sonnet*) வை ஆங்கிலத்தில் வகுத்து அதனை ஆங்கிலத்தின் சிறந்த பா முறையாக்கினர். அவரும் வயாட் என்ற புலவருமே மற்றொரு தலை சிறந்த பா முறையாகிய எதுகையற்ற ஐஞ்சீரடித் தொடர்பா அல்லது செந்தொடைப்பா (*Blank Verse*) ஆக்குவித்தார் ஷேக்ஸ்பியரும் மில்ட்டனும் இதனை ஓர் அருங் கலைக்கருவியாகக் கட்டமைத்தனர். ஸ்பென்ஸர் பத்தடிப் பாட்டு அமைத்தவர். இது அவர் பெயரால் ஸ்பென்ஸரியப்பா • எனப் பெருக்கமாக வழங்கப் படுவது 17-ம நூற்றாண்டில் கௌலி என்பவர் கிரேக்க முல்லை நிலக்கலிப்பா (*Pastoral Odes*)வைப் பின்பற்ற முனைந்தார். ஆனால் அதன் சிக்கல் வாய்ந்த கட்டமைப்பை உணராது அமைப்பிலா வடிவையே ஆக்கினர். 18-ம் நூற்றாண்டில் கிரே, காலின்ஸ் ஆகிய கவி அறிஞர் அதன் அமைப்பாண்மை கண்டு அதைக் கையாண்டனராயினும், சிறந்த கலைஞர் இரு மரபுகளையும் நன்கு பயன்படுத்தியுள்ளனர். உரை நடை வழி


யாகிய 18-ம் நூற்றாண்டில் கதைத் தொடர்புக்கு உதவும் எதுகைக் குறள் தொடக்கிய (*Heroic Couplet*) கவிதை இலக்கியத்தின் அடிப்படைக் கருவியாயியங்கிற்று.

நாடக இலக்கியம்

ஷேக்ஸ்பியர் காலம்

16-ம் நூற்றாண்டு இலக்கியம் ஒன்றே ஆங்கிலமொழிக்கு உலகநாடக இலக்கியத்தில் இடம் தருவது. அவ்விடமும் முதல்வரிசையிடம். இக்கால இலக்கியத்தில் நாடக இலக்கியம் சிறந்த துறை. அதன் சிறந்த புலவர் ஷேக்ஸ்பியர். ஐரோப்பிய நாடக இலக்கியம் பெரிதும் கிரேக்க மரபு பின்பற்றிக் கலைக் கட்டமைப்புடைய நாடக மரபையே பின்பற்றிற்று. இதில் நாடகங்கள் வீறு நாடகம் அல்லது துன்ப நாடக (*Tragedy*) இன்ப நாடகம் அல்லது களி நாடகம் (*Comedy*) என்ற இருவேறு கலைத்துறைகளாக இயங்கும். ஆனால் ஆங்கில நாடகம் இந்திய நாடகத்தைப் போன்றது. இவ்வேறுபாடுகளை ஏற்காதது. இன்பதுன்பங் கலந்த இயற்கை நாடகம் ஆகும். அதன் மரபு கிரேக்க மரபு அன்று; இந்திய நாடகத்தைப் போன்ற இயற்கைத் தேசிய மரபேயாகும். இன்றும் உலகெங்கும் நடைபெற்றுவரும் 'தெருக்கூத்து'க் களிலிருந்து தோன்றியவையே இவ்விரண்டும். இவை கோயில் நாடகங்கள் (*Mystery Plays*-மலையாளச் சாக்கியர்க் கூத்து) விழா நாடகங்கள் (*Miracle Plays* மலையாள ஓட்டந்துள்ளல்) தெருக்கூத்து (*Morality Plays*) ஆகியவை இதன் பலபடி வளர்ச்சிகள். தெருக்கூத்து மரபை இலக்கிய உருவில் களி நாடகமாக்கியவர்கள் லிலி, கிரீன், பில் ஆகிய புலவர்கள். இவர்கள் அழகிய உரை நடையில் எழுதி ஷேக்ஸ்பியர் நாடக உரை நடைக்கு முன்னோடிகளாயினர். விழா நாடகங்களைச்செந்தொடைப்பாவில் இயங்கி வீறு நாடகமாக்கி அவருக்கு முன்னோடிகளாயமைந்தவர்கள் கிட், மார்லோ ஆகியவர்கள். மார்லோ நாடகங்களில் செய்யுளிடையிட்ட பாடல்கள் ஒப்பற்ற உணர்ச்சிப் பாடல்கள் ஆகும். இத்தகைய பாடல்கள் சிலப்பதிகாரத்திடை வரும் ஆய்ச்சியர் குரவை போன்ற நாட்டுப் பாடல்கள் ஆகும். இவரது டாக்டர் ஃபாஸ்டஸ் நாடகத்தை முதனூலாகக் கொண்டு உலக நாடகமாகிய ஜெர்மன ஃபாஸ்ட் எழுதிய ஜெர்மனியின் உலகக் கவிஞரான கேதே அந்நூலை வியந்து "ஆ, எத்தகைமை உயரிய கவிதை மாளிகைக்கான திட்டம் இது" என்று பாராட்டினான்.

இயற்கையையும் மக்கள் வாழ்வையும் உளப்பாங்கையும் கலையுலகில் மீட்டும் படைத்துவிட்ட படைப்புக் கடவுட் கவிஞனாக ஷேக்ஸ்பியர் போற்றப்படுகிறார். ஆங்கிலப் பேரரசுக்கு ஓர் இலக்கியப் பேரரசுத் தகுதியையும் அளித்தவர் இவ்வுலகப் பெருங்கவிஞரே. ஆயினும் இயற்கையின் செல்வனாகிய இப்பெருங்கவிஞர் ஒரு பட்டைதீட்டாத இயற்கை வைரம் மட்டுமே. கலைக்குறிக்கோளில்லாமலும் முயற்சியில்லாமலும் தன்னியல்பாகவே



அவர் எழுதினர்: ஆகவே இயற்கையாயமைந்த கட்டுக்கோப்பன்றித் திட்டமோ திருத்தமோ அவரிடம் கிடையாது. கவிதைக்கான கதை மூலங்களும் எதுவும் அவர் தாமாகப் படைக்க முயலவேயில்லை. கைக்கெட்டியதையெல்லாம் வைத்துக் கலையாக்கினர். பிறர் சரக்கை மாற்றியமைப்பதும் வரலாறு, நில இயல்பைப் பாராததும் ஒரு குற்றமாகுமானால் முதல் குற்றவாளி ஷேக்ஸ்பியரே. அவர் இயற்கைத்திறம் அதனை ஒரு குணமாக்கி விட்டது.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் 33 க்கு மேற்பட்டவை. எழுதியதோ இருபது ஆண்டுகளுக்குள் (1590—1610) இந்த நிலையில் முப்பதும் முபபது முழுமணிகளாகவே அமைந்து கலையுலகின் பேரதிசயங்களில் ஒன்றே. இளமைக்கால முதிராக்கலையிலும் கூட நடுவேனிற் கனிவு காதல் துன்ப நாடகத்தின் வரப்பு ஆகவுள்ளது. நாலாம் ஹென்றியில் நகைச்சுவை மன்னனாகிய ஃபால்ஸ்டாஃப் ஷேக்ஸ்பியர் கைத்திறனையும் கடந்த நிலை பெற்றுவிடுகிருன். தற்பண்புறுதியற்ற ஆராய்ச்சித் திறனில் ஹாம்லெட்'டும் 'ஒதெல்லோ'வும் சூழ்ச்சித் திறனில் 'ஆயாகோ'வும் காதலுறுதியாகிய கற்பில் டெஸ்டிமோனவும் முழுப் பெண்மைக் குறிக்கோளில் இமொஜெனும் இதே வகைக் கலைகடந்த உயிர் வளர்ச்சியுடையவர்கள். அந்தோனியும் கிளியோபாத்ராவும் 'கரையற்ற காதலு'க்கு மாஇலக்கியம். இவர் நாடகங்களுள் பெயரளவில் இன்ப நாடகம் துன்ப நாடகம் உண்டாயினும் இது முடிவுபற்றிய பிரிவுமட்டுமே. எல்லாம் இன்ப துன்பக் கலப்புணர்வுடையவையே. தவிர இரண்டிலும் அடங்காத இறுதிக்கால இன்ப துன்ப நாடகங்களும் வரலாற்று நாடகங்களும் உண்டு.

ஷேக்க்ஸ்பியருக்குப் பிற்பட்ட நாடக உலகில் அவருடன் ஒத்துழைத்த போமாண்ட் ஃபிளச்சரே சிறப்புடையவர்.

கவிதை

ஷேக்ஸ்பியர் காலத்தில் அவருக்கடுத்த பெருங் கவிஞர் ஸ்பென்ஸர். இவர் முதல் தரக் கவிஞர்களுக்கும் கவிதை யார்வமூட்டியவராதலால் கவிஞர்களின் கவிஞர் எனப்படுகிறார். பழங்காலச் சொற்களை விரவி, பழய மரபுகளைப் பின்பற்றிப் பழம்பாடற்பண்ணமையப் பாடுபவர் இவர். கவிதையில் தூங்கிசை யோசையைத் திறம்படக் கையாண்டவர் இவரே. இவர் பெருநூல் வனதெய்வ அரசி என்பது. இது உண்மையில் பல நிகழ்ச்சி வர்ணனைகளின் கோப்பே. ஆயன் ஆண்டுக் குறிப்பு (*Shepherds Calendr*) அவர்காதல்மணவாழ்வுபற்றிய பின் மணநூல் (*Epithalamm-ion*) முன்மண நூல் (*Prothala-mmion*) ஆகிவையும் அனை ஹப்போர்டு கதை முதலிய கதைப்பாக்களும் இவர் சிறந்த சிறு நூல்கள்.

யாழும் பாடலும் எலிஜபெத் காலப் பொதுச் சிறப்பு. இக்கால நன்மக்கள் யாவரும் பாட்டுப்பாடும் திறம் உடையவராயிருந்ததால் கவிஞர்கள் வானத்துமீனிற்பலர். 'பறக்கும் பறவைகளில் பாடாப் பறவை யில்லை' என இக்காலக் கவிதைத்தொகை பாராட்டப்படுகிறது. தமிழகத்தின் சங்க காலத்தின் கவிஞர் தொகையையும் சிறப்பையும் இது ஓரளவு நினைவூட்டுவதாகும். ஸர்பிலிப்ஸிட்னி, ராலே, டன், ஹெர்பர்ட் இக்கால 'விண்மீன்'களுட் சிலர்.

பென்ஜான்ஸன் ஷேக்ஸ்பியர்காலக் கவிஞருள் நற்புலவன். பல நாடகங்கள் எழுதியுள்ளார். அவற்றினிடையில் வரும் பாடல்கள் இன்றும் போற்றப்படுகின்றன. மொழிபெயர்ப்பிலக்கியம் இக்காலத்தில் சிறப்புற்றது. கவிதையில் சாப்மனின் ஹோமர் மொழிபெயர்ப்பு கீட்ஸ் போன்ற போன்ற கவிஞரால் பாராட்டப்பட்டுள்ளது. புளுட்டார்க் என்ற கிரேக்க ஆசிரியரின் இணைவாழ்க்கை வரலாறுகள் நார்த் பெருமகனால் மொழிபெயர்க்கப்பட்டது. ஹாலின்ஷெட் ஆங்கில நாட்டு வரலாற்றை ஆண்டுக் குறிப்பாக (*Chronicle*) எழுதினர். இவையிரண்டும் ஷேக்ஸ்பியருக்கு மூலங்களாய் உதவியதுடன் இன்றும் அத்தகுதிக்குரியதாக மதிக்கப்படுகின்றன.

காதல் பிறந்த கதை

ஜெகசிற்பியன்

உலகம் அப்போது குழந்தை யாக இருந்தது! இப்போதிருக்கும் உலகத்தைப் போல அடங்காப்பிடாரியாக அப்போது அது இல்லை. மழலை மொழி பேசும குழவியின் முகத்தில் வழியும் தூய்மையும், மாசுபடா அழகும் பொருந்தியதாய் இருந்தது.

'மனித வர்க்கம்'என்றசொல் அப்போது கிடையாது! 'மனித ஜோடி' என்ற இரு அபூர்வ உயிர்க் கோளங்கள் தாம இயற்கையோடு இயற்கையாக நடமாடிக் கொண்டு வந்தன.

அந்த ஜோடி, தோற்றத்தில் ஒரேமாதிரி இருந்தனவே யன்றி, உடலமைப்பில் சிறு சிறுமாறுதல்கள் கொண்டிருந்தன. அந்த உடலமைப்பில் கூட ஒன்று உறுதி நிறைந்ததாகவும், மற்றொன்று மென்மை பொருந்தியதாகவும் அமைந்திருந்தது!

இவ்விரு உயிர்க் கோளங்களுக்கும் அடிக்கடி சண்டை நிகழ்வதுண்டு! புழுதியில் படுத்துப் புரண்டால் உடலில் அழுக்குப் படியுமே என்ற முன தெளிவில்லாமல் புரண்டு விட்டு, அதனால் ஏற்படும் உடல் அரிப்பைப் போக்கிக் கொள்ள, பொய்கையில் புகுந்து நீராட வேண்டும் என்ற ஏதோ ஒரு உணர்வு அவற்றிற்கு உண்டாகியதும், அதன்படி நீராடப் பொய்கைக்கு இரண்டும் செல்லும். அப்படி நீராடும போதுகூட அவைகளுக்குள் சணடை ஏற்படும்! பலமுள்ள உயிர் பொய்கையின் அலைக்கழிப்பை லட்சியம் செய்யாமல் அதனை அடக்கி அருமையாக நீராடும். மற்றொன்று அவ்விதம் அடக்கிச் சமாளிக்கச் சக்தி யில்லாமல், குழம்பிய கரையோர நீரிலேயே குளிக்கும். இதனால் பொறுமையுற்றுப் பலமுள்ளதை வலிவற்றது தாக்கும்! இந்தத் தாக்குதலைப் பலமுள்ளது பொறுமையோடு சகித்துக் கொள்ளும்! அதனிடம் இந்த சகிப்புத் தன்மை எப்படி வந்தது? அது அவ்விரு உயிர்களுக்குமே தெரியாமலிருந்தது. பின்னர் இரண்டும் ஒன்றையொன்று அணைத்துக் கொண்டு பொய்கையிலிருந்து வெளியேறும். மீண்டும் போர்! மீண்டும் சமாதானம்!!

ஒருநாள் மாலை—

சிறுசிறு செடிகள் சூழ்ந்துள்ள ஒரு பெரும் பாறையின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தன அந்த ஜீவ உருவங்கள். கால வளர்ச்சி

அவன் மிகக் கோபத்தோடு பாய்ந்து வந்து அவளது கன்னத்தைப் பிடித்துக் கடித்தான்! என்ன ஆச்சரியம்! அவள் அவனைத் திருப்பிக்கடிக்க வில்லை. அதற்குமாறாக மீண்டும் தன்னை அப்படியே கடிக்கும்படி அவனிடம் அவள் கெஞ்சினாள் ... ...

யின் காரணமாகக் லக, கண் ஜாடை காட்டுவதிலிருந்து முன்னேறி ஏதோ ஒரு வித மான குரலெழுப்பித் தங்கள் மனம் சொல்வதை வாய் மூலம் வெளிப்படுத்திக் கொண்டுவந்தன.

எங்கோ பார்த்துக்கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்த அந்த ஜீவன்களில் மென்மை யானது திருமபி, பலம்வாய்ந்த உருவைப் பார்த்து "ஏய் மனிதா! எனக்குப் பசிக்கிறது!" என் றது!

'மனிதன்' என மகுடமிட்டு அழைக்கப்பட்டவன் சட்டெ னத் திரும்பி, "ஏன் பெண்ணே உனக்கு மரத்திலிருக்கும் பழங் களைக்கூடப் பறித்துக்கொள்ள முடியவில்லையா?" என்றான்!

"ஏனோ கொஞ்சகாலமாக எனக்கு எதையுமே செய்ய முடியவில்லை! எல்லாவற்றுக் கும் உன் உதவி வேண்டும் போலிருக்கிறது!" என்றாள், 'மனித'னால் 'பெண்ணே' என்று அழைக்கப்பட்டவள்!

"சரி; நான் பறித்துக் கொண்டு வந்து தருகிறேன்!" என்று சொல்லி எதிரிலிருந்த பலாமரத்தின் மீது ஒரே தாவா கத் தாவினான் மனிதன்! அடுத்த ஐந்து நிமிஷங்களுக் கெல்லாம், பழுத்து வெடித்தி ருந்த ஒரு பெரும் பலாக்கனி யைப் பறித்து, கூரிய கற் பாறையொன்றில் மோதி இரண்டாகப் பிளந்து 'பெண்' ணின் பக்கத்தில் கொண்டு வந்து வைத்தான்!

ஆவல் நிரம்பிய ஆத்திரத் துடன் பழத்தை எடுத்துப் புசிக்க ஆரம்பித்தாள் பெண்! இதுவரை தன்னையோ அல் லது தன்னைப்போன்றிருக்கும் அவளையோ அவன் அதிக மாகக் கவனித்துப் பார்த்த தில்லை. இப்போது பழத்தைக் கடித்துக் கொண்டிருக்கும் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்!

கொஞ்ச காலத்திற்கு முன்பு இல்லாத சில உடல் மாற்றங் கள் அவளுக்கு இப்போது ஏற் பட்டிருப்பதை அவன் உணர்ந் தான்! அவள் இப்போது ஏனோ இலைகளையும், மரப் பட்டைகளையும் ஒன்றாகப் பின் னித் தன் உடலைப் போர்த்திக் கொண்டிருந்தாள்!

தனக்கும் அதைப்போன்ற மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று தன்னைத்தானே பார்த் துக்கொண்டான். தன்னுட லில் சில இடங்களில் மயிரணுக் கள் துளிர்த்திருப்பதைத்தவிர முன் மாதிரியே இருப்பதாகத் தான் அவனுக்குத் தோன்றி யது! இதோடுமட்டும் அவன் சும்மாயிருந்துவிடவில்லை. இவ் வளவுகாலம் அவனும் அவ ளும் நடந்துவந்த நடத்தையை யும் நினைத்துப் பார்த்தான். அதில்தான் ஏதோ ஒரு மாற் றம் — வளர்ச்சி — இருப்ப தாக அவன் உணர்ந்தான்!

முன்பெல்லாம் அவளை அவன் அடிப்பான். அவளும் அவனைக் கடிப்பாள்! ஆனால் இப்போது அவள்தான் சில சமயங்களில் இவனை அடிக்கி றாள்; இவன் அவளை அடிப்ப தில்லை! இந்த மன வளர்ச்சி யைத்தான் இப்போது அவன் அறிந்தான்.

பலாக் கனியை வயிறார புசித்துத் தீர்த்து விட்டாள்

அவள். பிறகுதான் அவளுக்குப் பக்கத்திலிருப்பவனின் நினைவு வந்தது. தனக்குப் பசி எடுத்ததைப்போல அவனுக்கும் பசி எடுக்கும் என்பதை அவள் முதன் முதலாக இப்போதுதான் உணர்ந்தாள். உடனே தான் தின்று மிகுதியான பழத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள். அவன் அதை வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்! பிறகு எதையோ நினைத்துக் கொண்டவளாய்த் தானே, அப்பழத்தைச் சுளைசுளையாக உரித்துத் தோலிலிருந்த சுளைகளைப் பிய்த்துத் தனித் தனியாக்கி, கொட்டைகளைப் போக்கி அவைகளை அவனிடம் நீட்டினாள். உடனே அதை அவன் வாங்கிப் புசிக்க ஆரம்பித்தான்! இந்தச் செய்கை அவர்களுக்கு இப்போது புதுமையாக இருந்தது.

O

உலகக் குழந்தை இப்போது தவழ ஆரம்பித்தது! அதாவது முன்னைவிட இருமடங்கு பிரகிருதிகளும், விலங்கினங்களும், மற்ற ஜீவராசிகளும் பலுகிப் பெருகிவிட்டிருந்தன. அவனும் அவளும் மட்டும் அப்படியே தான் இருந்து வந்தனர்!

காலைத் தென்றல் குளுமையாகத் தவழ்ந்து கொண்டிருந்தது. பொய்கையைச் சுற்றி அவனும் அவளும் உலாவிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னும் பின்னும் சிங்கமும், புலியும், ஆடும், மாடும், அன்னமும் புறுவும் ராஜநடை போட்டுக் கொண்டிருந்தன!

குளத்தைப் பார்த்ததும் குளிக்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

"ஏய் மனிதா! நான் குளிக்கப் போகிறேன்!" என்றாள் அவள்.

"நானும்தான் குளிக்கப் போகிறேன்" என்றான் அவன்.

இதைக் கேட்டு அவள் ஏனோசிறிது தயங்கினாள்! என்றுமில்லாத அவளுடைய இந்தத் தயக்கம் அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவர்கள் குளிக்கப் போவது இதுதான் முதல் தடவை.

"நீ என்னுடன் குளிக்க வேண்டாம். நான் குளித்த பிறகுதான் நீ நீராட வேண்டும்!" என்றாள் அவள். அவன் ஏனோ இதைப் பேசாமல் ஒப்புக் கொண்டான்! அவனுக்கு ஏற்பட்ட இந்த 'அடக்கம்' ஒரு புதிராக இருந்தது!

தான் சுற்றியிருந்த மர உரிகளைக் களைந்து ஒரு புறமாக வைத்துவிட்டு அவள் பொய்கையில் இறங்கி விட்டாள்! அவளுடன் சில அன்னங்களும் நீந்தி நீராடக் குளத்தில் இறங்கின!

கரையோரத்தில் அவன் உட்கார்ந்திருந்தான். தன்னை வரக் கூடாதென்று சொல்லிவிட்டு அவள் அன்னங்களுடன் குளிப்பது அவனுக்கு விந்தையாக இருந்தது! தனக்கும் அந்த அன்னங்களுக்கும் என்ன வேறுபாடுகள் இருக்கின்றனவென்பதைச் சிந்தித்துக் கொண்டிருந்தான் அவன்.

அவனுக்கு எதிரிலிருந்த ஒரு மரக்கிளையில் குரங்கு ஒன்று ஊசலாடிக் கொண்டிருந்தது. அந்தக் குரங்குக்கு மற்றொரு குரங்கு அம்மரத்திலுள்ள கனிகளைப் பறித்துக் கொடுத்துக் கொண்டிருந்தது! ஊசலாடிக் கொண்டிருந்த குரங்கின் வயிற்றை ஒரு குட்டிக் குரங்கு கட்டிப் பிடித்துக் கொணடிருந்தது! இதைப் பார்த்ததும் அவனுக்கு ஆச்சரியம் தோன்றியது. அந்தக் குரங்கினிடம் அந்தக் குட்டிக் குரங்கு எபபடி வந்தது? ஒரு குரங்கிலிருந்து மற்றொரு குரங்கு எபபடி உற்பத்தியாயிற்று? இது அவனுக்கு விளங்கவில்லை!

அவள் குளித்துவிட்டுக் கரையேறி விட்டாள்.

அவன் குளிக்கப் பொய்கையில் இறங்கினன். அவனுடன் சில காட்டெருமைகளும் நீராட இறங்கின!

நீண்டு வளர்ந்த தன் கூந்தலை உலர்த்திக்கொண்டு கரையில் உட்கார்ந்திருந்தாள் அவள். அவளுக்கு எதிரில் இரு வெண்புறுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றுடன் இரு ரோமம் முளையாக் குஞ்சுப் புருக்களும் தத்தித் தத்தி வந்துகொண்டிருந்தன. பெரிய புரு அந்தக் குஞ்சுகளுக்குக் கீழே கிடக்கும் புல்லரிசிகளைப் பொறுக்கி ஊட்டிக் கொண்டிருந்தது! இந்தக் காட்சியையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்! இந்தக் காட்சி அவளுக்கு அற்புதமாயிருந்தது.

தன்னுடன் அவனை ஏன் குளிக்க வரவேண்டாமென்று சொன்னேம் என்பதை இப்போது அவள் நினைத்துப் பார்த்தாள். அவளுக்கே அது புரியவில்லை!

அவனும் குளித்துவிட்டுக் கரையேறி விட்டான். இருவருமாகச் சேர்ந்து தங்கள் குகையை நோக்கி நடந்தனர்.

O

அவனும் அவளும் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தனர். பின்னர் அவன் ஏதோ நினைத்துக் கொண்டவனாய் "ஏய் பெண்ணே! அதோ பார்! அந்தக் குரங்குக்கு அந்தக் குட்டி எப்படிக் கிடைத்தது?" என்ருன்.

"ஆமாம் மனிதா! நான் கூடப பார்த்தேன். இதோ மேய்கிறதே, இந்தப் புருவுக்கு அதன் பக்கத்திலிருக்கும் குஞ்சுகள் எப்படிக் கிடைத்தன?" என்ருள்.

இந்தக் கேள்விகளுக்கு இருவருக்குமே பதில் தெரியவில்லை!

இரவும் பகலும் வந்து வந்து சென்றன. அவனுக்கும் அவளுக்கும் இப்போதெல்லாம் ஓயாமல் சண்டை! ஆனல் இந்தச் சண்டை அவர்களுக்குள்ளே காரணமில்லாமல் நிகழ்ந்து வரலாயிற்று. தனக்கு ஏதோ ஒரு குறையிருப்பதாக அறிந்து அந்த வெறியில் அவளைப் பிடித்து அடித்தான் அவன்! அவளுக்கும் ஏதோ ஒரு குறையிருப்பதாக எண்ணி அவனை நையப் புடைத்தாள் அவள்! ஆனல் அந்தக் 'குறை'

விபரீத வழிபாடு

உலகம் முழுவதும் அந்நாளில் நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்தது. அதாவது ஆண்களையும் பெண்களையும் தாங்கள் தொழுது வந்தனவும், உண்மை இல்லாதனவுமாகிய தெய்வங்களுக்குப் பலி கொடுத்து வந்தனர். எகிப்து நாட்டில் பெண்களை நீல நதியில் எறிந்து பலி கொடுத்தார்கள். அப்படிச் செய்தால் 'அப்பன் நீலன் சாந்தி அடைவான். மகிழ்ச்சி பெறுவான்' என்று எண்ணினார்கள்.

இக்காலத்தில் நரபலி கொடுக்கும் வழக்கம் நின்றுவிட்டது. எனினும் இன்றைய மக்கள் கடவுளை மகிழ்விப்பதற்காக விலங்குகளையும் பறவைகளையும் பலியிடுகின்றனர். இவ்விதமான வழிபாடு யாருடைய வழிபாடாக இருந்தாலும் அது விபரீத வழிபாடேயாகும்.

— பண்டிதர் நேரு

தான் என்னவென்று அவர்களுக்குப் புரியவில்லை!

ஒரு நாள் வழக்கப்படி அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது.

அவன் மிகக் கோபத்தோடு பாய்ந்து வந்து அவளது கன்னத்தைப் பிடித்துக் கடித்தான்! என்ன ஆச்சரியம்! அவள் அவன் கடித்ததற்குத் திருப்பிக் கடிக்கவில்லை! அதற்குமாறாக மீண்டும் தன்னை அப்படியே கடிக்கும்படி கட்டளையிட்டாள்! அதன் பிரகாரமே அவள் கன்னத்தை அவன் கடித்தான்! மேலும் மேலும் கடிக்கச் சொன்னான் அவன்! மீண்டும் மீண்டும் கடிக்கச் சொன்னாள் அவள்!!

○

உலகக் குழந்தை இப்போது எழுந்து நடமாடியது! அதாவது முன்னிலும் மிகச் செழிப்பாய் வளர்ச்சியுற்று விளங்கியது அது.

வானம் வளைந்து நிலத்தின் தோள்மீது இரக்கத்தோடு தலைசாய்த்துக் கொண்டிருந்தது. அவள் பச்சைக் கம்பளம் போன்ற பசும்புற்றரையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு அழகிய குழந்தை தவழ்ந்து கொண்டிருந்தது!! அந்தக் குழந்தையையே அவள் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன அவளுக்குக் கனிவகைகளை உரித்துக்கொடுத்துக் கொண்டிருந்தான! அவள் அக்குழந்தைக்கு அமுதூட்டிக் கொண்டிருந்தாள்!

அவர்களுக்கெதிரில் புருக்கள் தங்கள் குஞ்சுகளுக்கு இரை ஊட்டிக்கொண்டிருந்தன. குரங்குகள் கும்பியைக் கட்டிக்கொண்டிருக்கும் குட்டிகளுக்குக் கனி ரசங்களைப் பிழிந்து கொடுத்துக் கொண்டிருந்தன. இப்போது அவர்களுக்கு நன்றாகப் புரிந்தது; புருவுக்குக் குஞ்சும், குரங்குக்குக் குட்டியும் எப்படிக் கிடைத்தன என்று!

உலகக் குழந்தை எழுந்து ஓடிக்கொண்டிருந்தது! ○

எண்ணத்தில் புரட்சி

டர்பன் திரு. ச. மு. பிள்ளை

எண்ணந்தான் மனித ஆற்றலின் ஊற்று, வினைத்திறனின் விளைநிலம், இலட்சியப் பாதையிலே நல்லாருக்குக் கொண்டு சேர்க்கும் கை காட்டி மரம். ஆகவே நாம் சிந்திக்கத் தொடங்க வேண்டும். சிந்தித்துத் தெளிந்த எண்ணத்திலே நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பிக்கையின் உறுதி நம்மை ஆர்வத்துடன் ஒரு செயலில் இறங்குமாறு அழைத்துக் கொண்டு போகும். அதன் விளைவாக நமக்கு வெற்றி சேரும்.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள நாம் சிந்திப்பதே இல்லையா என்று சிலர் கேட்கலாம் சிந்திப்பது நமது பரம்பரைச் சொத்து. இல்லாமலா "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி" என்று பக்தர்கள் பாடினர். ஆனால் உளுத்துப் போன மரத்தைக் கொண்டு வீடு கட்டுவது போலச் செல்லரித்துப் போன பழைய எண்ணங்களைக் கொண்டு கோட்டையைப் பிடிக்க நினைக்கிறோம். எண்ணம் வேண்டும் என்றால் முற்போக்கான எண்ணங்கள் வேண்டும் என்று தான் பொருள் கொள்ள வேண்டும்.

முன்னேற்ற எண்ணம் இருந்து விட்டால் மட்டும் போதாது. அந்த எண்ணத்திலே புரட்சி வேண்டும். மனிதர்களெல்லோரும் மனிதத் தன்மையோடு நடக்கவேண்டும். அதாவது, மனித சமுதாயம் ஒழுங்காக இயங்கவேண்டும். சமுதாய ஒழுங்கு ஏற்பட அரசியல் உரிமை இன்றியமையாதது. ஆனால், அரசியல் உரிமையே நமது இலட்சியமல்ல, இலட்சியத்தை அடைவதற்குரிய வழிதான். ஒழுங்கான சமுதாயத்தை அமைத்துக் கொள்ளத்தான் அரசியல் உரிமைவேண்டுகிறோம். பின்னதை அடையாவிட்டால் முன்னதை அடையமுடியாது. எந்த அரசியல் நம் உரிமைக்குத் தடையாயிருக்கிறதோ அந்த அரசியலைப் பற்றியும், எந்தச் சமுதாயப் பழக்க வழக்கங்கள் நம் ஒழுக்க வாழ்வுக்குத் தடையாக நிற்கின்றனவோ அந்தச் சமுதாயத்தைப் பற்றியும் நாம் கொண்டிருக்கும் எண்ணங்கள் மாறவேண்டும் அவைகளை எந்த நோக்கத்தில் பார்க்கிறோமோ, அந்த நோக்கத்தையே திருப்பவேண்டும் அதாவது, தற்போதைய அரசியலைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் நா கொண்டுள்ள எண்ணத்திலே மாற்றம் வேண்டும். இருப்பதைச் சீர்திருத்திக் கொள்ளலாம் என்ற எண்ணந்தா பலருக்கு ஏற்படுகிறதே தவி முற்றிலும் புதுமையாக மாற் யமைத்தாக வேண்டுமென் எண்ணம் தோன்றுவதே

யில்லை. உள்ள செய்யுளுக்கு விரிவுரை கூறுகிறோமே தவிரப் புத்திலக்கியம் படைக்கமுயற்சி செய்வதில்லை.

உலக வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், மனித இனத்தின் எண்ணம் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையாகப் பண்பட்டுக் கொண்டு வருவதைக் காணலாம். ஒரு மனிதன் எந்த நிலையில் எந்த விதமான சுற்றுப்புறத்தில் வாழ்கிறானோ அவைகளைப் பொறுத்தே அவன் எண்ணமும் அமைகிறது. அந்த எண்ணம் வளர்வதும் தேய்வதும் அந்தச் சுற்றுப்புறத்தைப் பொறுத்தே அமையும். நம் இந்திய சமுதாயத்தின் வாழ்க்கையில் எந்தப்பகுதியை நோக்கினாலும் அதன் அடியிலே ஒரேவிதமான நீரோட்டந்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அது தான் மதம். எதற்கெடுத்தாலும் மதத்தின் துணையையே நாடுகிறோம். அறிந்துதான் இப்படிச்செய்கிறோமா என்றால் அதுவும இல்லை. நம்மை அறியாமலேயே அந்த மதஉணர்ச்சி அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறது; மத நம்பிக்கை நம் உள்ளத்திலே ஆழமாகப் பதிந்திருக்கிறது. அரசியல் பிரசாரம் செய்யும் போது கூட நம் கொள்கைப் பகைவர்களைத் தாக்கிப் பேசும் போதும், நம கட்சியைச் சேர்ந்தவர்களைத் தூக்கிப்பேசும்போதும், புராண இதிகாசங்களில் வரும் பேர்வழிகளை எடுத்துக் காட்டாகக் கொண்டு பேசுகிறோமே தவிர வரலாற்று வீரர்களை எடுத்துக் காட்ட நினைப்பதில்லை. கடவுள் பக்தியோ, மதப்பற்றோ நமது பார்வையை, மத நோக்கத்தை மறைக்கக் கூடாது என்பதுதான் இப்படிச் சொல்லுவதன பொருளாகும். மதம், மனிதனுடைய சொந்தக்கருத்து என்று சொல்லப் படுவனவற்றுள்ளே ஒன்று. அதை அரசியலிலே கொண்டு வந்து கலந்து பேசுவதால் சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாகி விடுமே என்று தான் அஞ்சுகிறோம்.



மதத்தோடு பிணைந்து போயிருக்கும் இந்த மனப்பான்மை நமக்கு மட்டுந்தானா? இல்லை. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் இந்த மாதிரியான மனப்பானமை இருந்திருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தில் பதினாருவது நூற்ருண்டுவரை மதத்தின் செல்வாக்கு சமூகத்தின் ஒவ்வொரு துறையிலும பரவியிருந்தது. 'உலகம் உருண்டையாயிருக்கிறது' என்று சொன்ன கொலமபஸ் மத விரோதியாகக் கருதப்பட்டான். ஆனால் விஞ்ஞான வளர்ச்சி இந்தச் சமூகத்தின் எண்ணத்தை மாற்ற மடையச் செய்துவிட்டது.

நாகரிகம் வளர்ந்து வருகிறதென்று நாம் சொல்கிறோமே அதன் பொருள்தான் என்ன? மனிதன் ஒவ்வொரு துறையிலும் இயற்கையோடு போராடி அதை வெற்றி கொண்டுபயன் படுத்தும கட்டந்தான் நாகரிக வரலாற்றின் ஒவ்வொரு படியாகும். விஞ்ஞான அறிவுள்ள மனிதன் இயற்கையின் நடப்பை ஆராய்கிருன். அப்போது அவன் காணும் உண்மைகள் அவனை மதப பிடிப்பினின்றும் விடுதலையடைத் தூண்டுகின்றன. தன் எண்ணத்தைத் தளையிட்டு வைத்திருந்த மதத்தினின்றும் விடுதலை பெற்ற பின தான்பெற்ற உரிமையைப் பிறர் நலத்துக்குப் பயன்படுத்துவதைத தன் கடமையாகக் கொள்வதே உயர்ந்த மனிதனின தன்மையாகும. அந்த உயர்தன்மை யில்லாமல் ஏற்பட்ட எண்ண வளர்ச்சிதான் இன்று மேனுட்டாரை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டிய பாடம் ஒன்றுண்டு. மனித சமுதாயத்தின் ஒழுக்க வாழ்வு உயர வேண்டும் என்ற எண்ணம் நமக்கு வரவேண்டும். ஐநூறு ஆண்டுகட்கு முன்னுல் ஐரோப்பா கண்ட எண்ணப் புரட்சி வரவேண்டும். இப்படிச் சொல்லக் கூடிய நிலையில் நாம் இருபதாம் நூற்ருண்டில் இருக்கிறோம் என்ருல் நாம் எவ்வளவு விரைவாக முன்னேற வேண்டியிருக்கிறது என்பது புரியும்.

இந்த நிலையில் தெய்வத்திருவருளால்தான் நமக்குநலமுண்டாகும் என்ற நம்பிக்கையில் நமக்கு நம்பிக்கையில்லை. நமது முயற்சியில் தான் நமக்கு நல்வாழ்வுண்டு. அப்படி முயற்சி செய்வதற்கு முன சரியான அடிப்படைவேண்டும். அதுவே நமது எண்ணத்தில் உண்டாகவேண்டிய மாற்றம்; புரட்சி! ○

சந்தேகம்

ஒருவனைப் பற்றிச் சந்தேகப் பட்டால் வேலைக்கு அமர்த்திக் கொள்ளாதே! வேலைக்கு அமர்த்திக் கொள்வதென்ருல் அவனைப் பற்றிச் சந்தேகப் படாதே!

—கன்பூசியஸ்

தேரான் தெளிவும் தெளிந்
தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்

—குறள்

அனுதைகள்

ரா. வெங்கடசாமி

என் நண்பன், நெடுநாட்களுக்குப் பின் வந்து என்னைச் சந்தித்தான். அவனைப்பார்த்தவுடன் என் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. நீண்டநாட்களுக்குப் பின் வந்திருக்கிருன்; அதுவும் என்னைத் தேடிக் கொண்டு!— பழைய அன்பு மாருமல்!

"ஆள் மிகவும் இளைத்து விட்டாயே!" — என்றேன் பரிவோடு.

"அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை!"...என்ருன்.

"ஏன், நோய் ஏதாவது பலமாகப் பிடித்து விட்டதோ?"

"இல்லை."

"பிறகு!"

"ஒரு பெண்!"

நான் ஆச்சரியப்பட்டேன்!

"பெரிய விஷயங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்லு!" என்றேன் நான் ஆவலோடு.

"இல்லை! விஷயங்கள் கொஞ்சம் தான் — விவகாரம் தான் மிகவும் பெரியது. உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லுகிறேன். பசிக்கிறது, முதலில் ஏதாவது சாப்பிடவேண்டும். பிறகு நிறையப் பேசலாம்!" என்ருன்.

நான் மேலே பேசாமல், அறையின் கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு அவனுடன் ஹோட்டலை நோக்கிநடந்தேன்.

வயிறு நிறையச் சாப்பிட்டோம் — பிறகு கடற்கரையின் மணலில் போய் உட்கார்ந்தோம். கொஞ்சநேரம் அவன் மௌனமாய்க் கடலை வெறித்து நோக்கியபடி அமர்ந்திருந்தான்.

அவன் மௌனத்தை நான் கலைக்க விரும்பவில்லை. நானும் ஏதோ நினைத்துக் கொண்டே மணலில் ஒருக்கணித்துச் சாய்ந்து கொண்டிருந்தேன். திடீரென அவன் பேசத் தொடங்கினுன்.

"என்ருே ஒருநாள்......!"

அதோடு நின்று விட்டது அவன் பேச்சு.

என்ன? ஆரம்பித்தவன் உடனே நிறுத்தி விட்டான்?

"உம்! என்ருே ஒருநாள்...! என்ன நடந்தது சொல்லேன்? ஆரம்பித்து நிறுத்தி விட்டால் — — —"

அவன் பேசாமல் உட்கார்ந்திருந்தான்—மௌனம் அலுத்துப் போய் விட்டது எனக்கு.

கண்ணை மூடிக் கொண்டு நான் மணலில் படுத்தேன்.

கடலின் பேரிரைச்சல்தான் என் காதில் அடிக்கடி விழுந்து கொண்டிருந்தது. கண்விழித்த போதெல்லாம் — நண்பனையும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவனுடைய அந்த மோன நிலையின் காரணந்தான் எனக்கு விளங்கவில்லை.

மோனம், கலையட்டும் என்று நானும் காத்துக் கொண்டிருந் தேன, நன்ருக இருட்டும் வரை!

நிலை சலித்துப் போய் விட்டது.

"புறப்படலாமா?"

அவன் அசைந்து கொடுத் தான்.

"என்ன அதற்குள்ளாகவா? நான் சொல்ல வந்த விஷயத்தை ஆரம்பிக்கவே யில்லை.........!" என்று இழுத் தான்.

"நடு இரவு வரை நீ சொல்லப் போவதை நான் கேட்கத் துடித்துக் கொண்டிருக்கப் போவதில்லை. சொன்னல் இப் போதே சொல்லிவிடு, இல்லா விட்டால் ....!" நான அவனைப் பயமுறுத்தினேன்.

"இதோ ஆரம்பித்து விட் டேன். நடுவில் பேசாதே!" என்று தொடங்கினன் அவன்.

இதோ அவன் சொன்ன கதை!

அவன் சொன்ன அதே நடையில்!

O

"அவள் யார்?" என்று எனக்கு இன்று வரை தெரியாது. இருந்தாலும் அவள் மீது நான் கொண்ட காதல் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்தது.

என்றோ ஒருநாள் அவளை நான் கடைவீதியின், கடைசி யில் சந்தித்தேன்—அந்த முதல் நோக்கிலேயே நான் அவளிடம் உள்ளத்தைப் பறிகொடுத் தேன்.

அவளும் தன் கருவிழிகள்—ஆச்சரியத்தினல்—அகல என்னைப்பார்த்தாள்!

ஒரு கணந்தான் — பிறகு அவள் மேலே நடந்தாள்.

நான் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தேன்.

பக்கத்துச் சந்தில் அவள் சென்று திரும்புதற்குள், என்னை மூன்று, நான்கு தடவை திரும்பிப் பார்த்து விட்டாள்.

அந்தக் கண்களில் கவர்ச்சி இருந்தது.

என் அறையை நோக்கி நடந்தேன்.

எங்கள் அடுத்த சந்திப்பு இதே கடற்கரையில் தான். ஆம்! அது உனக்குத் தெரி யாது—தெரிந்திருக்கவேண்டிய அவசியமில்லை.

அன்று என்னைப் போலவே அவளும் — கடலை வெறித்து நோக்கியபடியே தனியாய் உட்கார்ந்திருந்தாள்.

கண்களின் கடையில் அவளை நோக்கியவாறே மேலே நடந் தேன். இரண்டடி தூரம் போயி ருப்பேன—மீண்டும் திரும்பிப் பார்க்கவேண்டும் என்ற எண் ணம் என்னில் தலை தூக்கியது. திரும்பினேன் அவள் என்னையே பார்த்துக் கொண்டி ருந்தாள்.

என்னையும் அறியாமல் "நீங்களா!" என்ற வார்த்தை வாயிலிருந்து வெளியே குதித்துவிட்டது.

"ஆம்!" என்ருள் அவள் தலையசைப்புடன். திரும்பி அவளருகு வந்தேன்.

"உட்காருங்கள்!" என்ற உபசரிப்பு.

அவளுக்குப் பக்கத்தில்—சிறிது தூரத்தில் அமர்ந்தேன்.

"உங்களை இரண்டு தினங்களுக்கு முன் கடைத்தெருவில் பார்த்ததாக ஞாபகம்........" பேச்சை அவளே தொடங்கி விட்டாள்.

"ஆமாம். அன்றுதான் நான் கூட உங்களை முதன முதலாகப் பார்த்தது!" இடையிலே இரண்டு பெரு மூச்சுகள். அதற்குமேல் பேச்சு ஓடவில்லை. நானாக மீண்டும் ஆரம்பித்தேன்.

"உங்கள் வீடு எந்தத் தெருவில் இருக்கிறது?"

"எனக்கென்று வீடு ஒன்றும் தனியாக இல்லை. ஒரு அறையில் இருக்கிறேன். அதுவும் வாடகை அறை!"

"என்ன, தனியாகவா, இவ்வளவு பெரிய நகரில்!"

"ஆமாம்! வேறென்ன செய்வது? இருந்தாக வேண்டும என்ற கட்டாயம் ஏற்படும் பொழுது — எதையும் செய்தாக வேண்டும் அல்லவா?"

"உங்கள் தாய் தந்தையர் எங்கு இருக்கிறார்கள்? மன்னிக்க வேண்டும. என்னையும அறியாமல் எனக்குத் தங்களிடம் எழுந்த ஒரு பாசமதான் இதைக் கேட்கத் தூண்டுகிறது" என்றேன்.

"எனக்கும் அதே நிலைதான். — தங்களைக்கண்டது முதல். இல்லாவிடில் தங்களிடம் இவ்வளவு தூரம் முகம் கொடுத்து நான் பேசியிருக்கமாட்டேன்!"

தலைகுனிந்து கொண்டு அவள் சொன்ன இந்த வார்த்தைகள் என்னை இன்ப புரிக்கு இட்டுச் சென்றன.

ஆம்! அவளும் என்னைக் காதலிக்கிறாள்!

நான் சற்று நகர்ந்து அவள் பக்கம் நெருங்கி உட்கார்ந்தேன்.

அதற்குப் பிறகு ஏதேதோ பேச்சுகள். வாத்தியாரம்மா வேலை அவளுக்கு என்று தெரிந்து கொணடேன்.

"நான் அனாதை!" என்றேன் அவளிடம்.

"என்னைப்போலத்தானா!" என்றாள் அவள். இரண்டு அனாதைகள் ஒன்று சேர்ந்து விட்டன.

○

அதற்குப் பின் எத்தனையோ தடவைகள் நான் அவளைக் கடற்கரையில் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

ஆனால் அவள் இருந்த அறைப்பக்கம் மட்டும் போனதேயில்லை. போகவும் முயற்சிக்கவில்லை. அவள்தான் தினமும் தவறாமல் கடற்கரைக்கு வந்துவிடுகிறாளே!

இரண்டு மூன்று நாள் புதுக் காதலர்கள் போல் நடந்து கொண்ட நாங்கள் — நாளடைவில் பழைய காதலர்கள் ஆகி விட்டோம.

ஆபீஸ் வேலை முடிந்தவுடன் நேராகக் கடற்கரைக்குச் சென்று விடுவேன் நான். எனக்காக அவள் அங்கு காத்துக்கொண்டிருப்பாள்.

ஒரு நாள் அவள் கடற் கரைக்கு வரவில்லை. ஏதாவது வேலையிருக்கும் என்று நான் நினைத்துக்கொண்டேன்.

மறுநாளும் வரவில்லை! "அவள் வராவிட்டால்......!" என்னவோ போலிருந்தது எனக்கு. அதற்குப் பிறகும் இரண்டு நாள்வரை காணோம்.

ஐந்தாம் நாள் வந்தாள்.

"உடம்பு சரியில்லை! மலேரியாக் காய்ச்சல் வந்து விட்டது. பக்கத்தில் உதவிக்கு ஆள் யாருமில்லை. நானே கஷ்டப்பட்டு எழுந்திருக்க வேண்டியதாயிற்று!" என்றாள் கலங்கிய கண்களுடன்.

நான் ஆறுதல் சொன்னேன்.

சிறிய இடைவெளிக்குப் பிறகு நாங்கள் மீண்டும் காதல் பாதையில் வேகமாக நடந்து கொண்டிருந்தோம்.

இந்தச் சமயத்திலெல்லாம் எனக்கு அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை. கல்யாணம் செய்துகொண்டிருந்தால் என் வாழ்க்கை வேறு விதமாகவல்லவா போய்க் கொண்டிருக்கும்!

ஆனால்!

அவையெல்லாம் இப்போது நடைபெற முடியாத விஷயங்களாகி விட்டன.

அவளுக்கு அடிக்கடி உடம்புக்கு ஏதாவது வந்துவிடும்—காய்ச்சல்—தலைவலி—வயிற்றுவலி—ஏதாவது ஒன்று.

சமய சந்தர்ப்பங்கள்

சந்தர்ப்பம் ஒரு மனிதனைத் திருடனாக்கி விடுகிறது.

—விக்டர் ஹூகோ.

∴

சமய சந்தர்ப்பங்கள் ஒரு மனிதனை வலியவனாகவோ, எளியவனாகவோ ஆக்குவதில்லை. ஆனால் அது அந்த மனிதன் எப்பேர்ப்பட்டவன் என்பதை மட்டும் எடுத்துக் காட்டத் தவறுவதில்லை.

—கெம்ப்ஸ்.

∴

சமயசந்தர்ப்பம் கோழைகளை அடக்கி ஆளும் வேந்தனாகிறது. அதே நேரத்தில் அறிஞர்களின் வேலையாளாக மாறுகிறது.

—சாமுவேல் லவ்வர்

∴

நல்ல சந்தர்ப்பம், கெட்ட சந்தர்ப்பம் என்று ஒன்றுமில்லை. அது நாம் செய்து கொள்வதைப் பொறுத்தது.

—ஸ்டீவன்சன்

ஒரு தடவை காய்ச்சல் வந்தது. டாக்டரிடம் மருந்து வாங்கிக் கொடுத்தேன். காய்ச்சல் குணமானதாகத் தெரியவில்லை. நாளுக்கு நாள் அவள் இளைத்துக் கொண்டே வந்தாள்—படுக்கையில் கூடத் திரும்பிப் படுக்க முடியாத அளவுக்கு ஆகிவிட்டது.

நானும் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு அவளருகே இருந்து வைத்தியம் செய்தேன்.

ஆனால்!!

என் நம்பிக்கை பயனற்றதாகி விட்டது.

ஆம்! அவள் இறந்து விட்டாள்.

அவள் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தைகள்—

"அன்பரே! என்னால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்? தயவு செய்து மன்னியுங்கள்"

"நீ சுகமாகி விட்டால் அதுவே எனக்குப் போதும்!" இதைக் கேட்க அவள் இந்த உலகத்திலேயே இல்லை, போய் விட்டாள்.

என் விஷயத்தில் அனுதாபப்பட்ட ஓரிருவருடன் அவள் சவத்தை அடக்கம் செய்துவிட்டு என் அறைக்குத் திரும்பினேன். அவள் போனபிறகு எனக்கு எதிலுமே பற்று ஏற்படவில்லை. வேலையைக் கூட ராஜினமா செய்து விட்டேன். எவ்விதக் குறிக்கோளும் இல்லாமல் என் வாழ்க்கை இப்போது போய்க்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் அவள்தான்.

O

என் நண்பன் பேச்சை நிறுத்தி விட்டான். அவன் என்னிடம் சொல்ல வேண்டியது அவ்வளவுதானே! பேச்சை நிறுத்தியவுடன் அவன் எழுந்து விட்டான். நானும் எழுந்தேன்.

அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.

நான் அவன் சொன்ன கதையிலேயே ஒன்றி விட்டேன், புற உலக சிந்தனை சிறிதும் இல்லாமல்.

அவன் பிரமை பிடித்தவன் போல் நடந்து கொண்டிருந்தான். இதற்கிடையில் பேச்சு எங்கிருந்து வரும்? அறையை அடைந்தோம். விளக்கை ஏற்றிவிட்டு நான் மேஜையருகில் அமர்ந்தேன்—கை பக்கத்திலிருந்த புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தது. அவன் என் படுக்கையில் படுத்திருந்தான்.

புத்தகத்தைப் படிக்க ஓடவில்லை; ஏட்டுக்குப்பின் ஏடு சென்று கொண்டிருந்ததே யொழிய மனம் நாடவில்லை. மணி பத்துக்குமேல் ஆகியிருந்தது. நண்பனைப் பார்த்தேன். நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

நானும் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தேன். எங்களைச் சுற்றிலும் இருள்! "பாவம் அவள்" என்று முணுமுணுத்தான் அவன்; தூக்கத்தில் புலம்பினான்.

காலையில் எழுந்தேன். பக்கத்தில் படுத்திருந்த அவனைக் காணவில்லை—வந்த மாதிரியே போய்விட்டான்!...

அமெரிக்கப் பத்திரிகைகள்

பட்டுக்கோட்டை செளரிராஜன்

[illegible] விளம் [illegible] ியாபா [illegible] வகளைத் [illegible] ந்து உலகத்தவர்களின் கவனத்தைக் கவரக்கூடிய பல்வேறு விஷயங்கள் உண்டு, தற்கால அமெரிக்காவில். அவற்றில் பத்திரிகைகள் முக்கியமானவை. பல முக்கியமான நகரங்களிலிருந்து வெளியாகும் செய்தித்தாள்களும் மற்ற இதழ்களும் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கினறன.

உடல் உழைப்பை எவ்வளவு குறைத்துக் கொள்ளக் கூடுமோ அந்த அளவுக்கு இயந்திர சாதனங்களைக் கண்டு அவற்றை ஏராளமான பொருட்செலவில் அமெரிக்கர் கையாண்டு வருவதால், அந் நாட்டைப் போல் இயந்திர அமைப்பு எந்நாட்டிலும் வளர்ந்திருக்கவில்லை. அதிலும் அச்சு இயந்திரங்கள் அமெரிக்காவில் ஆக்கமடைந்திருப்பதைப போல் மற்ற நாட்டில் இல்லை என்று சொல்லி விடலாம.

ஒவ்வொரு நாளும் வெளியாகும செய்தித் தாள்களை விரும்பிப் படிப்பது அமெரிக்கர்களின் இயற்கைப் பழக்கங்களில் ஒனருகும். அற்ப சம்பளம் பெறும் ஒரு ஏழைத் தொழிலாளிக்கும் தினசரி வாழ்க்கையில் செய்தித் தாள்கள்-இன்றியமையாத அவசியப் பொருளாகத் தேவைப்படும் அளவிற்குக் கல்வியறிவு அந்நாட்டில் பரவியிருக்கிறது. காலை நேரமாகவிருந்தாலும் சரி, இதர சமயங்களிலும் சரி சாதாரண மக்கள், மோட்டார் ரயில் இவற்றிற்காகக் காத்திருக்கும் இடங்கள், இன்னும சொந்த வீட்டு அறைகள், முதலிய விடங்களிலும தினத்தாள்களைப் படித்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.

அமெரிக்கர்களின உலகமே தினசரி வெளியாகும் செய்தித்தாள்களில்தான் அடங்கியிருக்கிறது.

அமெரிக்காவின் சமுக வாழ்வுக்குச் செய்தித் தாள்கள் முதுகெலும்பு போன்று விளங்குகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும், செய்தித்தாள்களும் மற்றமாத வார இதழ்களும் 2000க்குக் குறையாமல் இருக்கின்றன. 1943ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்குப்படி, மொத்தம் 44 000 000 சந்தாதார்களைக்கொண்ட 2026 செய்தித்தாள்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சாரசரி 3 நபருக்கு ஒருவர்வீதம் அமெரிக்கர்கள் பத்திரிகை வாங்குகிருர்கள்.

பத்திரிகைகளுக்கு எழுத்துச் சுதந்திரம் அமெரிக்காவில் இருப்பதுபோல் வேறு எந்த நாட்டிலும் கிடையாதென்றே

சொல்லலாம். செல்வாக்குப் பொருந்திய முதலாளிகளோ அல்லது கொள்ளை லாபம் சம்பாதிக்கும் தொழிற்சாலைகளோ தங்களுக்குச் சாதகமாக, அரசாங்க அலுவல்களில் ஆவன செய்ய முயற்சித்தாலும், அது சம்பந்தமாகச் சட்டசபை அங்கத்தினர்களைப் பயன்படுத்திக் கொண்டாலும், பத்திரிகைகள் கொஞ்சமும் தயங்காது அம்மாதிரி முயற்சிகளை அம்பலத்திற்குக் கொண்டுவந்து, அரசாங்க ஒழுங்கு தவருமல் பார்த்துக்கொள்ளும்.

அமெரிக்காவில் உள்ள தலை சிறந்த அறிவாளிகளில் பலர் பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுபவர்கள். இவ்வகையில் ஏராளமாகப் பணம் ஈட்டுபவர்களும் உண்டு.

அமெரிக்க நாகரிகத்தின் ஒளி, இருள், இரண்டையும் பத்திரிகைகளைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம்.

விளையாட்டு, பொழுதுபோக்கு, சமூகசம்பந்தமான நிகழ்ச்சிகள் — சுகாதாரம், —சத்துணவு—வைட்டமின் விபரம் — உடை யலங்காரம் — அழகிடும் சாதனங்கள் — சாப்பாட்டுப் பொருள்கள் — விஞ்ஞானம் — தோட்டவேலை — வீடு அலங்காரம் சங்கிதம், நாடகம், சினிமா, நாய், பூனை, கோழி வளர்ப்பு, போட்டோத் தொழில் — திருமணங்கள் — தபால் ஸ்டாம்புகள சேகரித்தல் — சீட்டாட்டம், சிறுகதைகள் — புத்தக விமர்சனம் — வேட்டையாடுதல், மீன்பிடிப்பு இவற்றிற்குத் தனிப்பகுதிகள் உண்டு பத்திரிகைகளில்.

ஞாயிறு தோறும் வெளியாகும் தினச் செய்தித் தாளகள் அதிகப் பக்கங் பேச்சைச டதாக விருக்கும். ஏான். அவன் மிகப்பெரிய தினசரி வேண்டிகையாகிய நியூயார்க்[illegible] என்ற தினத்தாளின் ஞாயிறு வெளியீடானது ஒரு பவுண்டுக்கு மேல் எடையுள்ளதாக விருக்கும். அதைப் போன்று எல்லாச் செய்திகளையும் கொண்ட பத்திரிகை உலகிலேயே இல்லை எனச் சொல்லலாம்.

தினத் தாள்களைப் போலவே மாத வாரப் பத்திரிகைகள் அமெரிக்காவில் ஏராளமாக உண்டு. அங்கு சராசரி ஏழையாக உள்ள குடும்பம் ஒரு மாதப்பத்திரிகை வீதமும், நடுத்தரப் பணக்காரக் குடும்பங்கள் மூன்று முதல் ஐந்து மாதப்பத்திரிகை வீதமும் படிக்கிருர்கள். 1943ம் ஆண்டு கணக்குப்படி அமெரிக்க ஐக்ய நாட்டில் மட்டும் 6,354 பத்திரிகைகள் வெளியாவதாகக் கணக்கு எடுக்கப் பட்டிருக்கிறது. பத்துலட்சம் சந்தாக்களையுடைய மாதப் பத்திரிகைகள் தற்சமயம் இருபது இருக்கின்றன. டைம் (*Time*) என்ற பத்திரிகைக்குப் பததுலட்சத்திற்கு மேல் சந்தாதார்கள் இருக்கிருர்கள்.

பத்திரிகைகளைப் போலவே, புத்தகங்களும் அமெரிக்காவில் ஏராளமாக வெளியிடப் படுகின்றன. சமீபத்தில் எடுத்த கணக்குப்படி ஆண்டுக்கு 225,000,000 புத்தகங்கள் விற்பனையாகின்றன. இது, மக்கள் எண்ணிக்கையைக் கொண்டு பார்த்தால் சராசரி நபர் ஒன்றுக்கு இரண்டு புத்தகம் வீதம் விற்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவரும்.

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN